THE STORY OF RAMA

IN TAMIL PROSE

FOR BOYS [illegible]

REWRITTEN BY

FRANCIS KINGSBURY, B. A.

NEW EDITION

1954

All Rights Reserved

Price Re. 1/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOTE ON THE AUTHOR

The Rev. Francis Kingsbury, B. A., (a son of the veteran Tamil Scholar, Rao Bahadur C. W. Tamotharam Pillai, B. A., B. L.) was

Professor of Tamil, United Theological College Bangalore, **1910—1919**

Additional Editor of The Tamil Lexicon University of Madras, 1924—1926

Lecturer in Tamil, Ceylon University College Colombo, **1926—1936**

Author of Several works in Tamil and English.

இராமன் கதை

சிறுவர் சிறுமியர்க்கு எழுதிய
தமிழ் வசனநூல்

இயற்றமிழ்ப் போதகாசிரியர்
கலைமாணி
பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி
வரைந்தது

கல்விநூற்கழகத்தினர் கருத்துப்படி புதுக்கிய பதிப்பு

முதல் அழுத்தம்

சாவகச்சேரி
இலங்காபிமானி அச்சியந்திரசாலை

ஜய ௵ ஆடி ௴

விலை ரூபா 1.

All Rights Reserved

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

தமிழில் வசனநடையில் உள்ள இராமாயண நூல்களிற் சில மிக விரிந்தவை; சில மிகச் சுருங்கியவை. மிக விரிக்காதும் மிகச் சுருக்காதும் மாணவர்க்குப் பயன்படுமாறு எழுதிய இந்நூல் மிகையாகாது என்பது என் கருத்து.

தமிழில் நூலாயினும் கட்டுரையாயினும் எழுதுவார் கூடியவரையிலும் இயற்சொற்களையே வழங்கல்வேண்டும் என்பது என் துணிபு. ஆயினும் அறிஞர்சிலர் மாணவர்க்கு எழுதும் நூல்களிற் திரிசொற்களும் திரிசொற்றொடர்களும வடசொற்களும் வடசொற்றொடர்களும் ஓரளவுக்கு வழங்கல் விரும்பத்தக்கது எனக் கருதுகின்றனர். என் கருத்தையும மறவாது அவர்கருத்தையுந் தள்ளாது எழுதியது இந்நூல். அன்றியும் மாணவர் தமிழ் இலக்கண நூல்களிற் கற்கும் விதிகளுக்கு இந்நூலில் உதாரணங்காட்டுவதும் என் நோக்கங் களிலொன்று. இவ்வாறு பல்வகை நோக்கங்களும் புகுந்தமையால் நூல்நடை இங்குமங்கும் வேறுபட்டன. நூல் முழுவதும் நடை வேறுபடாது ஒரே தன்மைத்தாயிருத்தல்வேண்டு மென்னும் என் துணிபை நினைப்பின், பலநடை விரவியுள்ள இந்நூல் குற்றமுடைத்து எனலாம். இக்குற்றத்தைப் பெரியோர் மன்னிக்க. இந்து தேசவாசிகளின் வாழ்க்கையும் மெய்ப்பாடும் இயங்குமாறு எவ்வாறு என அறிய விரும்புவார் இராமாயண பாரதக் கதைகளை ஆராய்ந்தறிதல் வேண்டுமென்பது அறிஞர் பலரது கொள்கை. புறநாட்டினர் இந்நூல்களைக் கற்று நமது குணகுணங்களை அறிய நாடுவரேல், நாம் நமது குணகுணங்களை அறிந்துகொள்வது எத்துணை அவசியமாம்.

பொருந்தியவிடங்களில் ஆன்றோர் செய்யுட்களும் பழமொழிகளும் சேர்க்கப்பட்டுள.

இலக்கியச்சொற்களேயன்றி உலகவழக்குச்சொற்கள் சில நுழைந்திருப்பதையும் கவனிக்க.

பழைய தமிழிலக்கண விதிகளுக்கு மாறானவற்றைப் 'புதியன புகுதல்' எனக் கொள்க.

பிற்சொல்லிய கதைக்கும் வால்மீகிராமாயணம் ...ணம் என்னும் நூல்களிற் சொல்லிய கதை தாரதம்மியத்தைப் பின்னுரையிற் காண்க.

Francis Kingsbury

கொழும்பு,
௵ ஜனவரி மீ 13 உ

குறிப்பு: கலைமாணி அழகசுந்தரனார் இயற்றிய 'இராமன் கதை', 'பாண்டவர்கதை' என்னும் புத்தகங்களை அங்கீகரித்துள்ள கல்விநூற் கழகத்தினர் (E. P. B.), இப்புத்தகங்களில், ஆளப்பட்டுள்ள புணர்ச்சிகள் சிலவற்றை மாற்றுமாறு கூறினர். அவர்கருத்துக்கு அமையுமாறு இப்புதிய பதிப்பிலே மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 'தாமரையிலையிற் நண்ணீர்', (பக்கம் 5) இல்லறத்திற் றுறவு பூண்டவர்' (பக்கம் 5) என்பன முறையே 'தாமரையிலையிற் றண்ணீர்' 'இல்லறத்திலே துறவுபூண்டவர்' என மாற்றப்பட்டுள்ளன.

இப்புணர்ச்சியினைப் புதியன புகுதலின்பாற்படுத்தி முதன்முதல் வழங்கியவர், இவர் தந்தையார், தமிழ்ப்பெருவள்ளல் திரு சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களேயாவர். அவர் பதிப்பித்த தொல்காப்பியம், இலக்கண விளக்கம், சூளாமணி வசனம் முதலிய நூல்களில் இவ்வழக்கினைக் காணலாம். உ-ம்: ஆதலாற் றம் உயர்வு, பரீக்ஷையிற் றேறி, அம்முதற்பொருளாற் றோன்றுதல்பற்றி, நிலமக்களுட் றலைமக்களும். "தந்தைசொன் மிக்க மந்திரம் இல்லை" என்பதற்கமைய இச்சந்தியை வழங்கிய ஆசிரியர் கருத்துக்குமாறாக இம்மாற்றங்களைச் செய்ததற்காக வருந்துகின்றோம். ஆசிரியரின் முன்னுரையினையும், பின்னுரையினையும் படிப்பவர்க்கு ஆசிரியர் உள்ளக்கிடக்கை இனிது விளங்கும். இவ்வாசிரியர் இயற்றிய பாடப்புத்தகங்களை உபயோகிப்பவர்களுக்கு எமது நன்றி.

1-8 1954.

பதிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	
1.	பிறப்பும் இளமையும்	
2.	இராமன் விசுவாமித்திரர் வேள்விகாத்தலும் சனகர் மகளை வேட்ட	
3.	பரசுராமனை வெல்லல் ; மந்திராலோசனை ... முதுவார் ...ணம்	
4.	மந்தரை கைகேயி	
5.	கைகேயி தசரதர்	1
6.	கைகேயி இராமர்	21
7.	கௌசலை இராமர்	22
8.	சுமித்திரை சீதை இராம இலக்குமணர்	2
9.	சித்திரகூடம்	2
10.	அயோத்தியில் நிகழ்ந்த சம்பவங்கள் ...	31
11.	வனவாசம்	3
12.	சூர்ப்பணகை	4
13.	இராவணன்	4
14.	மாரீசன்	4
15.	சீதை இரங்கல்	51
16.	இராமலக்குமணர்	54
17.	மதங்கமுனிவர் ஆச்சிரமம்	5
18.	வாலி வதம்	60
19.	சுக்கிரீவ பட்டாபிஷேகம்	65
20.	இலங்கை	67
21.	அனுமன்	69
22.	இராவணன் கொலு	75
23.	போர்	8
24.	விபீஷண கிரீடதாரணம்	8
25.	சீதை இராமர்	9
26.	தீ வீழ்தலைத் தடுத்தல்	9
27.	இராம பட்டாபிஷேகம்	9

இராமன் கதை

1. பிறப்பும் இளமையும்

ஆரியவர்த்தத்திலே கங்கையாற்றுக்கு வடக்கே உள்ளது கோசலை நாடு. அதற்கு இராசதானி அயோத்தி. அங்கே தசரதன் என்னும் வேந்தர் வேந்தன் பல்லாண்டு செங்கோல் செலுத்திவந்தான். அவன் அறங்கிடந்த நெஞ்சினன்; மன்னுயிரைத் தன்னுயிர்போல நேசிப்பவன்; கொடையிற் கற்பகத்தை வென்றவன்; பொய்க்குப் பகை; மெய்க்கு அணி; புகழுக்கு வாழ்வு.

இவனுக்கு மனைவியர் மூவர்: கௌசலை, கைகேயி, சுமித்திரை. இம்மூவரும் வெவ்வேறு நாட்டு இராச கன்னிகைகளாயினும் ஒருதாய்மக்கள்போல ஒருவர் பாலொருவர் அன்பு பாராட்டினதுமன்றி மூவரும் தசரதனைக் கண்ணுங் கவசமும்போலப் பேணி வந்தனர். இவர்களுள் பட்டத்தரசி கௌசலைக்குச் சாந்தையென்னும் மகள் பிறந்தாள். தமக்குப் பிள்ளையில்லாத உலோமபாதமுனிவர் சாந்தையைத் தமக்குப் பிள்ளையாய்த் தரும்படி தசரதனை வேண்ட, அவன் அவளை அவருக்குத் தத்தஞ்செய்துவிட்டான். உலோமபாதமுனிவர் தக்க காலத்திலே சாந்தையைக் கலைக்கோட்டுமகாமுனிவருக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்.

இது நிற்க, தசரதனுக்கு மூவர் மனைவியரிடத்தும் நால்வர் மைந்தர் தோன்றினர்: கௌசலை **இராமனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திய
1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.
11.
12.
13.
14.
15.
16.
17.
18.
19.
20.
21.
22.
23.
24.
25.
26.
27.

ஈன்றாள்; கைகேயி **பரதனைப்** பெற்றாள்; சுமித்திரை **இலக்குமணன் சத்துருக்கினன்** என்னும் இரட்டைப் பிள்ளைகளைப் பயந்தாள். மக்கள் நால்வரும் நல்லொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக, சுக்கிலபட்சத்துச் சோதியம்புலிபோல வளர்ந்துவந்தனர். பிள்ளைகள் மழலைமொழியாலும் பலவகை விளையாட்டினாலும் பெற்றோரைக் களிப்பித்தனர்.

ஏற்ற பருவம் வந்தபொழுது தசரதன் பிள்ளைகள் நால்வருக்கும் குலகுருவாகிய வசிஷ்டமுனிவரைக்கொண்டும், வேறு ஆசான்மாரைக்கொண்டும், சுருதி, ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களையும், வில்வித்தை முதலிய படைக்கலப்பயிற்சியையும், ஆனையேற்றம் குதிரையேற்றம் முதலிய அருஞ் செயல்களையுங் கற்பித்தான். பிள்ளைகள் தாய்தந்தையரும் குரவரும் வியந்து அதிசயிக்க எவ்வகைக் கல்வியிலும் தேர்ச்சியடைந்தனர். இவ்வாறு சென்றன சில்லாண்டு.

ஒருநாள் அரசன் அவைக்களத்தே விசுவாமித்திர மகாரிஷி தோன்றி, தாம் ஒரு யாகஞ் செய்யத் தொடங்கினதாகவும் தம்மை அவ்வியாகஞ் செய்யவிடாமல் விந்தியமலைக்குத் தெற்கே வாழும் ஒரு சாதியார் கறுத்த நிறத்தினர், சுருண்ட குஞ்சியர் பலர்* இடையிடையே புகுந்து தடைசெய்வ

தாகவும் தாம் செய்யும் யாகம் தடையின்றி இனிது முடியுமாறு தமக்கு உதவிசெய்யத் தசரன் தன்மகன் இராமனைத் தம்மோடு அனுப்பவேண்டுமென்றும் சொன்னார். இதைக்கேட்ட வேந்தன், "முனிபுங்கவ, தமது வேள்விக்குத் தடையொன்றும் வாராமல் காக்க நானே வருகின்றேன்" என்றான். விசுவாமித்திரர், "தசரதா, இச்சிறுகாரியத்துக்கு நீ உன் இராச்சியத்தைவிட்டு வருவானேன்? இராமனை அனுப்பினாற் போதும்" என்றார். அரசனோ "ஐய, இராமன் சிறுவன், அவனாலாகாது இக்காரியம். நானே வருகிறேன்" என, விசுவாமித்திரர்: "நீ வர வேண்டியதில்லை, இராமன் வந்தாற் போதும்; இராமனையே அனுப்பு" எனப் பின்னுங் கூறினர். இராமனை விட்டுப்பிரியத் தசரதனுக்கு மனமில்லையென்றுகண்ட வசிஷ்டர் அரசனைநோக்கி "வேந்தே, நீ உன் மகனை விசுவாமித்திரரோடு அனுப்பச் சிறிதும் அஞ்சாதே. இராமனுக்கு யாதொரு தீமையும் உறாவண்ணம் விசுவாமித்திரர் அவனைக் காப்பதுமன்றி அவனுக்குப் பல வித்தைகளையும் உபதேசிப்பார். இதனால் இராமனுக்கு நன்மையே வரும். இப்பொழுது இவர் கேட்டதுபோல இராமனை அனுப்பாவிடின் உனக்கும் உன்னிராச்சியத்துக்கும் மட்டுமன்று, இராமனுக்குந் தீமை விளையும், இது திண்ணம்" என்று புத்தி சொன்னார். உடனே இராமனை அழைத்து முனிவரோடு போகும்படி தசரதன் ஏவினான். இரட்டையரில் ஒருவனான இலக்குமணனும் இராமனோடு தானும் போகத் தனக்கு விடைதரும்படி அரசனை வேண்டினான். அரசன் அதற்கிசைந்து "நீயும் போகலாம்" என்றான்.

* இவர் தமிழரென்பதற்கு ஐயமில்லை. ஆரியப் புலவர் தமிழரை அரக்கரென்றும், வானரரென்றும், கரடிகளென்றும், கழுகுகளென்றும் இழித்துக் கூறினும் இதனால் தமிழருக்கு இழிவொன்றுமில்லை. விபீஷணன், அனுமன், சாம்பவன், சடாயு முதலியோரை அவரே புகழ்ந்து கூறியது கவனிக்கற்பாலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமலக்குமணர் தந்தையிடத்தும் தாய்மாரிடத்தும் விடைபெற்று விசுவாமித்திர முனிவரோடு கானகஞ் சென்றார்.

2. இராமன் விசுவாமித்திரர் வேள்விகாத்தலும் சனகர் மகளை வேட்டலும்

விசுவாமித்திரர் ஒரு காலத்தில் ஒரு நாட்டையாண்ட மன்னவர். ஒருநாள் வசிஷ்டருடைய ஆச்சிரமத்துக்குப் போனபொழுது அவருடைய தவவலிமையைக்கண்டு, "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் முதுமொழியினுண்மையை யுணர்ந்து தாமுந் துறவுபூண்டார். துறவுபூண்டவர் பல்லாண்டு பல கடுந்தவம் புரிந்து, பிறப்பில் க்ஷத்திரியராயினும் வசிஷ்டர் வாயினால் பிரமரிஷி எனப் போற்றப்பட்டார். இதனால் சாதியிலும் குணமே சிறந்தது என்பது வெளிப்படை.

விசுவாமித்திரர் அரசிளங்குமாரரிருவரையும் தம்மோடழைத்துச் சென்று அவர்களுக்குப் பல வித்தைகளைப் போதித்தார். அதன்பின்பு அவர், இராம லக்குமணர் காக்க, வேள்வியைத் தொடங்கி முடித்தார். வேள்வி நடந்தபொழுது தடைசெய்ய வந்த பலரை இவரிருவரும், புறங்கொடுத்தோ[illegible] செய்தார். தாடகை பெண்ணாயினும் ஆண்ம[illegible]களிலும் மிக அஞ்சாநெஞ்சும் திறமையும் [illegible]த்தவள். இப்படிப்பட்டவள் பெண்ணாயினும் இ[illegible]க்

கொல்லுதல் அறமேயன்றி மறமன்றென விசுவாமித்திரர் இராமனுக்கு வற்புறுத்த இராமன் கோதண்டமென்னும் தன் வில்லை வளைத்து அம்பு தொடுத்து அவளைக் கொன்றான்; அப்பொழுது அவளுக்குத் துணையாய் வந்த அவள் இளையமகன் சுபாகுவையும் கொன்றான். அவள் மூத்தமகன் மாரீசன் ஓடித்தப்பினான். விசுவாமித்திரர் வேள்வியை முடித்தபின் இராமலக்குமணரைப் பல காடுகளூடும் நாடுகளூடும் கொண்டுபோய் அவ்வவ்விடத்துப் பழங்கதைகளை அவர்களுக்கெடுத்தோதினார். ஈற்றில் விதேக நாட்டுக்கு இராசதானியான மிதிலைமாநகரத்தை மூவரும் அடைந்தார். விதேக நாட்டு மன்னவர் **சனகர்.** இவர் இராச கோலத்தோடு அரசியல் நடத்திவந்தாராயினும், இவர் நெஞ்சம் தாமரையிலையிற் றண்ணீர்போல உலகத்தாற் சிறிதும் கறைப்பட்டிலது. இவர் இல்லறத்திலே துறவுபூண்டவர்; கடவுளடி கனவிலும் மறவாதவர்;

**"எத்தொழிலைச் செய்திடினும் ஏதவத்தைப் பட்டிடினும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே"**

என்ற சொல்லிற்கு இலக்கானவர்.

இவருக்குச் **சீதை** என்னும் பெயருள்ள மகளொருத்தி யிருந்தாள். கடவுளுடைய திருவருளினாலே யிவருக்குக் கிடைத்த வில்லுமொன்றுண்டு. அவ்வில்லை வளைக்கும் ஆற்றலுடையானுக்கே சீதையை விவாகஞ்செய்துகொடுப்பதாக எண்ணியிருந்தார் சனகர். விசுவாமித்திரர் இராமலக்குமணர்களை வேத்தவையிற் கொடுவந்து அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றையும் திறமையையும் எடுத்துக்கூறி, சனகரது வில்லை இராமன் வளைப்பான் என்றார். சனகர் வில்லை எடுத்துவரும்படி ஏவலாளருக்குப் பணிக்க, வில்லைச் சபையிற் கொண்டுவந்தார்கள். விசுவாமித்திரர் இராமனுக்கு ஆசிகூறி "வில்லை வளைக்க" எனக் கட்டளையிட்டார். இராமன் வில்லையெடுத்து வளைக்க அஃது இரண்டு துண்டாக ஒடிந்து விழுந்தது. இவனே என் மகளுக்கு வாய்த்த கணவன் என உவந்தார் சனகர். உடனே தசரதனுக்கு நடந்ததையறிவிக்க ஓலை சென்றது. தசரதனும் இதைக் கேட்டவளவிலே உவகைக் கடலிற் படிந்தான். அவன், மனைவியர் மூவரும் பரத சத்துருக்கினரும் வசிஷ்டரும் மந்திரிமார் முதலியோரும் புடைசூழ மிதிலை வந்துசேர்ந்தான். சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே இராமனுக்கும் சீதைக்கும் விவாகம் நடந்தது. இராமன் இரகு வமிசத்திற் பிறந்தவனாகையால் இராகவனென்னும் பெயரும் பெறுவன். தசரதன் மகனாகையால் **தாசரதி**யென்பதும் அவன் பெயர். விதேகநாட்டாளாகிய சீதைக்கு **வைதேகி**யென்று பெயர். மிதிலைப் பட்டணத்திற் பிறந்ததால் **மைதிலி**யென்பதும் அவள் பெயர். சனகன் மகளாதலால் **சானகி**யென்பதும் அவள் பெயர்.

இராமனுக்கும் சீதைக்கும் விவாகம் நடந்த பொழுதே தம்பியர் மூவருக்கும் திருமணம் நிறைவேறின. இலக்குமணன் ஊர்மிளையை மணந்தான். பரதனும் சத்துருக்கினனும் குசத்துவன் மக்களிருவரை மணந்தனர். இன்னும் சிறிதுகாலம் மிதிலையிற்

கழித்தபின் தசரதன் மனைவியரும் மக்களும் தற்சூழ, பரிவாரம் முன்னும் பின்னும் செல்ல அயோத்திக்குப் புறப்பட்டான்.

3. பரசுராமனை வெல்லல்; மந்திராலோசனை

சமதக்கினி முனிவர் ஒரு பிராமண ரிஷி. அவரை ஒரு க்ஷத்திரியன் கொன்றான். அதனால் அவர் மகன் பரசுராமன் தன் தந்தையைக் கொன்றவனை மட்டுமல்ல க்ஷத்திரியரெல்லாரையும் பகைத்தான்; க்ஷத்திரியரை எங்கு காணினும் அவர்களைச் சண்டைக்கழைப்பான்; க்ஷத்திரிய குலத்தை வேரோடு களைவதே அவன்பூண்ட விரதம். தசரதன் குடும்பத்தோடு அயோத்திக்கு மீள்கையில் அவனை வழியிற் சந்தித்த பரசுராமன் இராமனைத் தன்னோடு சண்டைக்கு வரும்படி அழைத்தான். தன் கையில் வைத்திருந்த ஒரு வில்லை இராமனுக்குக் காட்டி, "இராமா, நீ சனகன் வில்லை ஒடித்துவிட்டாயென்று இறுமாப்புற்றாய். அது முன்னமே சிறிது ஒடிந்திருந்த வில், என் கையிலுள்ள இந்த வில்லை நீ வளைப்பையேல் வல்லவன்றான்; இல்லையேல் உன்னை மானபங்கஞ்செய்வேன்" என்று இடித்துக் கழறினான். இராமன் "நீ வேதியன், 'வேதியரோடமர்பொருது வென்றாலும் தோற்றாலும் வசையேயன்றோ' "ஆகலின் உன்னோடு அமர்செய்ய எனக்கு விருப்பமில்லை" என்றான். அதற்குப் பரசுராமன் "இப்படி ஞானவார்த்தைபேசித் தப்பித்துக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளலாமென் றெண்ணாதே. நீ என் வில்லை வளையா விடின் நான் உன்னை விடேன்" என்றான். இராமன் "நான் உன் வில்லை வளைத்து அம்பு தொடுப்பேனேல் அதற்குக் குறி யாது?" என வினவினன். பரசுராமன், "உன் அம்புக்கு நானே இலக்கு; என்னைக் கொல்லலாம்" என, இராமன் "பிராமணனைக் கொல்ல எனக்குப் பிரியமில்லை" என விடை பகர்ந்தான். பரசுராமன் "அப்படியாயின் இதுவரையிலும் நான் செய்த தவப்பயனெல்லாம் உனக்கேயாகுக" என இராமன் சம்மதித்துப் பரசுராமன் தந்த வில்லை வளைத்தான். அதுவும் சனகர் வில்லைப்போலவே ஒடிந்துபோயிற்று. பரசுராமன் வெட்கி, தன் தவப்பயனெல்லாமிழந்து இராமனிடம் விடைபெற்றுப் போய்விட்டான். பிறப்பிற் பிராமணரெல்லாம் பிராமணரோ?

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

அயோத்தியைத் தசரதனும் குடும்பத்தினரும் அடைந்து சில நாளாயினபின் பரதன் தன் தாய் மாமன் ஆளும் கேகயநாட்டைக் கண்டுவரும்படி போயினன். அவனுடன் சத்துருக்கினனும் சென்றான்.

தசரதன் சிலநாட்சென்றபின் தன் சபையிலே கொலுவீற்றிருந்தபொழுது, அங்கிருந்த வசிஷ்டரையும், மந்திரிமாரையும் பிறரையும் நோக்கி, "நான் அரசுபூண்டு அறுபது வருஷம் கழிந்தன. மூப்பால் வருந்துகின்றேன். இனி நான் அரசியலை விட்டு முத்திநெறி தேடல்வேண்டும். என்மகன்

இராமனுக்கு இவ்வரசியலைக் கொடுக்க எண்ணினேன். உங்கள் கருத்து யாது?" என்றான். சபையார் யாவரும் சிறிதுநேரம் வாளாவிருக்க, பின் வசிஷ்டர் பேசலுற்றார்: "சக்கரவர்த்தி, உன் சொல் எங்களெல்லாருக்கும் வருத்தத்தை விளைத்தது. உன் குடைக்கீழ் வாழ்ந்த எங்களில் யாருக்கேனும் ஒரு குறையிருந்ததுண்டோ? நாங்கள் யாவரேனும் உன் மனஞ்சலிக்க எவ்வகை மொழியுங் கூறினேமோ? இனி நீ முத்திநெறி தேடவேண்டுமென்றாய். மன்னுயிரைத் தன்னுயிர்போல் ஓம்பும் அரசனுக்கு முத்தி தானே கிட்டாதோ? முத்தியும் தேடவேண்டிய பொருளோ? ஆயினும் மூப்பால் வருந்துகின்றேனென்கிறாய்; அப்படியாயின் நீ வருந்தக் காண்பது எங்களுக்கழகன்று. நீ உன்னிஷ்டப்படி உன் அரசைத் துறக்கலாம். உன்மகன் இராமன் உன்னிடம் அரசுபெறுவதற்கு எவ்வகையினுமுரியவன். மக்கள் நால்வரில் அவனே மூத்தவன் என்பது மட்டுமல்ல, இயற்கையறிவிலும், கல்வியிலும், ஆற்றலிலும் சிறந்தவன், சகல கலியாணகுணங்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவன், தசரதன் மைந்தர் நால்வரும் தாசரதிகளே யாயினும், தாசரதி என்னும் பெயர் இராமனுக்கே காரண இடுகுறியாயிற்று. உனக்குப்பின் கோசல நாட்டை இராமனாள்வதே எங்களுக்குங் கருத்து".

சபையிலிருந்த மந்திரிமாரும் படைத்தலைவரும் மற்ற உத்தியோகஸ்தர்களும் பிறரும் "முனிவர் கூறியது ஒக்கும் ஒக்கும், இதுவே எங்கள்கருத்தும்" என்றார்கள். இச்சொல் அரசன் செவியில் நுழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் ஆனந்தபரவசனானான். சிறிதுநேரஞ் சென்றபின் ஏவலாளரை நோக்கி, "இராமனை அழைத்துவாருங்கள்" என்றான். அவர் சென்று இராமனைச் சபைக்கு அழைத்துவந்தனர். தசரதன் இராமனை மார்புறத்தழுவி, மகனே இராமசந்திரா, "நானும் இங்குள்ள சபையார் யாவரும் ஒரு விசேஷ காரியத்தைத் தீர்க்காலோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். அம்முடிவை உனக்கறிவிக்கவே இங்கு உன்னை அழைத்தோம்; நான் அரசு பூண்டு இன்று ஆண்டு அறுபது கழிந்தன; மூப்பால் வருந்துகின்றேன்; முன்போல் அரசியல் நடத்த எனக்கு வலியில்லை; ஆகவே நான் இவ்வரசியலைத் துறத்தல் வேண்டும்; எனக்குப்பின் கோசலநாட்டையாள உரிமையும் தகுதியுமுடையவன் நீயேயென்பது எங்களெல்லோருக்கும் ஏக அபிப்பிராயம்; மகனே. நாளைக்குச் சுபதினம், அதிலே உன்னை இராசனைக் முடிசூட்டக் கருதினோம்; உன் கருத்து என்னை?" எனக் கூறினான்.

இராமன் இன்றைக்கிதைக் கேட்பேனென்று சிறிதும் நினைத்தவனல்லன். மின்னுமல் இடியாமல் மழை பொழிந்ததுபோலத் தந்தைசொல் செவியில் நுழைந்ததும் தன்னை மறந்தான்; சபையையும் மறந்தான்; மரம்போலத் திகைத்து நின்றான். சிறிது நேரஞ் சென்று தன்புத்தி தனக்குவரவே சக்கரவர்த்தியையும் சபையையும் கைகூப்பி வணங்கிநின்று, "ஐயன்மீர்! என் கருத்து என்னையென்று என்னை வினவினீர். எனக்குங் கருத்தொன்றுண்டோ? எந்தையாரும் குருசிரேஷ்டரும் மந்திரிமாரும் மற்றச் சபையாரும் தீர்க்க ஆலோசித்து ஏக அபிப்பிராயங்

கொண்டு என்னை யழைத்து எனக்குக் கட்டளையிடும் பொழுது யான் செய்வது வேறொன்றுண்டோ? இவ்வரசியல் நடத்த நான் சிறிதுந் தகுதியற்றவனாயினும் கடவுள் திருவருளும் எந்தையாரின் புத்திமதியும் அவையாரின் தூண்டுதலும் எனக்கிருக்க என்னாலியன்றமட்டும் என்கடனைச் செய்வேன்" என்றான். இராமனது வினயத்தையும் கீழ்ப்படிதலையும் கண்ட வேந்தனும் அவையும் அவனை மெச்சினர். தசரதன், "மகனே, நாளைக்கு உனக்கு முடிசூட்டல்; மறவாதே" என்றான். இராமன் கௌசலைக்கும் சீதைக்கும் மற்றவருக்குஞ் சொல்ல அந்தப்புரம் புகினன். நாளைக்கு இராசபட்டாபிஷேகம் என்ற சொல், நகரம் முழுதும் பரம்பினது. உடனே தெருக்களையும் வீடுகளையும் அலங்கரிக்கத் தொடங்கினர். அயோத்தி முழுவதும் "நாளைக்கு இராமனுக்குப் பட்டாபிஷேகம்" என்ற ஒருசொல்லே எவர் வாயிலும் ஒலித்தது.

4 மந்தரை கைகேயி

கேகயநாட்டு இராசகுமாரி கைகேயி. இவளைத் தசரதன் மணந்து அயோத்திக்குக் கொண்டுவந்த பொழுது இவளோடு உடன்வளர்ந்தாளும் இவளது அடிமைப் பெண்ணுமாகிய மந்தரையும் தன் நாய்ச்சியுடன் அயோத்திக்கு வந்தாள். இவள் வடிவிற் கூனி; ஆகவே மந்தரையென்ற இயற்பெயர் இவளுக்கு வழங்காமல் கூனியென்ற பெயரே பெரும்பாலும் வழங்கினது. இவள் தன் நாய்ச்சிபால் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடையள்; நாய்ச்சியின் மகன் பரதனிடத்தும் பேரன்புடையள்.

'இராமனுக்கு நாளைக்குப் பட்டாபிஷேகம்' என்ற சொல் மந்தரைகாதில் விழுந்தது. இராமன் தனக்கு யாதொரு தீங்கும் செய்திலனேனும் கைகேயியிடத்தும் பரதனிடத்தும் இவளுக்கிருந்த பேரன்பு இவளைத் தூண்டவே இவள் எவ்வகையானும் இராமனுக்கு முடிசூட்டலைத் தடுத்துப் பரதனை முடிசூட்டுவிக்கவேண்டும் என்று தன் மனத்தில் உடனே தீர்மானித்தாள். தீர்மானித்தவுடனே கைகேயியின் அந்தப்புரம் சேர்ந்தாள். பள்ளியறையில் தன்னை மறந்து துயில்செய்யும் கைகேயியைப் பலமுறை கூப்பிட்டும் அவள் எழாததுகண்டு அவளைத் தட்டி எழுப்பினள். கைகேயி எழுந்து அரைத்துயிலுடன் "மந்தரை, என்னவிசேஷம்? ஏன் என்னை இப்படித் தட்டியெழுப்பினாய்?" என்று வினவ, வீடு தீப்பற்றியெரிகையில் நித்திரைகொள்ளுகிறவள் பைத்தியம் பிடித்தவள்" என்றாள் கூனி. "வீடு தீப்பற்றியெரியவில்லை; நீதான் பைத்தியக்காரி" என்றாள் கைகேயி. உடனே கூனி, "இராமனுக்கு நாளைக்குப் பட்டாபிஷேகமாம்; இதைச் சொல்லத்தான் உன்னை எழுப்பினேன்" எனப் பரதனிலும் பதின்மடங்கு இராமனைத் தன்மகனென்று காதலித்த கைகேயி ஆனந்தபரவசத்தளாய், கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றிக் கூனியின் கழுத்திலிட்டாள். கூனி கோபாவேசத்தளாய் மாலையையெடுத்துத் தரையிலே வீசியெறிந்து, "எனக்கு வேண்டா இந்தமாலை; நாளைக்கு இராமன் அரசனாகும்

போது கைகேயி கௌசலைக்கடிமையாவாள்; மந்தரை அடிமைக்கடிமையாவாள், இந்தச் சந்தோஷத்துக்கு மாலையும் வேண்டாவோ?" என்று சிரித்தாள். கைகேயி, "இராமன் என்மகன், பரதனிலும் நூறு மடங்கு நல்லவன்; இராமன் எனக்கு வலக்கண்; பரதன் எனக்கு இடக்கண்; நீ சொல்வதெல்லாம் விபரீதம்; இனியொன்றும் பேசாதே" என்றாள். மந்தரை பின்னும் உரத்துச் சிரித்து, "இஃதெல்லாம் நாளைக்குத் தெரியும். தசரதர் சிங்காசனத்திலிருக்கையில் கௌசலையும் இராமனும் உன்மேலும் பரதன்மேலும் மிகஅன்புள்ளவர்போல நடிக்கிறார்கள்; பேய்ச்சி நீ இதையெல்லாம் நம்புகிறாய்; நாளைக்கு இராமனுக்குப் பட்டாபிஷேகம் முடிந்தபின், தசரதர் தவஞ்செய்யக் காட்டுக்குப் போவர்; அப்போது உன் மகன் பரதன் படப்போகிற பாடு ஈசனுக்குத்தான் தெரியும்; நீ இருந்துபார்; நான் இன்றே சாகத்துணிந்தேன்" என்றாள். இதனைக்கேட்ட கைகேயி சிறிதுநேரம் வாளாவிருந்து பின் இவ்வாறு சொல்லுவாள்: "நீ சொல்வதில் எனக்கு நம்பிக்கையில்லை; ஒருவேளை உண்மையாயினும் இராமபட்டாபிஷேகத்தை நாம் எப்படித் தடுக்கமுடியும்? இராமன் நால்வருள் மூத்தவன்; சக்கரவர்த்திக்கு உயிர்; வசிஷ்டரும் மந்திரிமாரும் படைத்தலைவரும் இராமனை நேசிப்பவர்கள்; இவையன்றி, சக்கரவர்த்தி சொன்னசொல் மாறாதவர்; முடிசூட்டுவேனென்று இராமனுக்கு அவர் சொன்னபின்பு அதைத் தடுக்கத் தேவராலுமாகாது; மூவராலுமாகாது." கூனி பின்னுஞ்சிரித்து, "தேவராலும் மூவராலுமாகாததை மந்தரை செய்துமுடிப்பள்; ஆனால் என் புத்தியின்படி நீ நடவாவிடின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் செய்யக்கிடப்பது ஒன்றுமில்லை; என் சொற்படி நீ செய்தால் மூவுலகத்தையும் ஆட்டிவைப்பேன்" என்று ஆர்த்தனள். கைகேயி "நீ என்னையும் என் மகனையும் காக்கவந்த தெய்வம்; உன்சொல்லைக் கேளாமல் வேறார் சொல்லைக் கேட்பேன்?" என்றாள். "அப்படியானால் சொல்கிறேன்; கேள்" என உபதேசிக்கத் தொடங்கினாள் கூனி: "சக்கரவர்த்தி ஒருநாளும் பொய்சொல்லாதவரல்லரோ? கொடுத்த வாக்கைச் செய்தே தீர்ப்பவரல்லரோ? இராமனுக்கு வாக்குக் கொடுக்குமுன் உனக்கு இரண்டு வரங்கொடுப்பதாக உறுதிமொழி புகன்றுளார். அவ்விரண்டு வரத்தையும் முதலில் உனக்குத் தந்தபின் இராமனுக்குக் கொடுத்த வாக்கை மன்னவர் நிறைவேற்றலாம்" என்றாள். "எனக்கு எப்போது இரண்டு வரம் தருவதாக வேந்தர்வேந்தர் கூறினார்? எனக்கு நினைவில்லை" என்றாள் கைகேயி. "கௌசலையாலும் இராமனாலும் மயங்கின உனக்கு எது நினைவிருக்கும்? முன்னொருகாலம் தசரதச்சக்கரவர்த்தி மாற்றாரை எதிர்த்துப் போர்செய்யப் போனபொழுது நீயும் உடன்சென்றாய். தசரதருடைய தேர்ப்பாகனைப் பகைவர் அம்பால் வீழ்த்தியபோது உடனே நீ சாரதியாகித் தேரைச் செலுத்த, அரசர் பகைவரையெல்லாம் வென்றார். அப்பொழுது உவகைமேலிட்டவராய் நீ கேட்கும் இரண்டுவரம் எவையானாலும் தருவதாக உனக்கு உறுதிமொழி புகன்றார். நீ அவ்வரத்தை உடனே கேளாமல் வேண்டியபோது கேட்பதாகச் சொன்னாய். இப்போது போய், வரம் இரண்டையும் கேள்: முதல்வரம் பரதனைக் கோசலநாட்டுக்கு வேந்தனாக முடிசூட்டுதல்;

இரண்டாம்வரம் இராமன் நாடுதுறந்து பதினான்கு வருடம் வனவாசஞ்செய்தல். இவ்விரண்டும் தந்தே தீரவேண்டும் என்று உறுதியுடன் நில்; போ; உடனேசெய்; காலதாமதஞ் செய்யாதே; இன்னும் சிறிது நேரத்துக்குள் மகாராசா உன்னைத் தேடி வருவர்; அப்பொழுது காரியம் தீரவேண்டும்" என்று சொல்லிவிட்டுக் கூனி போய்விட்டாள்.

5. கைகேயி தசரதர்

இராமனது பட்டாபிஷேகத்துக்குச் செய்யவேண்டிய ஒழுங்கெல்லாம் செய்துமுடித்தபின் தசரதன் கைகேயிக்கு இதை அறிவிக்க அவளுடைய அந்தப்புரத்துக்குப் போனான். கைகேயியோ அங்கில்லை. இங்குமங்கு மவளைத்தேடி ஈற்றில் ஓர் அறையிலே ஆபரணங்களையெல்லாம் களைந்து எறிந்துவிட்டு, கூந்தல் விரிந்து தரையிலேபுரள, கைகேயி நிலத்திலே குப்புறப்படுத்துத் தேம்பித்தேம்பி யழுதுகொண்டிருக்கத் தசரதன் கண்டான். தன்னுயிர்க்காதலியை வருத்துவது யாதென்றறியாத தசரதன் ஓடிப்போய் அவள் அருகிலிருந்து "கண்ணே கைகேயி, உனக்கு என்ன நேரிட்டது? தேக அசௌக்கியமோ?" என்று உசாவினான். அவள் முன்னிலுமதிகம் தேம்பி யழுதாள். தசரதன் ஆயிரஞ்சொல்லியும் ஒன்றுக்கும் வாய்திறந்தாளில்லை. பின்னுமரசன்:

"கைகேயி, உன் குறையென்? அதையெனக்குத் தெரிவித்தால் எப்படியுந் தீர்ப்பேன்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகேயி, "போம், போம், உமக்கு என்மேல் மிகப்பிரியம் என்பது யாவருமறிவார், நீரதை இன்னு மொருமுறை சொல்லிக்காட்டவேண்டியதில்லை; உமக்குக் கௌசலையிருக்கக் கைகேயி ஏன்?" என்று கோவென் றலறினாள்.

"நீ சொல்லுவது எனக்கொன்றும் விளங்க வில்லை; எனக்கு என்னுயிரிலும் நீயே இனியை" என்றான் தசரதன்.

"நீர் சொல்வதுண்மையாயின் நான் கேட்பதை எனக்குத் தருவீரோ?" என்றாள் கைகேயி.

"இராமனாணை, நீ யெதைக்கேட்டாலும் உனக்குத் தருவேன்" என்று தசரதன் கூற,

கைகேயி சொல்லுவாள்: "முன்னே ஒருநாள் உமக்குச் சாரதியாக நான் தேரோட்ட நீர் உமது சத்துருக்களை வென்ற காலத்தில் எனக்கு இரண்டு வரம் தருவதாக நீர் வாக்குக்கொடுத்தது மறந்து போனீரோ?"

தசரதன், "நான் மறக்கவில்லை; நீ தான் இது காறும் ஒருவரமும் கேட்கவில்லை" என்றான்.

கைகேயி, "அவ்விரண்டுவரமும் இப்பொழுது நான் கேட்கிறேன்; 'மறாது தருவீரோ'?" என்றாள்.

"முன்னமே கொடுத்த வரத்தை இப்பொழுது எப்படி மறுப்பது? தசரதன் சொன்னசொல் மாறு முன்னே கிழக்கிலுதிக்கும் ஞாயிறு மேற்கிலுதிக்க

வேண்டும். ஞாயிறு மேற்கிலுதித்தாலும் தசரதன் சொன்னசொல் தவறான்" என்றான் அரசன்.

"இது சத்தியந்தானோ?"

"ஆம், இது சத்தியந்தான்."

"பின் மறுத்தால்?"

"மறேன்."

"உம் இராமனாணை?"

"என் இராமனாணை."

"அப்படியானாற் சொல்லுகிறேன்: கோசல நாட்டுக்கு மன்னனாக என்மகன் பரதனுக்கு முடி சூட்டவேண்டும்.

தசரதன், "என்னசொன்னாய்?"

கைகேயி, "நான் இன்னும் பேசிமுடியவில்லை; இப்பொழுது கேட்டது முதல்வரம்; இதன்படி கோசலநாட்டுக்கு மன்னனாவான் பரதனே. நான் கேட்கும் இரண்டாம்வரம், இராமன் நாளைக்கே அயோத்தியை விட்டுப்போய் பதினாலுவருஷம் வனவாசம் செய்தல்வேண்டும். இவ்விரண்டு வரங்களையும் நீர் எனக்குக் கொடுத்தால் நீர் சத்தியவந்தரே; இல்லை யென்றால் தசரதரும் சொன்னசொல் மாறுகிறவரே" என்றாள்.

உடனே தசரதன், "இராமனை நாளைக்கு முடி சூட்டுவதாக அவனுக்குச் சொல்லிவிட்டேன்; சொன்னசொல்லைத் தசரதன் மாற்றுவதில்லை" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானால் மகாராசா எனக்குச் சொன்ன சொல்லைத்தான் மாற்றிவிட்டார்; என்றும் பொய்யாதவர் பொய்த்தார்!" என்று நகைத்தாள் கைகேயி.

அரசன், "பெண்ணே, ஆத்திரப்படாதே; நிதானித்துப்பார்; மைந்தர் நால்வருள் இராமனே மூத்தவன்; பட்டத்துக்குரியவன் அவனே; உரிமை மட்டுமன்று, தகுதியுமுடையான். இம்மட்டோ, வசிஷ்ட முனிவரும் மந்திரிமாரும் படைத்தலைவரும் சபையார் எல்லாரும் இராமனையே முடிசூட்டல் வேண்டுமென்று தீர்மானித்து, அதை அவனுக்கு அறிவித்துவிட்டார். நான் மாறினாலும் என் சபையார் மாறுவாரோ? வசிஷ்டர் என்ன சொல்லுவார்? நாம் எல்லேமும் சம்மதித்தாலும் பரதன் சம்மதிப்பானோ?" என்றான்.

அதற்கு "இந்தச் சாதுரியமெல்லாம் எனக்குத் தெரியாது; நான் கேட்ட வரங்கள் கொடுக்க உமக்கிஷ்டமில்லையேல் இஷ்டமில்லையென்று சொல்லும். அதை விட்டுவிட்டு, 'பரதன் சம்மதியான்; வசிஷ்டர் என்னசொல்லுவார்' என்ற நீண்ட கதைகள் எனக்கு வேண்டா. 'தசரதர் பொய்க்குப் பகை; மெய்க்கு அணி; புகழுக்கு வாழ்வு' என்ற பேச்செல்லாம் வெறும்பேச்சு; தசரதர் அரிச்சந்திரன் மரபில் வந்தவராம்!" என்று பரிகசித்தாள்.

தசரதன், "நான் இராமனுக்குச் சொன்னது சொன்னதே" என்றான்.

கைகேயி, "இராமனுக்குச் சொன்னது இன்றைக்கு; எனக்கு வாக்குக்கொடுத்தது முப்பது வருஷத்துக்குமுன். முன் சண்டையிலே சாகாமல்

உம்முயிரைக் காத்த எனக்குச் சொன்ன வாக்கோ, இன்றைக்குக் கௌசலைமகனுக்குச் சொன்ன வாக்கோ, எதை முதலில் நிறைவேற்றவேண்டும்? பேசியென்ன பிரயோசனம்? பொய்த்த மனுஷன் பொய்யன் தானே" என்றாள்.

இதைக்கேட்ட தசரதன், "கைகேயி, இந்த இரண்டு வரத்தையும் விட்டு வேறு எந்த இரண்டு வரமாகுதல் கேள்; நான் தருவேன்" என்றான்.

"தம்முயி ரிராமன்மே லாணையிட்ட இரண்டு வரமும் இராசா தந்துவிட்டார்! இனிக் கௌசலைமே லாணையிடுவார்போலும்! வேண்டா, வேண்டா; நான் இனி வேறுவரங் கேட்பதில்லை; பொய்த்தார் அயோத்தி மன்னவர்; பரதனை முடிசூட்டவேண்டும்; இராமனைப் பதினான்கு வருஷம் காட்டுக்கனுப்ப வேண்டும்; இஷ்டமில்லையென்றால் இஷ்டமில்லையென்று சொல்லும்." என்றாள் கைகேயி.

இதைக்கேட்டவுடனே தசரதன், அறிவுகெட்டு மூர்ச்சித்துச் சிறிதுநேரம் மரம்போலக் கிடந்தான். மூர்ச்சை தெளிந்தபின், "கைகேயி! உன்னிஷ்டப்படியே பரதனை முடிசூட்டலாம்; இரண்டாம் வரத்தைமட்டும் கேளாமல் விட்டுவிடு" என்று அவள் காலில் தன்முடியை வைத்து இரந்தான்.

"கிழடனுக்கு மாயமாலமெல்லாம் தெரியும்; என்காலில் விழவேண்டா; கௌசலைகாலிற் போய் விழும்" என்று சீறினாள் கைகேயி.

"நான் செய்வது மாயமாலமன்று; இராமன் என்னுயிர்; இராமனைப் பிரிந்தால் என்னுயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விடும்; எனக்கு உயிர்ப்பிச்சை தா" என்று கெஞ்சினுன் தசரதன்.

"இராமனைப் பிரிந்தால் உயிர் போய்விடுமோ? இராமன் விசுவாமித்திரரோடு போனபோது நீர் செத்துப்போனீரோ? அப்போது சாகாத உயிர் இப்போது சாகுமோ? செத்தாற் முனென்ன? வயது எண்பதானது உமக்கு; இன்னும் எத்தனை வருஷம் நீர் உலகத்திலிருக்க வேண்டும்?" என்று சிரித்தாள்.

"பாதகி, நான் செத்தால் உன் மங்கிலியம் போய்விடுமல்லவோ? 'கைம்பெண்கைகேயி' யென்று உலகம் உன்னை ஏசுமல்லவோ?" என்முன் அரசன்.

"என் மங்கிலியத்தைக் காக்கத்தான் இராசா உயிரோடிருக்கவேண்டுமாம்; இராசா உயிரோடிருக்க இராமன் அயோத்தியிலிருக்கவேண்டுமாம்; போதும் போதும், கதை; இராமன் நாளைக்கு அயோத்தியைவிட்டுப் போகவேண்டும்; அஃதில்லையேல் கைகேயி நஞ்சுதின்று சாவாள்." என்முள் கைகேயி.

இதைக்கேட்டவுடனே "இனி உன்னிஷ்டம்; இராமனை அழைப்பி; இனி நீ எனக்கு மனைவியல்லை; பரதன் எனக்கு மகனுமல்லன்" என்று சொல்லித் தசரதன் பின்னும் மூர்ச்சித்தான்.

இராமனையழைத்துவர ஏவலாளர் போயினர். தந்தையார் தன்னையழைக்கிருர் என்று கேள்விப்பட்ட இராமன் விரைந்துவந்து கைகேயியந்தப்புரம் சேர்ந்தான்.

6. கைகேயி இராமர்

அந்தப்புரத்தினுள் வந்த இராமன் தன் தந்தை மூர்ச்சித்துத் தரையிற் கிடப்பதையும் கைகேயி அருகில் வாளாவிருப்பதையும் கண்டு, "ஐயோ! ஐயோ!! மகாராசா இப்படித் தரையில் மூர்ச்சித்துக் கிடப்பதற்குக் காரணம் யாது?" என வினவ, கைகேயி, "ஏனே அறியேன்; இன்றைக்குப் பலமுறை யிவ்வாறு மூர்ச்சித்தார்; இன்னுஞ் சிறிது நேரத்துள் மயக்கந்தீர்ந்துவிடும்" என்முள். இராமன், "மகாராசா என்னை அழைத்தாராமே, காரணந் தெரியுமோ?" என்முன். கைகேயி, "ஆம் தெரியும்; மகாராசா கோசலநாட்டுக்கு மன்னனுகப் பரதனை நாளைக்கு முடிசூட்டத் தீர்மானித்துவிட்டார்; இதுவுமன்றி, நீ நாளைக்கே அயோத்தியைவிட்டு ஈரேழாண்டு வனவாசம் செய்யவேண்டும் என்று உனக்குக் கட்டளையிடுகிருர்; இஃது என் கட்டளையன்று; உன் தந்தையார் கட்டளை" என, இராமன் கூறுவான்:

"மன்னவன் பணியன் முகில்
நும்பணி மறுப்ப னே? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றே?
என்னினி உறுதி இப்பால்?
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னவிர் கானம் இன்றே
போகின்றேன், விடையுங் கொண்டேன்."

உடனே இராமன் தந்தையின் பாதத்தில்விழுந்து நமஸ்கரித்து எழுந்து, கைகேயிக்குத் தெண்டனிட்டுப் புறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 கௌசலை இராமர்

இதைத் தாய்க்கும் சீதைக்கும் சொல்லும்படி கௌசலை கோயிலுட் புகுந்தான் இராமன்.

குழைக்கின்ற கவரி யின்றிக்
கொற்றவெண் குடையு மின்றி,
இழைக்கின்ற விதிமுன் செல்லத்
தருமம்பின் னிரங்கி யேங்க,
மழைக்குன்ற மனையான் மௌலி
கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள்
முன்னொரு தமியன் சென்றான்.

இவ்வாறு வந்தமகனைக் கௌசலை கண்டு, மகனே! நீ இப்படி வருவது என்ன காரணம்பற்றியோ?" என்றாள். இராமன், "அம்மா, மகாராசா என்மேல் மிக அன்பு வைத்துள்ளார்; ஆதலால் என் தம்பி பரதனைக் கோசலநாட்டு மன்னனாக நாளைக்கு முடி-சூட்டுவார்" என்றான். இதைக்கேட்ட கௌசலை சிறிதும் மனங்கோணாமல், "சந்தோஷம், சந்தோஷம், நீயாண்டாலென்ன? உன் தம்பி பரதனாண்டாலென்ன? ஒன்றுமெய்: பரதன் உன்னிலும் நல்லவன்; மகாராசா செய்தது சரி; மெத்தச்சரி; நீ இதற்கு வருந்துதல் தகாது" என்றாள். உடனே இராமன், "அம்மா, இவ்விஷயத்தில் நானும் உளங்களிக்கின்றேனேயன்றி மனஞ் சிறிதும் வருந்திலேன்; நான் வேறு பரதன் வேறு என்று நான் கனவிலும் எண்ணினதில்லை. பரதன் என்னிலும் நல்லவனென்பது எனக்குப் பாலியமுதற்

றெரியும். பலவருஷங்களுக்கு முன்னே நாங்கள் நால்வேமும் தலைவாசலிலிருந்து அவல் தின்று கொண்டிருந்தோம்; ஓர் ஏழை மிகப் பசித்துவந்து தன் பசிதீர யாதேனும் தரும்படி எங்களிடம் இரந்தான். நானும் இலட்சுமண சத்துருக்கினரும், 'எங்களிடத்திலொன்றுமில்லை; போ, போ' என்றோம்; பரதனோ தன் மடியிலிருந்த அவல் முழுவதையுமெடுத்து இரவலனுக்குக் கொடுத்துவிட்டான்; எங்கள் நால்வேமுள்ளும் பரதனே நல்லவனென்பது அன்றுமுதல் எனக்குத் தெரியும். அன்றியும், இராச்சியபாரந் தாங்குதல் எனக்கு எளிதன்று; அவ்வருத்தத்தினின்றும் மகாராசா என்னை நீக்கினது பேரருளே" என்றான். "நீ சொன்னதெல்லாஞ் சரி" என்றாள் கௌசலை. இராமன்: "நான் சொல்லவேண்டிய விஷயம் இன்னுமொன்றுண்டு; மகாராசா எனக்கும் ஒரு கட்டளை விதித்திருக்கிறார்: நான் இன்றே கோசல நாட்டைக் கடந்து பதினான்குவருஷம் மரவுரிதரித்துத் தவஞ்செய்தல் வேண்டும் என்பதே." இச்சொல் காய்ச்சின நாராசம்போல கௌசலை செவியிற் புகுந்தது. "இஃதென்ன அநியாயம்! இஃதென்ன விபரீதம்! இஃதென்ன கொடுமை?! உன்னை நாட்டைவிட்டுத் துரத்த நீ என்ன அக்கிரமஞ் செய்தாய்? கிழவனுக்குப் பைத்தியம் பிடித்தது போலும்" என்றாள் கௌசலை. உடனே இராமன், "அம்மா! இப்படிப் பேசவேண்டா; பைத்தியம் பிடித்தது இராசாவையல்ல, உங்களைத்தான். மகன்மேலுள்ள பைத்தியத்தால் மகாராசாவையும் இகழத்தொடங்கினது உங்கள் வாய்; 'அநியாயம்' 'விபரீதம்'

'கொடுமை' என இப்படிப்பட்ட சொற்களால்பத்தினி யொருத்தி கணவனை இகழ்வாளோ? என்தங்கையை இவ்வாறு வேறொருவர்பேச நான் கேட்பேனோ? என் சிற்றன்னை கைகேயிசெய்த குற்றந்தானென்னே? உங்கள் இயற்கைப்புத்தியும் கணவன்மேற்பத்தியும் தங்கைமேலன்பும் எங்கே போயின? ஐயையோ! இதையெல்லாம் உங்கள்வாயிற் கேட்க என்ன பாவஞ் செய்தேனோ நான்?" என்று கலங்கினான். உடனே கௌசலை, "மகனே! நான் நினைத்தவை பேசினவையெல்லாம் பிழை; நீ இப்பிழையை மன்னிக்கவேண்டும். ஆனால் ஒன்று சொல்லுகிறேன், கேள்: நானும் இன்றே உன்னோடு காட்டுக்கு வருகிறேன்" என்றாள். இராமன்: "அம்மா, மகாராசா மூர்ச்சித்துத் தரையிலே விழுந்துகிடக்கக் கண்டேன்; உங்கள் கடமை உடனே அவரிடஞ் சென்று அவருக்குச் செய்யவேண்டிய சிகிச்சையெல்லாஞ் செய்து அவரை யாற்றித்தேற்றுவதே. இத்தனையாண்டு கணவனுக்கு ஏவல் செய்துவந்த நீங்கள் இன்னுஞ் சிறிதுகாலம் அவரோடிருந்து அவருக்கேவல் புரிவதே உங்கள் கடன். நான் சிறியனுமல்லேன்; மூப்படைந்தேனுமல்லேன்; என்னைக் காத்துக்கொள்ள என்னாலாகும்; நீங்கள் என்னோடுவர அவசியமில்லை; உடனே மகாராசாவிடம் போங்கள்; எனக்கு விடைதாருங்கள்" என்றான். கௌசலை இராமனுக்கு விடைகொடுத்துத் தசரதன்பாற் போயினள்.

8. சுமித்திரை சீதை இராம இலக்குமணர்

தாயிடம் விடைபெற்ற இராமன் சீதைபாற்சென்று நடந்ததையெல்லாம் அவளுக்கறிவித்தான். அதற்குச் சீதை, "எந்தையார் சனகர் இல்லறம் நீங்காமலே துறவு பூண்டவர்; நான் அவர்மகள்; நுந்தையார் நுமது தம்பியார் பரதருக்கு முடிசூட்டினால் நான் வருந்துவேனோ? நீர் பதினான்குவருஷம் வனவாசம் செய்வது என்னை வருத்துமோ? இவையெல்லாம் ஈசன் செயல். நானும் மரவுரிதரித்து உம்மோடு கானகஞ்சேர்வதே பத்தினியென் கடன்" எனப் புகன்றாள். இம்மொழிகேட்ட இராமன், "சானகி, நீ சொல்வதின் பொருள் உனக்குத் தெரியுமோ? காட்டில் நீ எப்பொழுதாவது வசித்ததுண்டோ? அங்கே வாழும் மக்கள் எப்படிப்பட்டவர்? நீ என்னுடன் வந்து நான்வாழும் வாழ்விற் பங்குபெற வல்லையோ? அங்கு நேரிடும் வருத்தமெல்லாந் தாங்குவாயோ? இவற்றுளொன்றையும் ஆராயாமல் துணிந்த உன் துணிபென்னே?" என்றான். அதற்குச் சீதை, "இரகுகுலோத்தமரே! நீர் கூறியதொவ்வொன்றையும் நான் தனித்தனி யாராயவில்லையென்பது மெய்தான்; முன்னே நான் காட்டில் வசித்தவளல்லள்; காடென்பது எனக்குத் தெரியாது; ஆயினும் பெண்ணாய்ப்பிறந்த நான் ஒன்று அறிவேன்; ஆடவராகிய நீர் அதையறியீர்; பதினான்குவருஷம் உம்முடன் காட்டில் வாழ்ந்து உடலை வருத்துஞ் சில வருத்தங்களை யனுபவிப்பதோ அல்லது பதினான்கு வருஷம் உம்மைப் பிரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு என்ன நேரிட்டதோ, நீர் எங்குற்றீரோ என்பனவற்றில் ஒன்றுமறியாது ஆவியிலே துயருறுவதோ எது பெரும் வருத்தம்? இதை நீர் யோசித்தீராயின் நான் வருவதற்குத் தடையொன்றுங் கூறீர்; அன்றியும், 'சுகத்திலும் துக்கத்திலும் வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் உன்னைப் பிரியேன்' என்று நீர் சொன்னசொல் இவ்வளவு சீக்கிரம் மறந்தீரோ? நான் உம்முடன் வருவது திண்ணம்; வேறு பேசுவதிற் பயனில்லை" என்றாள். "உன்னெண்ணம் இஃதாயின் நீ வா" என்றான் இராமன்.

பின் சுமித்திரையின் அந்தப்புரத்திற்கு இராமன் போனான். நிகழ்ந்தனவற்றையெல்லாம் அங்கேயவளுக்கு இராமன் கூற, அருகிற் கேட்டுக்கொண்டிருந்த இலக்குமணன் "ஓகோ இப்படியா காரியம்? இலக்குமணனொருவன் இங்கிருக்கிறானென்பதை எல்லாரும் மறந்தார்போலும்! பரதன் முடிசூட்டப்படுவதில்லை; இராமன் காட்டுக்குப் போவதுமில்லை; இராமனுக்கு நாளை நானே முடிசூட்டுவேன்; என்னைத் தடுக்க வல்லவரெல்லாரும் ஒருங்குசேர்ந்து வரலாம்; இதை நாளைக்குப் பாருங்கள்" என்று சீறிச்சினந்து, பிரளயகாலத்து வடவாமுகாக்கினிபோல விளங்கினான். அதைக் கண்ட இராமன் "இலக்குமணா, உன் சகோதர சிநேகத்தை மெச்சினேன்; நீ சொல்லியதைச் செய்ய வல்லவனென்பதிலும் எனக்கையமின்று; ஆயினும் ஒருகாரியத்தை மறந்தாய்நீ. பரதனுக்கு முடிசூட்டுவதற்கும் காட்டுக்கு நான்போவதற்கும்

நான் சம்மதித்து வாக்குக்கொடுத்துவிட்டேன்; பிதிர்வாக்கிய பரிபாலனஞ்செய்யப் பிறந்தான் இராமன் என்னும் ஒரு சொல்லே நான் நாடுவது. அயோத்திக்கு மன்னனாக முடிசூட்டப்படுவதைப் பெரிதென்று நான் மதித்தேனல்லேன். ஆகவே நீ வேறென்ன செய்யினும் என்மனத்தையும் மாற்ற வல்லாயோ?" என்றான். உடனே இலக்குமணன், கண்களில் நீர் சொரிய இராமன் அடியில் விழுந்து "அண்ணா! நீங்கள் இப்படிச் சொல்லின் நான் வேறென் செய்வேன்? பதினான்கு வருஷமும் நானும் உங்களோடுவந்து உங்களுக்குத் தொண்டுசெய்வதே என் பிறப்பின்பேறு" என்று அழுதான். விசனத்திலாழ்ந்த தம்பியை இராமன் கையினாலே தூக்கியெடுத்து "மகாராசா என்னைக் காட்டுக்குப் போகச் சொன்னாரேயன்றி, உன்னையும் போகச் சொல்லவில்லை; நீ இங்கிருந்து இங்குள்ளார் யாவரையும் ஆதரி" என, இலக்குமணன், "முன்னே விசுவாமித்திரர் வந்து உங்களை அழைத்தபோது என்னையும் அழைத்தாரோ? அழையாவிடினும் நானும் உங்களுடன்வர மகாராசா சம்மதித்தாரே; அப்படியே இப்பொழுதும் மகாராசாவிடஞ் சென்று நான் அனுமதிகேட்க இது சமயமன்று; இங்கு அருகில் என் தாயார் இருக்கிறார்கள்; அவர்கள் சம்மதம் பெற்றுக்கொண்டு நானும் காட்டுக்கு வருகிறேன்" என்றான். இதைக்கேட்ட சுமித்திரை "மகனே இலக்குமணா! நீ சொல்வது சரி, உன்னிஷ்டப்படி செய்; நீ போகவில்லை காட்டுக்கு; இராமனிருக்குமிடமே அயோத்தி; பதினான்குவருஷம் நீ இராமனோடு அயோத்தியிலிருப்பாய்; இராமனில்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோத்தியே காடு; நாங்களே பதினாலுவருஷம் காட்டிலிருக்கப்போகிறோம். இலக்குமணா, இராமனை உன்னண்ணனென்றெண்ணாதே; உன்னாண்டவன் அவன்; அவனே தசரதச்சக்கரவர்த்தி. சீதையை உன் மைத்துனி யென்றெண்ணாதே; அவளே உன் தாய்; கௌசலை கைகேயி சுமித்திரை மூவரும் ஓர் உருளெடுத்துவந்தால் அவ்வுருவே சீதையென்று நினை; நீ இராமனுக்குத் தம்பியல்லை; அவன் அடிமை. நீயும் நானும் செய்த புண்ணியத்தாலன்றோ உனக்கு இப்பேறு வந்தது! ஊர்மிளையை விட்டுப்போவதற்கு வருந்தாதே; என் கண்மணி போல அவளை நான் காப்பேன். அவளும் எனக்கு உதவி செய்வாள். எல்லாம்வல்ல ஈசன் உன்னை ஆசீர்வதிக்க" என்றாள். இதைக்கேட்ட இராமன் "கௌசலை என்னைப்பெற்ற தாயார்; கைகேயி என்னை வளர்த்த தாயார்; சுமித்திரை என்னைக் காக்குந் தெய்வம்" என்று அவளை வழிபட்டு விடை பெற்றபின், இராமன் சீதை இலக்குமணன் மூவரும் தம்முடையைக் களைந்து மரவுரிதரித்து, சுமந்திரன் கங்கைக்கரை வரையிலும் வழிகாட்ட, அயோத்தியை விட்டுப் புறப்பட்டனர்.

"சீரை சுற்றித் திருமகள் பின்செல,
மூரி விற்கை யிளையவன் முன்செல,
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
ஊரை யுற்ற துணர்த்தவு மொண்ணுமோ?"

சுமந்திரன் தசரதனது மந்திரிமாருள் பிரதம மந்திரி; அரசனுக்கு ஆருயிர்நண்பன்; இராமலக்குமணரும் சீதையும் கங்கைக்கரையையடைந்தவுடன் ஓரோடத்திலேறி ஆற்றைக் கடந்தனர். சுமந்திரன் கங்கைக்கு வடகரையில் நின்றுவிட்டான். இராமன் சுமந்திரனைப் பார்த்துத் தானும் தம்பியும் சீதையும் கோசலநாட்டினெல்லையைவிட்டு ஓடமேறிச் சென்றதை மகாராசாவுக்கறிவிக்கும்படி சொன்னான். சுமந்திரன் இராமனிடம் விடைபெற்று அயோத்திக்குத் திரும்பினான்; நகரம் சேர்ந்தவுடன் தசரதனிடம் இராமன் நாட்டினெல்லையைவிட்டுக் கடந்து சென்றதை யறிவித்தான். இதைக்கேட்ட தசரதன் அக்கணமே உயிர்நீத்தான்.

9. சித்திரகூடம்

இராமன் கங்கையைக் கடந்த ஓடத்தைச் செலுத்தினவன் **குகன்**. இவன் ஆற்றின் தென்கரையில் வசிப்பவன். தன் ஓடத்தில்வந்த ஆடவரிருவரும் கோசலநாட்டு இராசகுமாரரென்றும், பெண் அவரில் மூத்தவன் மனைவியென்றும், மூத்தவனுக்குப் பெயர் இராமனென்றும், இவனை அரசன் நாட்டினெல்லையைவிட்டு வெளியே போம்படி கட்டளையிட்டானென்றும் சுமந்திரன்சொல்ல அறிந்த குகன் மூவரையும் தன் சிறுகுடிலுக்கழைத்துச்சென்று தன்னாலியன்றமட்டும் அன்போடுபசரித்தான். இதைக்கண்ட இராமன் குகன் அனாரியனும் புறநாட்டுக் குடியுமாயிருந்தும் அன்னியராகிய தங்களை உள்ளன்போடு உபசரித்ததைக்கண்டு அவன்பா லுறவுபூண்டான். "குகனே, நீ என் தோழன்; என் தம்பி இலக்குமணன் உனக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி; என்மனைவி சீதை உனக்கு மைத்துனி. நீ எங்களுக்குச் செய்த இந்நன்றியை நாங்கள் ஒருநாளும் மறவோம்" என்றான் இராமன். அதைக் கேட்ட குகன், "அன்னியர் எவரேயாயினும் அவரை உபசரிப்பது எங்கள் வழக்கம்.

'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.'

என்பது எமதுகோள். நீவிரோ சாமானிய மனிதரல்லீர். உங்களை என்குடிலுக்கு வரச்செய்ததை உங்கள் தீவினைப்பயனும் என் நல்வினைப்பயனுமாம். அடியேனை நீங்கள் மறவாமல், திரும்பி அயோத்திக்குப் போகும்பொழுது என்னிடம் வரல்வேண்டும். இதற்கு ஒரு காதத்துக்கப்பால் சித்திரகூடம் என்னும் மலையுள்ளது; அதன் சாரல் நீங்கள் வசித்தற்குத் தக்க இடம். அங்கேயுள்ள பலவகைக் காட்சி மனத்துக்கின்பந் தருவன. அங்கு சென்று உறையுங்கள்" என்றான். அவன் சொல்லிய வண்ணமே மூவரும் சித்திரகூடஞ் சென்றனர். அம் மலைச்சாரலில் இலக்குமணன் ஒரு சிறுகுடில் சமைத்துத் தழையால் வேய்ந்து முடித்தபின் மூவரும் ஆங்குறைந்து சிலநாட்கழித்தனர். இராம இலக்குமணருக்குக் காட்டுவாழ்வு புதிதன்று. சீதைக்கு இது புதிதாயினும் சித்திரகூடத்தினழகும் இராமனது சகவாசமும் அவளுக்கு ஆனந்தத்தை விளைத்தன. மலைச்சாரலிற் கிடைத்த கந்தமூல பலாதிகளே இவருக்கு உணவாயின.

10. அயோத்தியில் நிகழ்ந்த சம்பவங்கள்

தசரதன் மரணமுற்றவுடனே அவன் சரீரத்தை எண்ணெய்க் காப்பிட்டுவைத்து, உடனே பரதனும் சத்துருக்கினனும் வரும்படி கேகயநாட்டுக்கு ஓலை போக்கினர். அவ்வோலையில் தசரதன் இறந்துபட்டானென்ற செய்தியாவது இராம லக்குமணரும் சீதையும் காட்டுக்குப்போய்விட்டாரென்ற செய்தியாவது எழுதவில்லை. "உடனே அயோத்திக்கு மீளவேண்டும்" என்று கண்டிருந்ததேயன்றி காரணம் யாதும் சொல்லப்படவில்லை. ஓலை கொண்டு போன ஆளும் பரதனுக்காவது சத்துருக்கினனுக்காவது அயோத்தியில் நிகழ்ந்த சம்பவமொன்றும் தெரிவிக்கலாகாது என்று வற்புறுத்தப்பட்டது. ஓலையைக்கண்ட இராசகுமாரரிருவரும் கேகய மன்னனிடம் விடைபெற்றுக்கொண்டு உடனே திரும்பினர்.

அயோத்தி இலக்குமியில்லாத தாமரைமலர் போலப் பொலிவழிந்து காணப்பட்டது. அரமனைக்குட் புகுந்து கொலுமண்டபஞ் சேர்ந்து அரசனைத்தேட, அவனை அங்குகாணவில்லை. இராமலக்குமணரைத்தேட அவருங் கண்ணுக்ககப்பட்டிலர். கௌசலை சுமித்திரை எங்கு மறைந்தனரோ தெரியவில்லை. ஈற்றில் கைகேயிமட்டும் புலப்பட்டாள். பரதன் தாயைக்கண்டவுடன் அவளிடம் செல்ல, அவள் "மகனே, கேகயநாட்டிலுள்ளவரனைவரும் சுகத்துடனிருக்கிறார்களா? அங்கே நீ கழித்த நாளெல்லாம் உனக்கு இன்பந் தந்தனவா?" என்று வினவினாள். "அங்கேயொருவருக்கு மொருகுறையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லை. நாங்களும் பலவகை யின்பங்களை யனுபவித்தோம். அவை நிற்க, மகாராசா எங்கே? அண்ணனெங்கே? இலக்குமணனெங்கே? மற்றை யன்னையரிருவருமெங்கே? அரமனை அழகழிந்து இப்படியிருப்பதற்குக் காரணமென்ன? நான் கண்ட கனவு மெய்த்ததோ? என்மனம் கலங்குகிறது; ஏன் எங்களை அழைப்பித்தீர்கள்? எல்லாஞ் சொல்லுங்கள்; ஒன்றுமொளிக்கவேண்டா" என்று பதற்றத்துடன் கேட்டான் பரதன். கைகேயி, "உன்னை வரும்படி அழைப்பித்தநான் உனக்கு எல்லாஞ் சொல்லேனோ? நான் உனக்கு எப்பொழுதேனும் யாதும் மறைத்ததுண்டோ?" என, "சரி, சரி, சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்றான் பரதன். "மகாராசா இறந்து இன்றைக்கு ஆறு நாள்." இதைச்செவியுற்ற மைந்தரிருவரும் கண்ணீர் விட்டழுதனர்; சிறிதுநேரம் ஒன்றும் பேசிற்றிலர். அதன்பின் பரதன், "அண்ணனெங்கே?" என்றான்.

"மகாராசா இறக்க நாலுநாளைக்குமுன்னமே இராமன் அயோத்தியைவிட்டுக் காட்டுக்குப் புறப்பட்டான்."

"அண்ணன் காட்டுக்குப் போகவேண்டிய காரணமென்ன? விசுவாமித்திரர்வந்து மறுபடியும் கூட்டிக்கொண்டு போனாரோ?"

"விசுவாமித்திரர் வரவில்லை; வேறொருவரும் வரவில்லை. நானே இராமனைக் காட்டுக்கனுப்பினேன்."

"ஏன், ஏன்? சொல்லுங்கள் சொல்லுங்கள்; சும்மா ஏன் நிற்கிறீர்கள்?"

"மகனே பரதா, நான் உன் தாயல்லேனோ?"

"அஃதெல்லாமிருக்க; அண்ணனை ஏன் காட்டுக் கனுப்பினீர்கள்?"

"இன்றைக்குப் பத்துநாளைக்குமுன்னே இராமனுக்குப் பட்டாபிஷேகம் எனத் தீர்மானித்தார் மகாராசா."

"அப்படியானாற் காட்டுக்குப் போவானேன்?"

"என்னை உன்னன்புதூண்டக் கோசலநாட்டை உனக்காக இரந்தேன்; மகாராசா உன்னையே முடிசூட்டுவதாக எனக்கு வாக்குத்தந்தார்."

தாய் இதைச்சொல்லக்கேட்ட பரதன், "ஐயோ! பாவி, உன்னாலன்றோ மகாராசா இறந்துபட்டார்! இராமனை வனம்போக்கினபின் தசரதர் உயிரோடிருப்பாரென்று எண்ணினையோ? முடிசூட்டப்படவிருந்த இராமனைக் காட்டுக்கு அனுப்பினையே! இந்த விபரீதபுத்தி உனக்கு எப்படி வந்தது? இராமனுயிரோடிருக்க நான் அரசாள்வேனென்று எண்ணினையே! உன் மடமை என்னே! உன் துர்க்குணமென்னே! உனக்கு மகனாய்ப்பிறக்க என்ன பாவஞ்செய்தேனோ?" என்று சீறி, உடனே கைகேயியிருந்த இடத்தை விட்டுக் கௌசலைகோயிலுக்குச் சென்றான். அங்கே கைம்மையுற்று மகனைப் பிரிந்து வாடியிருந்த கௌசலையைக் கண்டவுடனே ஓடி, அவளடியில் அடியற்ற மரம்போல விழுந்து தேம்பித்தேம்பி யழுதான் பரதன். உடனே கௌசலை தன் கையாலெடுத்து மார்போடணைத்து, "மகனே, இனியழுது ஆவதென்னை? எல்லாம் ஈசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்" எனத்தேற்றினாள். பரதன் கௌசலை தேற்றவும் தேறாது, "அம்மா, கைகேயி செய்த செய்கைக்கு நான் முன்னமே உடன்பட்டிருந்தேன், அல்லது இப்பொழுதாயினும் உடன்பட்டேன் என்று எண்ணினீர்களோ? இராமன் உயிரோடிருக்கப் பரதன் நாடாள்வான் என்று நினைக்கிறீர்களோ? உங்கள்மறுமொழி என்னைத் தேற்றும் அல்லது கொல்லும்; காத்திருக்கிறேன், பேசுங்கள்" என்றான். உடனே கௌசலை, "களங்கமற்ற பாலா, உன்னை நானறியேனோ? கைகேயி செய்ததையெல்லாம் உனக்குச் சொல்லாமலே செய்தாள். அவளும் பலநாள் நினைத்துச் செய்த செயலல்ல இவை. யாராலோ அனுப்பப்பட்டுச் செய்தாள்ஏழை. நடந்தவை நடந்துபோயின; இராமன் காட்டுக்குப் போய்விட்டான். பதினாலுவருஷம் கோசலநாட்டில் அடியெடுத்துவையான்; ஆதலால் நீயே இந்தநாட்டை ஆளல் வேண்டும்" என்றாள். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், பரதன் கேகயநாட்டினின்றும் வந்துவிட்டான் என்று கேள்வியுற்ற வசிஷ்டமுனிவர் பலவிடங்களில் அவனைத்தேடியுங் காணாமல் ஈற்றில் கௌசலைகோயிலுக்கு வந்து, கௌசலையும் பரதனும் சம்பாஷிப்பதைப் பார்த்து, கௌசலை சொன்ன மறுமொழியைக் கேட்டுக்கொண்டு நின்றார். அவள் பேசி முடித்தவுடனே வசிஷ்டர், "ஆம்; பரதா, உன் தாயார் சொல்வது மெய்; எல்லாம் ஈசன்செயல்; நீ கோசலநாட்டுக்கு முடிவேந்தனாவதே இப்போது உன் கடமை" என்றார். உடனே பரதன், வசிஷ்டர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, "அடிகள் திருவாய்மொழி

யையும் அன்னை கௌசலையாரின் திருவாசகத்தையும் தட்டிப் பேசுகிறேனென்று நினைக்கவேண்டா; நாளைக்கு என் தந்தையாருக்குச் செய்யவேண்டிய சரமகிரியைகள் யாவும் செய்துமுடிப்பேன்; அடுத்த நாள் அண்ணனைத்தேடிக் காட்டுக்குப் போவேன்; மற்றவையெல்லாம் அதன்பின் பார்க்கலாம்; இராமன் உயிரோடிருக்கப் பரதன் முடிசூடுவதில்லை, இது சத்தியம்" என்றான். அப்படியே அடுத்தநாள் தசரதச்சக்கரவர்த்திக்கு ஈமக்கடன்கள் நிறைவேறின. அடுத்தநாள் பரதன் காட்டைநோக்கிப் புறப்பட்டான்: பின்னே அன்னையர் மூவரும் சத்துருக்கினனும் வசிஷ்டரும் மந்திரிமாரும் நாற்படைகளோடு படைத்தலைவரும் போயினர். அனைவரும் கங்கையைக்கடந்து தென்கரை சேர்ந்தனர். அங்கு நின்ற குகன் வந்தவரின்னாரென்றறிந்து, அவரிடஞ்சென்று, பரதனை நமஸ்கரித்து, நான் குகனென்றும் இராமலக்குமணரையும் சீதையையும் இக்கரையிற் சேர்த்தவன் தானே என்றும் மூவரும் சித்திரகூட மலைச்சாரலில் தங்கியிருக்கிறாரென்றுஞ் சொன்னான். பரதனும் கூட வந்தவரும் குகன் சொன்ன வழியைக்கேட்டு இராமனை நாடிச்சென்றனர். சித்திரகூடமலையிலொருமரத்தின் கிளையிலிருந்த இலக்குமணன், தூரத்திலே வரும் பரதனையும் சேனைகளையுங்கண்டு, வருபவன் பரதன்றானென்று மட்டிட்டு, உடனே சென்று இராமனுக்கிதையறிவித்தான்: "அண்ணா, கைகேயி நம்மைக் காட்டுக்குத் துரத்தினாள். அவள் மகன் நம்மைக் காட்டிலுமிருக்கவிடான்போலும்! பாதகன் படைகளோடு வருகிறான்; வருக பரதன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக சேனைகள்; விசுவாமித்திர முனிவர் கற்பித்த வித்தையால் இவரெல்லாரையும் நான் ஒருவனே அதம்பண்ணுவேன்; இல்லையேல் என்பெயர் இலக்குமணனன்று." இதைக்கேட்ட இராமன் விலாப்புடைக்க நகைத்து, "இலக்குமணா! நீ இவ்வளவு மடையனென்று நான் எண்ணினதில்லை; போ, போ; பரதனை நீ இன்னுமறிந்தாயில்லை, பரதன் வந்தபின்னாயினும் நீ யவனை அறிவாய்; நீ உன்னாண்மையை அடக்கு; எல்லாம் நான் பார்த்துக் கொள்ளுவேன். இப்பொழுது நீ இங்கு சீதையோடு இரு" என்றுசொல்லிப் பரதனை எதிர்நோக்கிச் சென்றான். இராமனைக்கண்ட பரதன் காந்தத்தைக் கண்ட இரும்புபோல அவனை அணுகி அவனடியில் விழுந்து தெண்டனிட்டான். பின் இராமனவனைத் தூக்க எழுந்துநின்று, "அண்ணா! கைகேயி செய்ததெல்லாமறிந்தேன்; அவள்செய்த சூதுக்கு நான் உடன்பட்டவனல்லேன்; இஃது அன்னையார் கௌசலையார் அறிவர்; நீங்களும் அறிவீர்களோ?" என்றான். அதற்கு இராமன், "அன்னையார் கைகேயியார் ஒருசூதுஞ் செய்தவரல்லர்; என்மேலுள்ள அன்பினால் நான் ஈடேறவேண்டுமென்றே இவ்வாறு செய்தனர்; அஃதெவ்வாறாயினுமாகுக, நீ இவ்விஷயமொன்றும் அறியாய் என்பது நான் நன்கறிவேன்; இதனை ஒருவர் எனக்குச் சொல்ல வேண்டுமோ? என்றான். பரதன், "ஒருவரிடத்துந் தீங்குநினையாத உங்களுள்ளம் கைகேயியின் தீங்கையும் கண்டிலது; உங்களுக்கு இக்கொடுமை செய்தவள் கணவனையும் கொன்றாள். தசரதச் சக்கரவர்த்தி யிறந்து இன்று பதினைந்து பகல்

கழிந்தன. நாட்டையாள வேந்தனில்லை. நீங்கள் மீளவேண்டும்" என்றான். தசரதன் இறந்ததைக் கேட்ட இராமன், புண்பட்ட நெஞ்சினனாய் வருந்தி, பின் அன்னையர் மூவரையும் வணங்கி, வசிஷ்டரைத் தொழுது, சத்துருக்கினனைத் தழுவி, மந்திரிமாருக்கும் படைத்தலைவருக்கும் முகமன்கூறி, எல்லாரையுஞ் சித்திரகூட மழைத்துச்சென்றான். அங்கு சீதையும் இலக்குமணனும் வந்து, வந்தவரை வணங்கினர். இதன்பின் சகோதரர் நால்வரும் தந்தைக்கு அந்தியேட்டி செய்தனர். அந்தியேட்டி முடிந்தபின் சுபசுவீகரணம் நடந்தது. அடுத்தநாள் பரதன் இராமனை அயோத்திக்குவந்து அரசியலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினன். இராமன் சிறிது மிசைந்திலன். கைகேயி வந்து தான்செய்த குற்றத்தை இராமன் மன்னிக்க வேண்டுமென்று வேண்டினள். இராமன், "அம்மா, நீங்கள் செய்தது குற்றமென்று நான் நினைப்பினன்றோ மன்னிப்பது? எனக்குக் குற்றமொன்றுஞ் செய்யாதிருக்க நான் மன்னிப்பதெதனை?" என்றான். வசிட்டரும், "இராமா! நீ குணத்திற் பெரியன்; நாங்கள் எல்லேமும் கோசலநாட்டார் யாவரும் விரும்பி உன்னை யழைக்கிறோம்; நீ வந்து எங்களையாளல் வேண்டும்" என்றார். "சுவாமி, பிதிர்வாக்கிய பரிபாலனஞ்செய்வதையே கடனாகக்கொண்ட நான் எப்படி யரசாளலாம்?" என்றான் இராமன். உடனே பரதன், "அண்ணா, எனக்குத் தந்தையார் தந்த அரசை என்னிடமிருந்து நீங்கள் பறித்தாலன்றோ உங்களைப் பழி சாரும்? மகாராசா இராச்சியத்தை எனக்குத் தந்தார். இராச்சியம் என்னுடையது;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிராச்சியத்தை நான் உங்களுக்குத் தந்தால் நீங்களதை ஏற்றுக்கொள்ளலாகாதோ? ஏற்றால் இழிவுண்டோ?" என்று அழுதான். உடனே இராமன், "பரதா! அழாதே, உன்னன்பிருந்தவா றென்னே! உன்னன்பாற் பிணிப்புண்டேன்; நீ கொடுக்கும் இராச்சியத்தை நானேற்பதில் இழிவொன்றுமில்லை; நீ கொடுக்க நான் ஏற்றுக் கொண்டேன்; இது சரி. ஆயினும், பதினான்கு வருஷம் நான் காட்டில் வாழவேண்டுமென்பது எந்தையார் கட்டளை; அதை மீறலாகாது. நீ போய்ப் பதினான்கு வருஷம் எனக்காகக் கோசலநாட்டை ஆள்; பதினான்கு வருஷம் முடிந்தவுடனே நான் அயோத்திக்கு வந்து உன்னிடம் அரசு பெற்றுக்கொள்ளுவேன். இதற்குமேல் என்னால் ஒன்றுமாகாது" என்றான். பரதன் இதைக்கேட்டு மகிழ்ந்து, "அண்ணா, உங்கள்சித்தம் என்பாக்கியம்; நானிப்பொழுதே திரும்பிப்போகிறேன்; ஆயினும் இப்பதினாலுவருஷம் அரசனென்ற பெயர்வகிக்கவாவது சிங்காசனத்திலிருக்கவாவது, முடிதரிக்கவாவது என்னாலாகாது. உங்கள் மிதியடியைக் கொடுத்தல்வேண்டும். நான் அதைக்கொண்டுபோய்ப் பட்டாபிஷேகஞ்செய்து அதைச் சிங்காசனத்திலிருத்திவிட்டு அயோத்திக்கருகில் நந்திக்கிராமம் என்னும் ஊரிலிருந்து இராச்சியத்தின் காரியங்களைப் பார்வையிடுவேன். நீங்கள் அயோத்தியைவிட்டுப் புறப்பட்டநாள்முதல் பதினான்குவருஷம் முற்றுப் பெறும் தினத்தில் உங்களை நான் அயோத்தியிற் காணவேண்டும். நீங்கள் அன்று அங்கு இல்லையேல் உடனே உயிர்துறப்பேன்; இது சத்தியம்" என்று

கூறினான். இராமன் அதற்கிணங்கித் தன் பாதுகையைக் கொடுக்கப் பரதன் கொண்டுபோய் அதற்கு அயோத்தியிற் பட்டாபிஷேகஞ்செய்து சிங்காசனத்திருத்திவிட்டுத் தான் போய் நந்திக் கிராமத்தில் வாழ்ந்தான்.

11. வனவாசம்

பரதன் பரிவாரத்துடன் போயினபின் தாசரதியும் சானகியும் இளையவனும் சிலகாலம் சித்திரகூட மலையிற்றங்கி வாழ்ந்தனர். அவர்களுறைந்தவிடத்துக் கருகே பல ஆச்சிரமங்களிருந்தன. அவற்றில் இருடிகளும் இருடிபத்தினிமாரும் மாணவர் சூழ வேதமோதுதல் ஓதுவித்தல் எரியோம்புதல் தவஞ் செய்தல் முதலியவற்றிற் காலங்கழித்து வந்தனர். மூவரும் இவ்வாச்சிரமங்களைச் சந்தித்து, முனிவரையும் பத்தினிகளையும் வணங்கி, அவராலுபசரிக்கப்பட்டு, யாதொரு கவலையுமின்றிப் பொழுது போக்கினர்; பெரியோரிடத்தும் தம் உடன்மாணவரிடத்தும் பல பாடங்களைக் கற்றுக்கொண்டனர். ஆச்சிரமங்களிலுள்ளவருக்கு இயன்றமட்டும் எவ்வகையிலும் பணிவிடைசெய்து மகிழ்ந்தனர். ஆச்சிரமவாசிகளும் இம்மூவரும் தங்களோடிருந்ததாலுவகைகொண்டனர். இப்படிச் சில வருஷங் கழிந்தபின் சித்திரகூடத்தைவிட்டுத் தென்றிசை நாடி விந்தியமலையைக் கடந்து தண்டகாரணியஞ் சேர்ந்தனர். தெற்கே வரவர ஆரியர் அருகவும் திராவிடர் பெருகவும் தலைப்பட்டனர். சிலகாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதாவரியாற்றங்கரையில் வசித்து மகிழ்ச்சியுற்றனர். அங்கிருக்கையில் விராதன் என்னுமொரு கொடியன் மூவரையுங்கண்டு சீதைமேல் மோகங்கொண்டான்; அவளோடிருந்த ஆடவரிருவரும் தன்னிலும் வலிகுறைந்தாரென் றெண்ணி மைதிலியைத் தூக்கித் தன் தோள்மேலிருத்திக் கொண்டு ஓடினன். அதைக்கண்ட இராமலக்குமணர் அவனைப் பின்தொடர்ந்து சீதையை மீட்டனர். விராதனைக் கொன்றான் இராமன். முன் விசுவாமித்திரர்செய்த யாகத்தை அழிக்கவந்தவருள் தாடகையையும் சுபாகுவையும் இவர்கள் கொன்றது முன் கண்டுளோம். இப்பொழுது வனவாசகாலத்தில் இராமன் கையால் கொலையுண்டிறந்தவர்களில் முதல்வன் விராதனே. வேறொருநாள் தமிழனொருவன் **கழுகுக்கொடியோன்** இங்குவந்தான். வனத்திலிருந்த ஆரியர் மூவரையும் சிறிதுற்றுநோக்கி, "நீவிர் வடநாட்டீர்போலும்! இங்குவந்த காரணம் யாதோ?" என வினவினன். அதற்கு இராமன், "நாங்கள் கோசலநாட்டேம், எங்கள் தந்தை தசரதர்; அவர் இறந்துபோயினர்; என் தம்பி பரதன் இப்பொழுது இராச்சியவிஷயங்களை மேற்பார்க்க, நான் என் மனைவி சீதையோடும் தம்பி இலக்குமணனோடும் அரணியசஞ்சாரஞ் செய்து வருகின்றேன்; என் பெயர் இராமன்" என்றான்.

இதைக்கேட்ட தமிழன், "என்பெயர் சடாயு; உங்கள் தகப்பனார் தசரதர் எனக்கு உற்ற நண்பர்; பலமுறை தசரதர் சத்துருக்களோடு யுத்தஞ்செய்யப் போனபோது என்னையுந் தம்முடன் அழைத்துச்

செல்ல, ஆரிய மன்னராகிய அவரும் தமிழனாகிய நானும் ஒருவருக்கொருவர் அருகில்நின்று உடன்பிறந்தார்போல யுத்தஞ்செய்திருக்கிறோம். ஒருநாள் வலியனான மாற்றானொருவனைப் போர்க்களத்திலே கொன்றபின் தசரதர் என்னைநோக்கி, 'சடாயு, நீ என் உயிர், நான் உன் உடல்' என்று கூறினர். உடலைவிட்டு உயிர் போவது கண்டுளோம்; உயிரைவிட்டு உடலைக்கொண்டுபோன நமன் மடையன். ஐயோ! இனி என் நண்பனை என்றுகாண்பேனோ? கொடையிற் கற்பகத்தையும் தண்மையிற் சந்திரனையும் வென்றவர்; சத்தியத்தில் தம் முன்னோன் அரிச்சந்திரனுக்கு எவ்வாற்றானுங் குறைந்தவரல்லர். என் நண்பரைப் பிரிந்த கலக்கமொருபாலிருக்க அவர் பிள்ளைகளாகிய உங்களைக் கண்டது எனக்கு மெத்தச் சந்தோஷம். நீங்கள் மூவிரும் என் பிள்ளைகள்; நான் உங்கள் தகப்பன்; நீங்கள் இங்கே வசிக்கும்பொழுது என்னாலியன்ற உதவி உங்களுக்குச் செய்வேன்" என்றுசொல்லி அவர்களைத் தழுவி ஆசீர்வதித்துவிட்டுப் போயினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சூர்ப்பணகை

மூவரும் பஞ்சவடியென்னும் இடம்போய் அங்கு சிலபகல் கழித்தனர்.* இவரிருந்தவிடத்துக்கருகே ஓரிளங்கைம்பெண் வாழ்ந்தனள். இவள் பெயர் சூர்ப்பணகை. இவள் இலங்கைவேந்தன் இராவணன் தங்கை. இவள் கைம்மையுற்றபின் இலங்கையை விடுத்துப் பஞ்சவடியையடுத்துத் தன்னுறவினர் சிலரோடு வாழ்ந்துவந்தாள். இராமலக்குமணரும் சீதையும் இங்குவர இவர்களைப் பலமுறை காட்டிற் கண்டனள். இவரோடு பழகி நட்புக்கொள்ள விரும்பினள். பலமுறை இவரிருக்குமிடஞ் சென்று இவரோடு அளவளாவி வருவள். இளங்கைம்பெண்ணாகிய சூர்ப்பணகை இராசகுமாரரின் பேரழகைக் கண்டு இருவரிலொருவரை மணஞ்செய்துகொள்ள விரும்பினள். தமிழருட் கைம்பெண்கள் மறுமணஞ் செய்வது தவறென்று விலக்கப்படவில்லை. ஆகவே சூர்ப்பணகை மறுமணஞ்செய்ய விரும்பியதில் யாதொரு தப்பிதமுமில்லை. மனைவி உயிரோடிருக்க ஆடவன் வேறு மனைவியரை மணஞ் செய்வது தவறென்ற கொள்கையுமில்லை. ஆகவே இராமன் மனைவி யுடையனேனும் விருப்பமாயின் சூர்ப்பணகையையும் விவாகஞ் செய்துகொள்ளலாம். தந்தைக்கு மனைவியர் மூவராயின் மைந்தற்கு மனைவியரிருவர் வாய்ப்பது பிழையன்று என்று எண்ணினாள் சூர்ப்பணகை. நாளுக்குநாள் காதல் வளரச் சூர்ப்பணகை தன் மனக்கோளை மெல்ல இராமனுக்கறிவித்தாள். சந்திரன் களங்கமுடையது; இராமசந்திரன் நடக்கையிலும் சில களங்கம் காணப்படுகின்றன. இராமன் சூர்ப்பணகையை மணந்து கொள்ளச் சிறிதும் எண்ணமிலானாயினும் அவளோடு சரசசல்லாபஞ் செய்வது தவறென்று கருதினானல்லன். தன் மனைவி பொல்லாதவளென்றும் தான் வேறொருத்தியை விவாகஞ்செய்யின் புலிபோலச் சீறுவாளென்றும் இலக்குமணனுக்கு மனைவியில்லையென்றும் (இலக்குமணன் மனைவி ஊர்மிளை உயிரோடிருப்பது இராமனறிந்த விஷயமே.) அவனை விவாகஞ்செய்துகொள்வதே புத்தியென்றும் சூர்ப்பணகைக்குச் சொன்னான். இதை மெய்யென்று நம்பி யாதொரு கபடமுமின்றிச் சூர்ப்பணகை இளையவனிடம்போய்த் தன் காதலை அறிவித்தாள். இலக்குமணனும் தான் அரிச்சந்திரன் வழித்தோன்றலென்பதை மறந்து, தான் இராமனுக்கு இளவல் என்பது உண்மையே எனினும் அவனுக்குத் தானடிமையென்றும் ஓரடிமையை மணப்பது அவள் மேன்மைக்கு அடாதென்றும் சீதையினும் அழகியான சூர்ப்பணகையை இராமன் விவாகஞ் செய்துகொள்ளுவானென்றும் இராமனும் சூர்ப்பணகையுமே மன்மதனும் இரதியும் போல ஒருவருக்கொருவர் பொருத்தமுடையவரென்றும் சொல்ல, இஃதெல்லாம் மெய்யென்று நினைத்த பேதை மீண்டும் இராமனையடுத்தனள். இராமன் மீண்டும் பல பொய்சொல்ல, ஈற்றில் சூர்ப்பணகை தான் இராமனை மணக்கத் தடையாயிருந்த சீதையை இராமனைவிட்டுப் பிரிப்பின் அவன் தன்னை மணந்துகொள்ள

* வடம் என்னும் வடமொழிக்கு ஆல் என்பது தமிழ். பஞ்சவடியென்பது ஐயாலடி எனப் பொருள்படும். அங்கு ஐந்து ஆலமரங்கள் இருந்தனவாதலால் இப்பெயர் வந்ததுபோலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவானென்று கருதி, சீதையைத் தூக்கிக் கொண்டு ஓடத் தலைப்பட்டனள். உடனே இராமனும் இளையவனும் அவளைத் தொடர்ந்தோடிச் சீதையை மீட்டதுமன்றிச் சூர்ப்பணகையுடம்பை ஊறுசெய்தனர். இராமன் சொல்ல இலக்குமணன் அவளை மானபங்கப்படுத்தினன். அவள் தன்னிருக்கை சேர்ந்தனள். அங்கிருந்த உறவினருள் கரன் தூஷணன் என்னும் வீரரிருவர் தங்களுறவினளுக்கு ஆரியரிருவரும் செய்த தீங்கைக்கேட்டு அவர்களோடு யுத்தஞ்செய்ய வந்தனர். கர தூஷணர் இராம இலக்குமணரோடு எதிர்த்துநிற்க ஆற்றலுமின்றிப் புறங்கொடுத்தோட மனமுமின்றிப் போர்செய்து மாண்டனர். இவையெல்லாம் நடந்தபின்னும் சூர்ப்பணகை இராமன்மேலுள்ள காதல் தணியாதவளாய்ச் சீதையை இராமனைவிட்டுப் பிரிப்பின் இராமன் தன்னை மணந்துகொள்ளுவான் என்ற வீணெண்ணம் மாறாதவளாய் அதற்கோருபாயஞ் செய்யக் கருதி இலங்கைக்குத் தன் அண்ணன் இராவணன்பாற் சென்றாள்.

13. இராவணன்

இராவணன் தாய் இலங்கைவேந்தன் சுமாலிக்கு மகள். இவள் பெயர் கைகசி. சுமாலி தமிழன். கைகசியுந் தமிழ்ப்பெண். கைகசியின் கணவனார் விச்சிரவர் என்னும் ஓர் ஆரியமுனிவர். தந்தையார் ஆரியமுனிவராயினும் இராவணன் தமிழனாகவே வளர்க்கப்பட்டான். ஆரிய பாஷையிலுள்ள வேதங்களிலும் வல்லான். இவனுக்குக் கும்பகன்னன் விபீடணன் எனத் தம்பியர் இருவர். இவரெல்லாருக்கும் இளையாள் சூர்ப்பணகை. முன் நாம் கண்டபடி சூர்ப்பணகை இளமையில் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டுக் கணவனிறக்கவே பஞ்சவடி சென்றாள். இவளுக்குப் பிள்ளையில்லை.

சூர்ப்பணகை கரதூஷணரிறந்தபின்பு மீட்டும் இலங்கைக்கு வந்து தமையன் இராவணனைக் கண்டு அவனோடு இவ்வாறு சொல்லலுற்றாள்: "அண்ணா! நான் பஞ்சவடியிலிருந்த காலத்தில் ஆரிய இராசகுமாரரிருவர் வடக்கேயிருந்துவந்து அங்கு தங்கினர். அவருள் மூத்தவன்பெயர் இராமன். அவன் மனைவி சீதையென்பாள்; அவளைப்போல வடிவும் அழகும் உள்ள பெண் வேறொருத்தியையும் நான் எங்கும் கண்டதில்லை. அன்னம்பழித்த நடை; ஆலம்பழித்த விழி; அமுதம்பழித்த மொழி; சின்னஞ் சிறுத்த இடை; பென்னம்பெருத்த நுதல்; கன்னங்கறுத்த குழலுடைய அவள், இராமன் என்னும் அலிக்கு மனைவியாய் வந்தது என்ன கொடுமை? 'அரசற்கூரித்து அருங்கலம்' என்றாற்போல உன்போலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விறல்வீரனொருவனுக் குரியாளவள் என நான் என்னுள்ளத்திலே தேறி, அவளை உன்னிடஞ் சேர்ப்பிக்கக் கருதி, இராசகுமாரரிருவரு மில்லாதகாலம் பார்த்து அவளைத் தூக்கிக்கொண்டுவந்தேன். நீ அதிர்ஷ்டங்கெட்டவன். எங்கோநின்று ஆடவரிருவரும்வந்து அவளை மீட்டதுமன்றி என்னையும் அவமானப்படுத்தினர். நான் போய் இதைக் கரதூஷணருக்குச்சொல்ல, அவரும்போய் அவ்வாரியப் பிசாசுகளிரண்டோடும் போர்செய்து மடிந்தனர். என் அவமானத்தையும் கரதூஷணர் சாவையும் நான் எண்ணவில்லை; கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லையென்பதுபோல, சீதையைத் தூக்கிவந்தும் உன்னிடங் கொண்டுவந்து சேர்க்கத் தவறிப்போனேனே யென்று வருந்துகிறேன். உன்மனைவி மண்டோதரி போல ஆயிரவர் பெண்கள் சீதையின் காற்றூசு பெறுவார்களோ? உனக்குரியவள் சீதை; சீதைக்குரியை நீ. இனி உன்னிஷ்டம். நான் செய்வது செய்தும் எல்லாம் வீணாயிற்று."

தங்கையின் சொல்லைக்கேட்ட இலங்கை வேந்தன் இளையனல்லன்; முன்பின் ஐம்பது பிராயமுடையான். அவன் மனைவி மண்டோதரி சகல சற்குணமும் வாய்ந்தவள். மேகநாதன் முதலிய மக்கள் பெரும் வீரர். ஆயினும் 'கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது' என்பதுபோல, தன்னியற்கையறிவும் கல்வியும் பத்தியும் போகவிட்டுக் காமப்பேய் பிடித்தலைக்க எப்படியாயினும் சீதையை இலங்கைக்குக் கொண்டுவந்து அவளையே தன் பட்டத்து மகிஷியாக்கத் துணிந்தான் இராவணன்

தான் நினைத்ததை முடிக்கத் தனக்குத் துணை வேண்டுமென்றும் தக்கதுணை செய்யக்கூடியவன் தாடகைமகன் மாரீசனேயென்றும் இராவணன் எண்ணி அவனையழைத்து, தன்கருத்தை அவனுக்கறிவித்து "நீபோய் எப்படியாயினும் இராமனையுந் தம்பியையும் சீதையைவிட்டுப் பிரித்து வெகுதூரம் கொண்டுசெல்லல் வேண்டும். அப்பொழுது நான் சீதையைத் தூக்கிக்கொண்டு இலங்கை வந்து சேருவேன்" என்றான்.

மாரீசன் இதைக்கேட்டு,

"நாரங் கொண்டார், நாடுகவர்ந்தார், நடையல்லா
வாரங் கொண்டார், மற்றொரு வர்க்காய் மனைவாழும்
தாரங் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங் கண்டாய்; கண்டக ருய்ந்தா ரெவரையா?

"எம்பிக் கும்மென் னன்னை தனக்கும் இறுதிக்கோர்
அம்புய்க் கும்போர் வில்லி தனக்கும் அயனிற்கும்
தம்பிக் கும்மென் னுண்மை தவிர்த்தே சயநிற்கும்;
நம்பிக் கும்மென் னெஞ்சவ னென்றே நவில்கின்றேன்."

என்றுகூறித் தடுக்க முயன்றான். "இராம இலக்குமணர்கள் உன்னை ஒருவேளை கொல்வார்கள் என்று அஞ்சுகின்றனை; நான் உன்னை இப்படிப் பணிந்து கேட்கவும் நீ போக மறுத்தால் இங்கு இப்பொழுது என் கையால் நீ சாவது ஒருதலை என்றான் இராவணன். ஈற்றில் மாரீசன் உடன்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மாரீசன்

மாரீசன் பஞ்சவடிசென்று இராமனிருந்த பன்னசாலைக்குப் போனான். வந்தவிருந்தினனைத் தக்கபடி மூவரும் உபசரித்தனர். மாரீசன் அவர்களை நோக்கி, "நான் தெற்கே பாண்டிநாட்டிலுள்ளவன்; பாண்டியன் பலவகை மிருகங்களிலும் பிரியங்கொண்டவன். பஞ்சவடிக்கு இரண்டு காதத்துக்கப்பால் ஒரு வனம் உள்ளதென்றும் அவ்வனத்தில் அழகிய புள்ளிமான் பலநூறு சஞ்சரிக்கின்றன என்றும் இங்கிருந்துவந்த முனிவரொருவர் சொல்லப் பாண்டியன் கேட்டு, அவனது அரமனைத் தோட்டக்காரனாகிய என்னைப்பார்த்து, "கறுப்பா, நீ இந்த முனிவர் சொல்லும் வனத்துக்குச்சென்று இரண்டொரு புள்ளிமான் கொண்டுவா" என எனக்குக் கட்டளையிட்டனன். பாண்டிமாதேவியும், "கறுப்பா, எனக்கும் ஓர் அழகிய குட்டிமான் கொண்டுவரல் வேண்டும்" என்றாள். அதுவே நான் இங்குவந்த காரணம். இவ்வளவு தூரம் வந்துவிட்டேன், இன்னும் இரண்டுகாதந்தான்; நான் போகிறேன்" என்றான். இதைக்கேட்ட சீதை இராமனைப்பார்த்து, "அப்படியானால் நீரும் இவருடன் சென்று எனக்கு ஓர் அழகிய புள்ளிமான்குட்டி கொண்டுவாரும்" என்றாள். இராமன் அதற்கிணங்கி "அப்படியே போகின்றேன்; இன்று பகல் பதினைந்துநாழிகையாகுமுன் திரும்பிவிடுவேன்; தம்பீ! நீ பன்னசாலையைவிட்டு எங்கும் போகாதே, சீதை பத்திரம்" என்றுசொல்லி, மாரீசனோடு போனான். போனவன் பகல் இருபது நாழிகை கழிந்தும் வரவில்லை. சீதை

இலக்குமணனைப் பார்த்து, "பதினைந்துநாழிகைக்கு முன்னே வருவேனென்று சொல்லிப்போன உன் தமையனார் இருபது நாழிகையாகியும் இன்னும் வந்தாரில்லை; அவருக்கு என்ன தீங்கு நேரிட்டதோ அறியேன்; நீ விரைந்துசென்று பார்த்துவா" என்றாள். "அண்ணனுக்குத் தீங்குசெய்வார் இங்கு யார்? நீங்களஞ்சுவது வீண்; விரைவில் வந்துவிடுவார், கலங்காதேயுங்கள்" என்றான் இளையவன். மனக்கலக்கங்கொண்ட சீதை, தான் பேசுவதின்னதென்றறியாது, கோபத்தோடு, "இலக்குமணா, நீ நல்லவன்போல் வெளியே தோன்றினும், உன்னுள்ளம் தீயது; 'காட்டிலே இராமன் என்று சாவான், அன்றன்றோ சீதையை நான் மணப்பது' என்ற பொல்லா நெஞ்சத்தோடு, உன் மனைவி ஊர்மிளையையுந் துறந்து என்னைத் தொடர்ந்துவந்தாய்; இராமன் சாகினும் சாக, நான் உன்னை மணவேன் என்பது நிச்சயம்; புலியது பசித்திடின் புல்லைத் தின்னுமோ?" என்றாள். இந் நச்சுச்சொல் காதில் விழுந்தவுடன் இலக்குமணன் காதிரண்டையும் பொத்திக்கொண்டு 'நானிங்கு சீதையுடன் தனித்திருப்பது அழகன்று' என்று மனத்தில் நினைத்து, "அம்மா, என் தமையன்சொல்லை மீறி நான் வெளியே செல்கின்றேன்; 'சீதையைத் தனியேவிட்டு ஏன் வந்தாய் தம்பி?' என்று அண்ணன் என்னைக் கேட்டால், உங்கள் பத்தினியாரையே கேளுங்கள் என்று சொல்லுவேன்" என்று கூறிவிட்டு, இராமனைத் தேடியோடினான். இதுவரையிலுஞ் சமயம் பார்த்துக்கொண்டிருந்த இராவணன் சன்னியாச கோலத்தோடு பன்னசாலைக்கு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலில் நின்று பிச்சைகேட்டான். திருநீற்றுப் பூச்சும் உருத்திராக்கவடமும் புலித்தோலாடையும் பொருந்திநிற்கக்கண்ட சீதை, 'சிவபெருமானே இன்றைக்கு என் குடிலுக்குப் பிச்சைக்குவந்தார்' என எண்ணினள். நின்ற சன்னியாசியும் சிவன் போலவே விளங்கினான். கள்ளச் சன்னியாசி, பார்வையாலும் மொழியாலும் தன் தீய எண்ணத்தை விளக்க, அதனைக்கண்ட சீதை, "சீச்சீ, நாயே, யாரென்று என்னை நினைத்தாய்?" என்றாள். "யாரென்று நீ என்னை நினைத்தாய்" என்றான் இராவணன். உடனே தன் பொய்வேடத்தைக் களைந்து, "நான் இராவணன்; கடல்சூழ் இலங்கைக் காவல்வேந்தன்; இலங்கை ஒரு பெருந்தீவு; கடலுக் கப்பாலுள்ளது; இங்கிருந்து பலநூறு காதங்கடந்து கடலையுந்தாண்டிப் போகவேண்டும் இலங்கைக்கு. ஆயினும், அங்கும் உன்புகழைக்கேள்விப்பட்டேன். உன் வடிவும் அழகும் வருணிக்கக் கேட்ட நான் இப்படிப்பட்ட பெண் பூவுலகிலுண்டோ என்றறிய இங்கு வந்தேன். நான் கேள்விப்பட்டதிலும் நூறாயிரம் மடங்கு வடிவிற் சிறந்தனை; அழகிற் பொலிந்தனை; இரதியும் சசியும் மட்டுமல்ல, இலக்குமியும் உனக்கு நிகரல்லள். 'குரங்குக்குப் பூமாலை வாய்த்ததுபோல' இராமனுக்கு வாய்த்தாய்நீ. கண்ணே, சனகன் பெண்ணே, எண்ணேன் இனி மறுமாதரை; உன்னையே இலங்கைக்குப் பட்டமகிஷி யாக்குவேன்; வா, என்னோடு புறப்படு இப்பொழுதே" என்று சீதையின் அடியில் வீழ்ந்தான். உடனே அவள், உள்ளேசென்று விளக்குமாறெடுத்துவந்து அவன் தலையிலும் முகத்திலும் மாறிமாறி

அடித்தனள். உடனே அவன் சீதையைப்பார்த்து, "'மயிலே மயிலே, இறகுதா' என்றால் மயில் இறகு கொடுக்குமா? உனக்குச் செய்யவேண்டியது செய்தால் நீயேவந்து என் காலில் விழுவாய்" என்று சொல்லி, அவள் கூந்தலைத் தன் இடக்கையாற்பற்றி வலக்கையால் அவளைத் தூக்கிக்கொண்டுபோய், தூரத்தினின்ற தன் தேரில் அவளோடுமேறி, அவளைத் தன் இடத்தொடையிலிருத்தி, இடக்கை அவள் பிடரைப் பிடிக்க வலக்கை தேரோட்ட, தெற்குநோக்கிச் சென்றான்.

15. சீதை இரங்கல்

"'ஜானகி, நீ அயோத்தியிற்றானேயிரு, என்னோடு காட்டுக்கு வருமெண்ணத்தை விட்டுவிடு' என என் கணவனார் எனக்குச்சொன்ன சொல்லை மீறிவந்த பாவத்தின் பலனன்றோ இது? நான் இங்கு வந்ததனால் என் நாயகருக்கு என்ன சுகம்? அன்று விராதன் என்னைத் தூக்கிக்கொண்டுபோக என் கணவனாருக்கும் இளவலுக்கும் மனவேதனை விளைத்தேன்; என்னால் விராதனும் மடிந்தான். வேறொருநாள் சூர்ப்பணகை என்னை எடுத்துச்செல்ல இருவருக்கும் மனக்கிலேசம் விளைத்தேன். என்னால் கரதூஷணரும் மாண்டார். உத்தமனாகிய இளைய வனைப்பற்றிப் பொல்லாப்பு நினைத்தேன். நினைத்தது மட்டுமோ, பித்துப்பிடித்து வாய்க்குவந்தபடி ஏசினேன். அதனாலன்றோ அவன் என்னைக் காப்பதைவிட்டு வெளியே ஓடினான்? 'தன்வினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச்சுடும்' என்பது பொய்யோ? ஒரு நாழிகைக்குள் என் ஆகாமியம் என்னைப்பிடித்தது. கடவுளே, என் புத்தியீனத்தை எனக்கு மன்னியும்; இந்தப் பாதகன் கையிலிருந்து என்னைத் தப்புவியும். ஐயோ! என் கொழுநர் எங்குற்றாரோ? அவருக்கு என்ன நேர்ந்ததோ? இலக்குமணன் எங்கு போயினனோ? இருவரும் திரும்பிவந்து என்னைக் காணாமல் யாது நினைப்பரோ? பாதகன் இராவணன் என்னைப் பிடித்து இழுத்துத் தேர்மேலேற்றிச் செல்வதை யாரும் பார்த்திலரே! இதை அவருக்குச் சொல்லுவார் யார்?

" உள்ளம் அறிவாய், உழைப்பறிவாய், நான்ஏழை ;
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன், பராபரமே."

எனச் சீதை, பரமனைத் தியானிக்கையில், "ஏட, ஏட, நிறுத்து தேரை; தேரை நிறுத்து; சீதையை எடுத்துச்செல்கிற நீ யார்? இறக்கு அவரைக் கீழே" எனப் பேரிடி இடித்ததுபோலக் கழறிக்கொண்டு குதிரைகளுக்கு முன்னே நின்றான் ஒரு வீரன். அவன் கையிற் கதையிருந்தது. இடையில் வாள் தொங்கினது. அவனைக்கண்ட இராவணன் "விடு குதிரையை; அன்றேல் என்கையாற் செத்தாய்" என்றான். இவ்வாறு எதிர்பாராதவண்ணம் வந்து தடுத்தவன் சடாயு. அவன் இராமலக்குமணரையுஞ் சீதையையுங் கண்டு நட்புக்கொண்ட வரலாறு முன்னமே கண்டுளேம். சடாயுவைக் கண்டவுடனே சீதை, "ஐயா, உம்மை இக்கணம் இங்கு கொண்டு வந்தவர் கடவுளே. என் கணவரும் தம்பியும் இல்லாத நேரத்திலே இந்தப் பாதகன் என்னை

வலாற்காரஞ்செய்து இழுத்துக்கொண்டு போகிறான்; நீரே என்னை இரட்சிக்கவேண்டும்" என்று கதறினாள். "அஞ்சாதே, சானகி" என்று அவளுக்குத் தைரியம் கூறியபின், இராவணனைப் பார்த்து, "நீ பெருஞ் சூரன்; ஆண்பிள்ளைகள் வீட்டிலில்லாத நேரத்திலே பெண்ணைத் திருடிக் கொண்டுபோகிற பராக்கிரமசாலி நீ; நான் முதியோனாயினும் என்கையிரண்டும் இருக்கையில் நீ இவரைக் கொண்டுபோவதில்லை; நீ ஆண்பிள்ளையானால் இறங்கு தேரைவிட்டு; எடு உன் வாளை; போர்செய்வோம், வா" என்றுசொல்லிக் கதையை நிலத்தில் எறிந்து விட்டு வாளை உறையினின்றும் உருவினான் சடாயு. இராவணனும் வாளை எடுத்துக்கொண்டு தேரினின்றுங் குதித்துச் சடாயுவோடு போர்செய்யத் தொடங்கினான். இருவருக்கும் சிறிதுநேரம் வாட்போர் நடந்தது. முதியோனாகிய சடாயு இராவணனை எதிர்த்துப் போர்செய்யத் தேகபலமில்லையாயினும் மனோவீரங் குறைந்தவனல்லன். தன்னாலானமட்டும் சீதையைக்காக்க முயன்றான். ஆயினும் ஈற்றில் இலங்கைவேந்தன் சடாயுவின் இரண்டு தோளையும் வெட்டவே சடாயு தரையில் விழுந்தான். இராவணன் சீதையோடு தேரிலேறி இலங்கையை நோக்கிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. இராம இலக்குமணர்

இலக்குமணன் இராமன்போன திசையைநோக்கி அவனைத் தேடிச்செல்கையில் அவன் தனித்தவனாய் மானொன்றுமின்றி வரக்கண்டான். இலக்குமணன் இராகவனைப்பார்த்து "அண்ணா, இவ்வளவு நேரஞ் சென்றதேன்? கறுப்பனெங்கே? மான் ஒன்றுங் கிடைக்கவில்லையோ?" என்றான். "கறுப்பனும் நானும் இரண்டுகாதமல்ல மூன்றுகாதம் போயிருப்போம்; மான் ஒன்றும் காணவில்லை. வழிநடந்த களைப்பினால் நான் ஒரு மரத்தடியிற் படுத்து ஒரு நாழிகை மெய்மறந்து தூங்கினேன்; கறுப்பனும் என்னருகிற் படுத்திருந்தான். சிறிதுநேரத்துள் 'இராமா, இராமா, என்னைக்கா' வென்ற சத்தங் கேட்டுத் திடுக்கிட்டு நித்திரைவிட் டெழுந்தேன்; கறுப்பனை ஒருபுலி காவிக்கொண்டு ஓடக்கண்டேன். நான் புலியைத் துரத்திக்கொண்டோட, புலி கறுப்பனை விட்டுவிட்டு ஓடிப்போயிற்று. கறுப்பன் குற்றுயிரோடு கிடந்தான்; 'இராமா நான் உனக்குப் பொய்சொன்னேன்; கடவுள் என்னைத் தண்டித்தார்; நான் பாண்டிநாட்டா னல்லேன்; என் பெயர் கறுப்பனன்று, என்பெயர் மா—மா—மா' என்றான். அதற்குள் அவனுயிர் போயிற்று. ஒரு கிடங்கு வெட்டி அவனைப் புதைத்துவிட்டு அங்கிருந்த ஒரு குளத்திலே ஸ்நானஞ்செய்துவிட்டு வருகிறேன். நீ ஏன் சீதையைத் தனியேவிட்டு வந்தாய்?"

இப்படி இராமன் பேசிக்கொண்டுவரவே பன்னசாலையை இருவரும் அடைந்தார். உள்ளே சென்றபோது சீதையைக் கண்டிலர். உடனே அக்கம்பக்கத்தில் அவளைத் தேடினர். "சீதை எங்கே ஒளித்துநிற்கிறாய்? வெளியே வா; எனக்கு நிரம்பப் பசிக்கிறது" என்றான் இராமன். பின் அவளைத் தேடிச்செல்ல, ஒரு தேர்த்தடமும் குதிரைக் குளம்புகளின் சுவடும் ஓர் ஆடவன் அடிச்சுவடும் கண்டனர். உடனே காரியம் விளங்கிற்று. தாமிருவரும் இல்லாத நேரத்தில் எவனோ வந்து சீதையைத் தேர்மேலேற்றிக்கொண்டு போயிருக்கவேண்டும். தேர்த்தடமும் குதிரைக்குளம்பின் சுவடும் போன வழியே இருவரும் போயினர்.

பொழுதுபடும் நேரத்தில் யாரோ ஒருவன் அலறுவதைக்கேட்டு அவனிடம் ஓடினர். அருகிற் போனபோது இரண்டுகையும் இருபுறமும் விழுந்து கிடக்க, அடியற்ற மரம்போல் ஒருவன் 'ஐயோ! ஐயோ!! இராமனைக் காணேனே! என்னுயிர் போகுமுன் வந்தால், சொல்லிவிட்டுச் சாகலாமென் றிருந்தேனே" என்ற சத்தத்தைக்கேட்டு, "நான்தான் இராமன்; வந்தேன், வந்தேன்" என்று ஓடினான் இராகவன். அங்கு விழுந்துகிடந்தவன் சடாயுவென இராமனறிந்தான். "ஐயா, ஐயா, என்ன இது? யார் உமது கையை வெட்டினவன்?" என்றான் இராமன். மூடியிருந்த கண்ணைத் திறந்து, "இராமா, வந்துவிட்டாயா? சீதையை இராவணன் தேர்மேலேற்றித் தெற்கே போவதைக் கண்டேன். உடனே ஓடி முன்னின்று தேரை மறித்தேன். சீதையை விட்டுவிட்டுப்போ என்று கழறினேன்; வாட்போருக்கு அழைத்தேன்; என் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையையும் வெட்டிவிட்டுச் சானகியோடு சென்றான் பாதகன்" என்றான் சடாயு. தங்கள்நிமித்தம் சடாயு கை இரண்டுமற்றுச் சாகக் கிடப்பதைக்கண்ட இராமனும் இலக்குமணனும் கோவென்று புலம்பினர். சடாயு, "அழவேண்டா; இதோ தசரதர் வந்து என்னை அழைக்கிறார்; நான் போகிறேன். போகு முன்னே உன்னைக்கண்டு, சீதையைக் கொண்டு போனவன் யாரென்று உனக்குச்சொல்ல எனக்குக் காலங்கிடைத்ததே" என்று சொல்லி உயிர் துறந்தான். வீரர் இருவரும், தந்தையின் நண்பனும் சீதையைக் காக்கவிரும்பி உயிர் துறந்தவனுமாகிய சடாயுவின் உடலை எடுத்துத் தகனஞ்செய்துவிட்டு, அன்றிரவு அவ்விடத்திலே தங்கி, வைகறையில் எழுந்து தெற்குநோக்கிச் சென்றனர். இவ்வாறு இரண்டுமூன்று நாள் தேடியும் சீதையைக் காணவில்லை.

இராவணனெங்கே? தேரெங்கே? சீதையெங்கே?

17. மதங்கமுனிவர் ஆச்சிரமம்

பஞ்சவடியைவிட்டுப் புறப்பட்டுப் பலநாளாயின. "இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டு போனானோ? வேறெங்கு கொண்டுபோனானோ? சீதையைக் கற்பழித்தானோ? அவனெண்ணத்துக்கு உடன்படாத சீதையைக் கொன்றானோ? சீதை சாகும்பொழுது என்னசொல்லி அழுதாளோ?" என்று ஏங்கினான் இராமன். சீதையின்பொருட்டும் இராமன்பொருட்டும் கலங்கினான் இளையவன்.

இப்படி இருவருங் கலங்கிச் சீதையைத் தேடிக் கொண்டுவர, ஒரு முனிவர்ஆச்சிரமம் கண்ணுக்குத் தென்பட்டது. இரவை அங்கே கழிக்கலாமென்று இருவரும் அங்கு சென்றனர்.

இவ்வாச்சிரமம் மதங்கமுனிவருடையது. இது கிட்கிந்தைநாட்டுக்கு அருகேயுள்ளது. கிட்கிந்தைக்கு அரசன் வாலி என்பான். இவனது கொடி குரங்குக் கொடி. வாலி மகாவீரன். தன்னை மற்போருக் கழைத்த சத்துருவொருவனை வாலி பின்தொடர்ந்து சென்று ஒருவருஷமாகியும் அவன் கிட்கிந்தைக்குத் திரும்பவில்லை. 'மாற்றான்கையால் வாலி மாண்டான் போலும்' என்று எண்ணின கிட்கிந்தையின் குடிகள் வாலியின் தம்பி சுக்கிரிவனை முடிசூட்டி இராசாவாக்கினர். சுக்கிரிவன் கிட்கிந்தையை ஆண்டுவந்தான். பல மாதங்களாகப் பகைவனைத் தொடர்ந்துசென்ற வாலி அவனைக் கொன்றபின் நகரத்துக்குத் திரும்பினன். இங்கு சுக்கிரிவன் ஆள்வதைக்கண்டு அவனைச் சினந்து சீறிக் கொல்ல எத்தனித்தான். அவன் கைக்குத் தப்பியோடின சுக்கிரிவனும் அவன் தோழன் அனுமனும் வேறு சிலரும் மதங்கமுனிவராச்சிரமத்தில் வந்து "அடிகள் சரணமே சரணம்" என, முனிவரும் அவருக்கு அபயங்கொடுத்து, "வாலி என்னாச்சிரமத்துள் வரான்; நீவிர் அச்சமின்றி இங்கு தங்குமின்" என அங்கே தங்கினர். சுக்கிரிவன் மனைவியை வாலி மணந்து தம்பியைக் கொல்ல எண்ணின எண்ணத்தை மறந்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலி தம்பியை மறந்தானேனும், தம்பி தமையனை மறந்தானல்லன். ஒருநாளில்லாவிட்டால் வேறொருநாள், இங்கில்லாவிட்டால் வேறெங்கேனும் வாலி தன்னைக் கொல்வான் என்ற அச்சம் சுக்கிரிவனுள்ளத்திற் குடிபுகுந்தது. அன்றியும், தன் மனைவியை அபகரித்துக்கொண்ட பாவியைக் கொன்றாற்றான் தனக்குத் திருத்தியுண்டாகும் என்று நினைத்தான் சுக்கிரிவன். "அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாசமெல்லாம் பேய்" என்பது பழமொழி. அன்னியனொருவனைக் காணும்போதெல்லாம் 'இவனை வாலியனுப்பினான் என்னைக் கொல்ல' என்று கலங்குவான் இவன். இப்படி நாடோறும் கலங்கின நெஞ்சினனாகிய சுக்கிரிவன் இராமலக்குமணரை மதங்கமுனிவ ராச்சிரமத்திற் கண்டபோது, 'இவரை வாலியனுப்ப வந்தனரிங்கு; இவர் என்னைக் கொல்வது திண்ணம்' என்று தன் தோழருக்குக் கூறினான். இதைக்கேட்ட அனுமன், "விடு, விடு, வீண் அச்சம்; உன்னைக் கொல்ல நினைப்பதைத்தவிர வேறு வேலையில்லையோ வாலிக்கு? ஆயினும், வந்தவர் யாவர் என அறிந்து வருவேன்; அதுவரையிலும் உன் மலைவீட்டில் நீயிரு" எனச் சுக்கிரிவனுக்குச் சொல்லி, இராமஇலக்குமணர்பாற் சென்றனன். "ஐயன்மீர்! நீவிர் எந்நாட்டினீர்? எவ்விடத்தீர்? இங்குவந்த காரணம் யாது? சொன்மின்" என்றான் அனுமன். "நாங்கள் கோசலநாட்டேம். எம் நாடுவிட்டுப் பல்லாண்டு சென்றன. பஞ்சவடியில் வசித்துவந்தேம். என் மனைவியை இராவணன் எடுத்துச்சென்றான் என்று கேள்வியுற்று அவளைத் தேடிப் புறப்பட்டு இங்கு

வந்தேம். அவளை இன்னும் கண்டிலேம். நீவிர் யாரேனும் அவளைக் கண்டீரோ?" என்றான் இராமன்.

உடனே அனுமன், "ஆம், ஆம்; இன்று மூன்றுநான்கு தினத்துக்குமுன்னே இராவணன் தேர்மீது தெற்கே போகக் கண்டேன்; தேரில் ஒரு பெண்ணையும் கண்டேன். நீர் சொல்வதைக் கேட்கையில் அப்பெண்ணே நும் மனைவியார் போலும். அதுநிற்க, இராவணன் வேந்தர் வேந்தன். இலங்கை கடலுக்கு அப்பாலுள்ளது; அவனது சேனை கடலினும் பெரிது. நும் மனைவியாரை நீவிர் மீட்டுவர விரும்புதிரேல் யான் ஓர் உபாயஞ் சொல்வேன்: இவ்வாச்சிரமத்தில் ஒரு மலையுள்ளது; அம்மலைமீதில் ஒரு கோட்டையுள்ளது: அங்கு சுக்கிரிவர் வசிக்கின்றார்; அவர் கிட்கிந்தையின் இளங்கோ. நீவிரிருவிரும் இப்போது என்னோடு வருவீராயின் நும்மைச் சுக்கிரிவரிடம் அழைத்துச் செல்வேன். அவர் தக்க உபாயஞ் சொல்வார். இராவணன் எடுத்துச்சென்ற நங்கையாரை மீட்டற்கு வழி இதுவே" என்றான். இருவரும் சம்மதித்து அனுமனோடு புறப்பட்டனர். அனுமன், "நாம் ஏறும்மலை மிகச் செங்குத்துள்ளது. இவ்விளஞ்சிங்கம் ஏறும்; நீவிர் மிகக் களைத்துளீர். நீர் என் தோள்மேலேறியிருப்பின் நும்மைத் தூக்கிச் செல்வேன்" என்றான். முதலில் இராமன் அதற்கு இணங்கிலனேனும் இலக்குமணன், "அண்ணா! நீங்கள் மிகக் களைத்திருக்கின்றீர்கள்; சீதையைப் பிரிந்தபின் வாட்டமதிகம்; இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வது சரி; இவர் தோள்மேலேறி வாருங்கள்; நான் அருகில் நடந்துவருகின்றேன்" என்றான். அதற்கு இராமன் இணங்க, அனுமன் இராமனைத் தோளிலேற்றி, இலக்குமணன்கையைத் தன்கையாற் பற்றிக்கொள்ள, மூவரும் சுக்கிரிவனிருக்குமிடம் சேர்ந்தனர்.

18. வாலிவதம்

தன்னிடம்வந்த இராம இலக்குமணரைச் சுக்கிரிவன் அன்போடுபசரித்தான். அனுமன், இராசகுமாரர் வரலாற்றைச் சுக்கிரிவனுக்கு விவரித்தான். அதன்பின் சுக்கிரிவன் தன்கதையை இராமனுக்குக் கூறினான்: தக்க காரணமொன்றுமின்றி வாலி என்னை என் நாட்டிலிருந்து துரத்தினதுமன்றி, என் மனைவியையும் அபகரித்துக்கொண்டான். அவனைக் கொன்று என் மனைவியை மீட்டுத்தருவீரேல் நானும் என் சேனைகளின் உதவியைக்கொண்டு சீதையை மீட்க உமக்கு உதவிபுரிவேன்" என்றான். இராமன் அதற்கு உடன்பட்டான். இராமன் சுக்கிரிவனை நோக்கி, "நீ போய் வாலியை உன்னோடு மற்போர் செய்ய அறைகூவு. நீவிர் இருவீரும் போர் செய்கையில் நான் ஒரு மரத்தின்பின் ஒளித்திருந்து ஒரு வாளியால் அவனை எய்து கொல்வேன்" என்றான். அவ்வாறே சுக்கிரிவன் மற்போருக் கழைக்க, வாலி வர, இருவரும் மலைந்தனர். உடன் பிறந்தார் இருவரும் ஒருவனோடொருவன் மலையப் பார்த்துநின்ற இராமன், இவருள் எவன் வாலி எவன் சுக்கிரிவன் என வேற்றுமை கண்டிலன்.

ஆகவே அவன் அன்று வாலியைக் கொல்ல முயல வில்லை. சுக்கிரிவன் தோற்று, வாலிகைக்குத் தப்பி ஓடிவந்து, "இராமரே, நன்றுசெய்தீர்! இன்று நான் தப்பினது என் தாய்செய்த புண்ணியம்; உம்மை நம்பி மோசம்போனேனே!" என்றான். இராமன் தான் அன்று வாளாவிருந்ததற்குக் காரணங்கூறி 'நாளைக்கும் நீ போய் அறைகூவு. போகுமுன் ஒரு தாரணிந்துசெல். அப்பொழுது வாலி இன்னா னென்று யானறிவேன். நாளை வாலி சாவது மெய்" என்றான். சுக்கிரிவன் கழுத்தில் ஒரு பூமாலை சூடிச் சென்று மற்போருக்கு வரும்படி வாலியை அறை கூவினன். உடனே வாலியும் வரப்புறப்பட்டான். அப்பொழுது அவன் மனைவி தாரை வாலியை நோக்கிக் கூறுவாள்:

"ஐய! இத்தனைகாலம் உம்மையஞ்சி மதங்க முனிவ ராச்சிரமத்தில் ஒளித்திருந்த உம் தம்பி யாருக்கு இப்போது இங்கேவரத் தைரியம் வந்த தெப்படி? அன்றியும் நேற்றுத் தோற்றோடினவர் இன்றுவந்து அறைகூவுவது என்ன ஆச்சரியம்! தமக்குத் தக்க துணையின்றி இப்படிச் செய்யா ரொருவரும். மேலும் நானொரு சொல் கேள்வி யுற்றேன். கோசலநாட்டு மன்னன் தசரதன்மகன் இராமன் இங்கு வந்துள்ளானாம். அவனும் சுக்கிரி வரும் பெரு நண்பினராம்; சுக்கிரிவருக்குத் துணைநிற்கவும் இராமன் உடன்பட்டிருக்கிறானாம். இவற்றை யோசியாது நீர் இப்பொழுது செல்வது புத்தியன்று."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக்கேட்ட வாலி :

‘‘‘ நுண்ணறி வுள்ள நூல்பல கற்பினும்
பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே

என்றது சும்மாதானா? உன் பேதைமையை இன்று காட்டினாய். அறமே உருவெடுத்தாற்போன்ற தசரதனுக்கு மகனாய்ப்பிறந்த இராமன் அநியாயம் செய்வானா? அன்றியும், இராமனும் பரதனும் ஒருவன்மேலொருவன் எத்துணை அன்புடையா ரென்பதை நீ அறிவாயோ? இவ்வாறு சகோதர சிநேகத்துக்கு இலக்கியமான இராமன், வாலி சுக்கிரிவராகிய எங்களிருவரில் ஒருவனை யடுத்து மற்றவனைக் கெடுப்பானோ? இனி இப்படிப் பேய்ச் சொல் பேசாதே’’ என்றுசொல்லிப் போருக் கேகினான். வாலியும் சுக்கிரிவனும் மற்போர் செய்கையில் திடீரென ஓர் அம்பு பறந்துவந்து வாலியின் மார்பைத் துளைத்தது. உடனே வாலி நிலத்தில் விழுந்தான். விழுந்ததும், இவ்வாறு ஒளித் திருந்து தன்மேல் அம்பெய்தவன் யாவனோ? என அதிசயித்தான். உடனே தன் கையொன்றினால் மார்பிற் தைத்த அம்பைப் பலத்தோடு பிடுங்கிப் பார்க்க, அதில் இராமன் என்ற பெயர் பொறித் திருந்தது. ‘‘ இராமனா இப்படிச்செய்தான் ? ’’ என்று ஆச்சரியத்தோடு கூறுகையில், மரத்தின்பின் ஒளித் திருந்த இராமனும் வெளியே தோன்றி வாலியை யணுகினான். அவனைக் கண்டவுடன் வாலி சொல்லுவான் :

‘‘ இராமா, என்னசெய்தாய்? பழியில்லாத உன் குலத்துக்கு உன்னாற் பழிவந்ததே! நீ தசரதன்

மகன் என்றதை மறந்தாயோ? பரதனுக்கு அண்ணன் நீயென்பது உன் நினைவை விட்டுப் போயிற்றோ? நான்உனக்கு என்ன தீமைசெய்தேன்? சீதையை இழந்தபின் உன் புத்தி தடுமாறிற்றோ? இராவணன் உன் மனைவியை எடுத்துக்கொண்டு போனால், அதற்கு வாலியைக் கொல்லென்று மனு நூல் கூறிற்றோ? நானும் என் தம்பியும் ஒருவனை யொருவன் பகைத்தால் எங்களிருவரையும் சமாதானப்படுத்துவதன்றோ உன் கடமை? என்னைக் கொல்லலாமோ? அப்படிக் கொல்லநினைத்தாயாயின் என்னைப் போருக்கழைக்க நீ வரவேண்டாவோ? ஒளித்திருந்து அம்பெய்யும் ஆண்மை எங்கு கற்றாய்? வசிஷ்டரும் விசுவாமித்திரரும் உனக்குப் போதித்தவை எல்லாம் இதுதானோ? ஓ இரகுவே, அரிச்சந்திரமன்னா, தசரதசக்கரவர்த்தீ, உங்கள் பேரைக்கெடுக்கப் பிறந்தானே இராமன்!’’

‘‘ நூலி யற்கையும் நுங்குலத் துந்தையர்
போலி யற்கையும் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே.’’

அதற்கு இராமன், ‘‘பொறு, பொறு; வாலி, உன் பேச்சை யடக்கு; குற்றஞ்செய்யாத தம்பியை அவன் நாட்டைவிட்டுத் துரத்தினதுமன்றி, அவன் மனைவியைக் கற்பழித்தநீ நீதிமான்போலப் பேசத் தலைப்பட்டாய்! உன்போற் பாதகரை அழிப்பதன்றோ க்ஷத்திரிய தருமம்? என்கையில் நான் வில்லைப் பிடித்திருப்பது வேறென்னத்திற்கு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். உடனே வாலி "நான்செய்தது குற்றமாயின், என்னைக்கொல்வது க்ஷத்திரிய தருமமாயின், குற்றஞ்சாட்டப்பட்டவனை விசாரியாமற் தண்டிப்பது க்ஷத்திரிய தருமமோ? ஒளித்திருந்து அம்பெய்யும் வீரா, வெட்கமில்லாமற் பேசுகிறாயோ?" என்றான்.

தான் சாக இரண்டொரு விநாடிதான் இன்னுமுண்டென்று கண்ட வாலி, "நீ எனக்குச் செய்த பிழையெல்லாம் நான் உனக்கு மன்னிக்கிறேன். இராமா, உன்னிடம் ஒரு வரங் கேட்கிறேன், தா" என்றான். "நீ கேட்கும் வரம் யாது?" என்று இராமன் வினவ, "என்மகன் அங்கதனை உனக்கு அடைக்கலமாகத் தந்தேன். நீ என்னைக் கொன்றாலும், உன்னை நான் நம்புவேன்; சுக்கிரிவனை நம்பேன். சுக்கிரிவனுக்குப் பின் என் மகன் அங்கதனே கிட்கிந்தைக்கு இராசனாவான் என்று நீ எனக்கு வாக்குத்தரல் வேண்டும்" என்றான் வாலி. உடனே இராமன், "வாலி நான் உனக்குத் துரோகஞ்செய்தேன். நான் என் பிழையை உணருமுன்னமே நீ என்னை மன்னித்தாய். அம்மட்டோ? துரோகியாகிய என்னை நம்பி உன் மகனை எனக்கு அடைக்கலமாகக் கொடுத்தாய். நீயே பெரியவன்; உன் புகழே புகழ்; உன் குணத்தால் நான் தூயனானேன். நீ அஞ்சற்க; அங்கதனை என் கண்மணிபோலக் காப்பேன்; சுக்கிரிவனுக்குப் பின் அங்கதனே இராசனாவான்" என்றான். உடனே வாலி அருகினின்ற அங்கதனை அழைத்து அவன் கையைப்பிடித்து இராமன்கையில் வைத்து, "இதோ உன்மகன்; இதோ உன் தந்தை" என்று சொன்னவுடனே வாலியின் ஆவி பரமபதமடைந்தது.

19. சுக்கிரிவ பட்டாபிஷேகம்

வாலி மடிந்தவுடன் அவன் உடல்மேல் விழுந்து, தாரை, சுக்கிரிவன் அங்கதன் முதலாயினோர் புலம்பினர். அப்பால் அங்கதன் தந்தைக்குச் செய்ய வேண்டிய கடனெல்லாம் செய்துமுடித்தான். அதன்பின் இராமன், தான் எந்நகரத்துள்ளும் போகலாகாது என்ற கட்டளையை மறவாதவனாய் இலக்குமணனைக்கொண்டு சுக்கிரிவனுக்கு முடிசூட்டுவித்தான். பின் மழைக்காலந் தொடங்கிற்று. "கார்ப்பருவம் முடிந்தவுடன் என் சேனைகளிற் சிலவற்றைப் பற்பல திசையிலும் அனுப்பிச் சீதையைத் தேடுவிப்பேன்" என்றான் சுக்கிரிவன். மழைக்காலம் முடியுமட்டும் இராமன் தம்பியோடு மதங்கமுனிவ ராச்சிரமத்திலே தங்கினான். மழைக்காலம் முடிந்தும் சுக்கிரிவன் சீதையைத்தேட ஒரு முயற்சியும் செய்திலன். பலநாட் காத்திருந்தபின்பு இராமன் இளையவனைச் சுக்கிரிவனிடத்தில் அனுப்பினான். தமையனாலே துரத்தப்பட்டுப் பல்லாண்டு முனிவராச்சிரமத்தில் ஒளித்திருந்த சுக்கிரிவன் திடீரென முடிசூட்டப்பட்டவுடன், 'காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் நுழைந்தாற்போல' என்றபடி தன்னைமறந்து குடித்துவெறித்து எல்லாச் சிற்றின்பங்களிலும் முழுகியிருந்தனன். இவனைக்காண, இலக்குமணன் காலருத்திரனைப்போலக் கோபாவேசத்தோடு போனான். போயும் சுக்கிரிவன் தன் நிலையை உணர்ந்தானல்லன். இலக்குமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தோடு வருவதைக்கண்ட தாரை சுக்கிரீவனைக் குடிவெறியினின்றுந் தட்டியெழுப்பி, இலக்குமணன் புலிபோல் வந்திருப்பதை அறிவித்துவிட்டு, தானே முதலிற்சென்று இலக்குமணனை நமஸ்கரித்தாள். தாரை அமங்கலியாய்வந்து தன்னை நமஸ்கரித்ததைக் கண்ட இலக்குமணன் அயோத்தியில் தன் தாய் சுமித்திரையும் இப்படித்தானே அமங்கலியாய் வாழ்கின்றாள் என்ற எண்ணம் வரக் கோபத்தைவிட்டுத் துக்கத்திலாழ்ந்தான். பின்பு சுக்கிரிவன் வந்து தோன்றினான். அவனைக் கண்டதும் இலக்குமணன் சினந்து, "இன்னும் மழைக்காலம் முடிந்திலதுபோலும். நீ இராமனுக்குச் சொன்னசொல் நினைவிலிருக்கின்றதோ?" என்றான். இலக்குமணன் சொன்னசொல் தன் நெஞ்சைச்சுட, தான் தனக்குப் பேருதவிசெய்த இராகவனையும் மறப்பித்த மதுபானத்தை அன்றே விடுவதாகவும் தான்செய்த அபராதத்தை இராமன் மன்னிக்கவேண்டுமென்றும் வேண்டினான் சுக்கிரிவன். அதன்பின் தன்சேனையின் ஒரு பாகத்தை நாலாகப்பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்து எங்கும்போய்ச் சீதையைத் தேடிவரப் படைகளை அனுப்பினான். தெற்கே போன படைக்குத் தலைவன் அனுமன். இராமன் அனுமனிடம் தன் கணையாழியைக் கொடுத்து, அதைச் சீதையிடஞ் சேர்ப்பிக்கவேண்டும் என்றதுமன்றி, சீதைக்குந் தனக்கும்மட்டும் தெரிந்தவையும் வேறொருவருக்குந் தெரியாதவையுமான சில விஷயங்களை அனுமனுக்கு எடுத்துச் சொல்லி, "இவற்றைநீ சீதைக்கெடுத்துரைப்பையேல் நான் உன்னை அனுப்பியதை அவள் நம்புவாள்" என்றான். இராமனிடம் விடைபெற்ற அனுமன் தெற்கே பாண்டிநாடுமட்டும் வெவ்வேறிடங்களிற் சீதையைத்தேடியும் எங்கும் அவளைக் காணாமல், மதுரைக்குக் கிழக்கேயுள்ள கடற்கரைக்கு வந்து, அங்குநின்று இலங்கைக்குப்போகும் ஒரு தோணியைக்கண்டு, சேனையையெல்லாம் அங்கே நிறுத்திவிட்டு, தான் தன்னந்தனியனாய் இலங்கைக் கரையை யடைந்தான்.

20. இலங்கை

பஞ்சவடியினின்று சீதையோடு புறப்பட்ட இராவணன் வழியிலெங்குந் தங்காமல் இலங்கைவந்து சேர்ந்தான்.* சேர்ந்தவுடன் இராசதானியாகிய இலங்காபுரியையடுத்த அசோகவனத்திலே சீதையை யிருத்தினான். சீதைக்குக் காவலராகப் பெண்கள் பலரை நியமித்தான். அவருளொருத்தி திரிசடை என்பாள். திரிசடை இராவணன்தம்பி விபீஷணன் மகள். [இராவணன் சீதையை இலங்காபுரியிலே கோயிலொன்றிலே அந்தப்புரத்திலே இருத்தாமல்

* இலங்கையென்பது ஒரு பெருந்தீவுக்குப் பெயர். அன்றியும் இலங்கைத்தீவிலே இலங்கையென்றொரு நகரமுமிருந்தது இந்த நகரத்தை இலங்காபுரியென்றுஞ் சொல்லுவர். தற்காலத்துள்ள ஈழமண்டலமே இராவணனது இலங்கைத் தீவென்பதற்கு ஐயமின்று. இராமாயணத்திற் கூறப்படும் இலங்கைத்தீவும் சிங்களத் துவீபமும் ஒன்றேயாயினும், இலங்காபுரியென்னும் நகரம் இருந்தவிடமுந் தெரியாமல் அழிந்துபோயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகவனத்தில் வைத்ததற்கு நியாயம், இராமன் வனவாசியாயிருக்க, தான் நகர்வாசியாயிருக்கச் சீதை உடன்பட்டாளில்லை. அன்றியும் இராவணன் விருப்பத்துக்கிணங்கி அவனோடுவாழச் சானகி சிறிதுஞ் சம்மதித்தாளில்லை. இராவணன் பரதாரத்தை இச்சித்துச் சீதையைப் பஞ்சவடியிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவந்த பாதகனெனினும், இணங்காத ஒருபெண்ணையும் வலாற்காரஞ்செய்து கற்பழிக்கும் அதிபாதகனல்லன். நாளடைவிலே சீதை மனம்மாறித் தன் மனைவியாவதற்குச் சம்மதிப்பாளென்றும் அப்படிச் சம்மதித்த பின்பே தானவளை மணஞ்செய்வதென்றும் இராவணன் காத்திருந்தான்.] ஒவ்வொருநாளும் அசோகவனத்திற்சென்று நயவசனங்கூறியும் அச்சுறுத்தியும் ஒருபயனுமின்றித் திரும்புவான். அவளுக்குக் காவலராகவைத்த பெண்களையும் அவளுக்குப் புத்திசொல்லும்படி கட்டளையிடுவான். அவருள், திரிசடையொழிந்த ஏனைய பெண்களெல்லாரும், சீதை இராவணன் மனைவியாவதே தக்கதென்று அவளுக்குப் புத்திசொல்லி வருவார்கள். திரிசடையோ பெண்களுள் உத்தமி. அவள் தந்தை விபீஷணனும் சுகுணசம்பன்னன். திரிசடை நாடோறுஞ் சீதையைத் தேற்றிக் "கடவுள் நும் கணவனாரை நும்மிடம் விரைவிற் கொண்டுவந்து சேர்ப்பர்; ஒன்றையும் அஞ்சவேண்டா" என்று ஆறுதல் சொல்லுவாள். திரிசடை தேற்றச் சீதை தேறுவாள் சிலநாள்; திரிசடை தேற்றவும் தேறாள் சிலநாள். "என் வினைப்பயனை நான் அனுபவித்தல் வேண்டும். கணவன் சொல்லை மீறிவந்த பாவிநான்;

களங்கமற்ற மைத்துனன்பால் ஐயமுற்று நிந்தித்த பாவி நான். இவை இப்பிறப்பில் நான்செய்த பாவங்கள். கடந்த பிறப்புக்களில் யார் யாருக்கு என்னென்ன பாவஞ் செய்தேனோ? என் கணவர் இன்னும் எனபால் விருப்புளரோ? அல்லது வெறுத்துத் தள்ளினரோ? ஐயோ! இதை எனக்குச் சொல்வார் யார்?

"பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தால்
ஆவிக் குறுதுணையார் ஐயா, பராபரமே.

"ஓயாதோ என்கவலை? உள்ளேயானந்தவெள்ளம்
பாயாதோ? ஐயா, பகராய் பராபரமே"

என்று புலம்புவாள்.

21. அனுமன்

இலங்கைக்கரையையடைந்த அனுமன் சீதையைப் பலவிடங்களிற் தேடியும் காணாமல் ஈற்றில் அசோகவனம் புகுந்தான். அவன் ஒருபக்கத்திலிருந்துவர வேறொருபக்கத்திலிருந்து இராவணன் வந்தான். இராவணன் அனுமனைக் காணவில்லை. அனுமன் இராவணனை முன்னமே கண்டுளானாதலின் அவன் யாவனென உடனேயறிந்தனன். "நல்ல சமயத்தில் இங்கு வந்தேன். அம்மரத்தினடியில் பலர்சூழ வாடியிருப்பவள் சீதைபோலும். முன்னே யான் தேரிற் கண்டபெண் இவர்தான். இதோ, இராவணனும் அங்கேதான் செல்கின்றான். நான் யாருமறியாமல் இம்மரத்திலேறியிருந்து நடப்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லாம் கவனிப்பேன். அதன்பின் யான் செய்ய வேண்டியது இஃதெனத்தெரியவரும்" என எண்ணி ஒரு மரத்தில் ஏறியிருந்தான். அவன் அசோக வனத்துள் நுழைந்ததும் மரத்தில் ஏறியிருந்ததும் யாரும் கண்டிலர். இராவணன், சீதையையணுகி, "இன்னும் எத்தனைநாள் நான் காத்திருப்பேன்? நீ யிங்கிருப்பது இராமனுக்கு எப்படித்தெரியும்? தெரியினும் அவன் இங்கெப்படிவருவான்? அவன் இங்குவந்து உன்னை மீட்பன் என்னும் வீணெண்ணத்தை விட்டுவிடு. நீ எனக்கு மனைவியாக இசைவையேல் நீயே பட்டத்துமகிஷியாவாய்; மண்டோதரி உனக்குக் குற்றேவல் செய்வாள்" எனச்சொல்லி அவள்காலில் விழுந்தான். "இராவணா! நான் பதிவிரதையென்றதை உனக்குச் சொன்னாலும் நீ அதை அறியமாட்டாய். அசுத்தனாகிய உனக்குச் சுத்தமென்பது எப்படிப் புலப்படும்? உனக்கு விளங்காவிட்டாலும் உன் மனைவி மண்டோதரியைக் கேள். அவள் பதிவிரதை. அவளுக்கு விளங்குமிது. என் கோபத்தை மூட்டாதே; எழுந்து போ" என்றாள். இராவணன் எழுந்துநின்று "என் கோபத்தை மூட்டாதே நீ; இவ்வளவுகாலமும் ஒரு பேதைப்பெண்ணென்று இரங்கினேன். நான் கெஞ்சக்கெஞ்ச நீ மிஞ்சி மிஞ்சிப் பேசுகிறாய். என் எண்ணத்திற்கு நீ உடன்படாவிடில் உன்னை உயிரோடே சுட்டெரித்து உன் சாம்பலை இராமனுக்கனுப்புவேன். இல்லையேல் என்பெயர் இராவணனன்று" என்றுகூறி அவ்விடம்விட்டுப் பெயர்ந்தான். அவன் போனவுடனே திரிசடை சீதையைப் பார்த்து, "அம்மா, நீர்

அஞ்சன்மின்; 'குரைக்கிறநாய் கடியாது' என்னும் முதுமொழி நீர் அறிந்ததன்றோ? இராவணன் உமக்கு ஒருதீங்குஞ் செய்யான். அன்றியும், சென்ற இரவில் நானொரு கனாக்கண்டேன்; ஒரு பெருஞ் சேனை இலங்கைக்குவந்து இங்குள்ள சேனையோடு பொருது எல்லாரையும் அழித்தபின் சுந்தர புருடரொருவர் உம்மை மீட்டுச் சென்றதாக" என்று தேற்றினாள்.

திரிசடை இவ்வாறுகூற, சீதை சொல்லுவாள், "இஃதென்ன ஆச்சரியம்! நீ சொன்னதுபோலவே என்கனவுமிருந்தது. நீ கனவிற்கண்ட சுந்தரபுருடர் இரகுகுலாதிப தாசரதியாரே. ஆயினும் கனவு கனவுதானே, கனவு நனவாகுமோ?" இப்படி இவர்கள் இருவரும் பேசுகையில், "மங்களம் மங்களம் இராமனுக்கு, மங்களம் எங்கள் சானகிக்கு: என்றுமென்றும் மங்களம்" என ஒருபாட்டு யாரோ பாடக்கேட்டு "இவ்வொலி எங்குநின்று வந்தது?" என இருவரும் நாலுபக்கமுஞ் சுற்றிப்பார்க்க, மரத்திலிருந்து ஒருவன் இறங்கிவந்து, சீதையை அஞ்சலி செய்துகொண்டு, முன்னே தான் பாடின பாட்டைப் பின்னும் பாடினான். அங்கிருந்த காவற்பெண்டிர் எல்லாரும் "இராவணனன்றி வேறு ஓராடவனும் உட்புகாத இவ்வனத்துள் வந்த இவன் யார்? எவ்வாறு வந்தானிங்கு? இவன் உடையையுந் தோற்றத்தையும் பார்த்தால் இவன் இலங்காவாசியல்லன்" எனத் தம்முள் ஒருத்தியோடொருத்தி பேசினர். அனுமன் பாடிமுடிந்தவுடன் அம்மா, நான் இராமதூதன்; என்பெயர் அனுமன். நுமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயகர் நும்மைப் பிரிந்தபின் இளையவரோடும் நும்மைத்தேடிக் கிட்கிந்தைக்கருகில் வந்தனர். இப்பொழுதும் இருவரும் அங்குதானுள்ளார். நீயிர் எவ்விடத்துற்றீர் எவ்வாறிருக்கின்றீர் என்று அறிந்துவரும்படி என்னை அனுப்பினர்." என்றான். அதைக்கேட்ட சீதை, "நீ சொல்வதெல்லாம் பொய்யன்று, உண்மைதானென நான் எப்படியறிவேன்? என்னை அலைப்ப இராவணன் செய்த சூதாயிருக்கலாமே" என்றாள். அனுமன், "அகத்தினழகு முகத்திலே தெரியும் என்பர் பெரியோர். நான் சொல்வது மெய்யென்பதற்கு என் முகமே சான்று; இது போதாதாயின் வேறொரு சான்று வைத்துளேன். இக்கணையாழி யாருடையது? பாரும்" என்றுசொல்லிச் சீதைகையில் அதைக்கொடுத்தான்; கணையாழியைக் கண்டது இராமனைக் கண்டதுபோலிருந்தது சீதைக்கு. கண் இமைகொட்டாமற் சிறிது நேரம் உற்று நோக்கினள். பின் இரண்டு கண்ணிலுமொற்றினள்; மார்பிலொற்றினள்; முத்தமீந்தனள். பின் தன் வலக்கை ஆழிவிரலில் அணிந்துகொண்டனள். பின் அனுமனை நோக்கி, இஃது என் நாயகர் கணையாழியே. ஆயினும் இதை அவர் உன்னிடந்தந்து எனக்கனுப்பினாரென்பதற்கு என்னசான்று? அவர் நித்திரைசெய்கையில் துஷ்டனொருவன் அவரைக்கொன்று இவ்வாழியை அபகரித்திருக்கலாமே" என்றனள். அதைக்கேட்ட அனுமன், "அம்மா, நீரும் தாசரதியாரும் தனித்திருக்கையில் அவர் நும் மடிமீது தலைவைத்துக் கண்ணுறங்குகையில், காகமொன்றுவந்து நும் இதழைக் கொவ்வைப்பழமென எண்ணிக் கொத்தத் தொடங்குகையில் நீர் அசைய, இராமர் கண்விழித்துக்

காகத்தைப் பிடித்துக் கொல்லப் போனபொழுது, நீர், "அஃறிணைப்பொருளாகிய காகம் அறிவுடையதன்று, அதைக் கொல்லல் நீதியோ?" என்று இராமரிடஞ் சொன்னவாசகம் நும்மிருவருக்குமேயன்றி வேறொருவருக்குத் தெரியுமோ? இதை எனக்குச் சொன்னவர் யார்?" என்றான். உடனே சீதை, "நான்செய்த பெரும்பிழையை மன்னிக்கவேண்டும். முன்னே அலைப்பப்பட்ட நான் உன்னை உடனே நம்பாதது இயற்கையன்றோ?" என்றாள். "அம்மா! நீர் செய்தது சரி; முழுதுஞ்சரி; நுமது புத்தியை மெச்சுகிறேன். நான் இராமதூதன்தானென்று இப்பொழுது நம்புவதால் ஆனந்தமடைகின்றேன். மங்களம், மங்களம்! இராமனுக்கு மங்களம்!" என்று சொல்லி ஆடினன். "என் பிராணநாயகர் இன்னும் உயிரோடிருக்கிறாரென்றும் என்மீது அவருக்குள்ள அன்பு சிறிதும் மாறவில்லையென்றும் அறிந்து நானும் உவகைக்கடலிற் படிந்தேன். நான் இங்கிருக்கும் நிலையைக் கண்ட நீ அதை இராகவருக்கெடுத்தோதி, இன்னுமொருதிங்களுள் வந்து என்னை மீளாவிடின் நான் இறந்துபடுவது ஒருதலையென்று கூறு. மேலும் அயோத்தியிலுள்ள என் மாமியார் மூவருக்கும் என் நமஸ்காரம் அறிவி. மிதிலையில் எந்தையார் இன்னும் உயிரோடிருப்பின், 'நுமது மகள் சீதை, இராவணன்கைப்பட்டு இலங்கையிற் சிறையுற்றுப் பலதிங்கள் வருந்தினாளேனும் நுந்தைக்கும் மிதிலைக்கும் விதேகநாட்டுக்கும் யாதொரு வசையும் வாராதபடி தன்னைக்காத்து இறந்தனள் என்றும் அறிவி. நீசெய்யும் இவ்வுதவிக்கு நான் கைம்மாறொன்றுஞ் செய்ய வல்லேனல்லேன். கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு அருள்செய்வர்" என்றாள்சீதை. அனுமன், "போதும், போதும்; இவையெல்லாஞ் செய்வது என்னாலாகாது. நீர் உயிரோடிருக்க யான் பார்த்தும் உம்மை இங்குவிட்டு நான் திரும்பிப்போய் இராமன் முகத்தில் எப்படி விழிப்பேன்? 'இவனுமொரு வீரனோ?' என்று பிறர்கூறும் நிந்தையை எப்படித் தாங்குவேன்? என்தாய் அஞ்சனை பத்தினியானால், அனுமன் இராமருக்குத் கொத்தடிமையென்பது மெய்யானால், ஏழையெனக்கு அன்னையார் சானகியார் அருள்கிடைத்தது உண்மையானால், நீவிர் இப்பொழுதே என்னுடன் வரல்வேண்டும். என்னுடன் வருதற்கு ஐயப்பாடு வேண்டா. தாசரதியாரும் குறையொன்றுஞ் சொல்லார்; வாரும்" என்று சொல்லித் தரையில் விழுந்து இரங்கினான். இதைக் கண்ட சீதை, "அனும! நீ எனக்கு மகன்; நான் உனக்குத்தாய். உன்னோடு நான்வர எனக்கு அச்சமுமில்லை, ஐயமுமில்லை. ஆயினும் எனக்கிவ்வாறு தீங்கிழைத்த இராவணனைக் கொன்று இராமர் என்னை மீளாவிடின் அவருக்கும் அவர் வில்லுக்கும் வசையல்லவோ? இராமர் என்னை மீட்டாலன்றி நான் மீளேன். என்னை நீ கண்டதற்கறிகுறியாக, நான் அணிந்திருக்குஞ் சூளாமணியை உன்கையிலே தருகிறேன். இதைக்கொண்டுபோய் என் நாயகர் கையிற் கொடு" என்றுசொல்லித் தன் சூளாமணியை அனுமன்கையிற் கொடுத்தாள். அனுமன் அதை வாங்கி இடைவாரிலிருந்த பையினுள் இட்டு அவளை நமஸ்கரித்தபின்னர் அசோகவனத்தை விட்டுப் புறப்பட்டான்.

22. இராவணன் கொலு

சீதையைவிட்டுப் புறப்பட்ட அனுமன் இராவணன் கொலுமண்டபம் புகுந்தான். அங்கு கும்பகன்னன் விபீஷணன் என்னுந் தம்பியரிருவரும் இருமருங்கிலும் இருப்ப, சிங்காதனத்திலே இலங்கைவேந்தன் வீற்றிருந்தான். அவனுக்குச் சிறிதுதூரத்திலே வேறு மந்திரிமார் இருந்தனர். இராவணன் மகன் மேகநாதன் படைத்தலைவன், கும்பகன்னன் பக்கத்திலிருந்தான். அவன் தம்பி அட்சன் விபீஷணன் பக்கத்திலிருந்தான். வாயில்காப்பாளனொருவன் மண்டபத்துட்புகுந்து, "வேந்தர்வேந்தே, அயோத்திமன்னவர் இராமசந்திரபூபதி அனுப்பிய தூதனொருவன் அனுமனென்பான் வந்து கோபுர வாயிலில் நிற்கிறான்; அவனை உள்ளேவிடலாமோ?" என்றான். "அவனை வரச்சொல்" என இராவணன் கூற, நாம் முன்னே கண்டபடி அனுமன் கொலுமண்டபம் புகுந்தான். தூதருக்கென வைக்கப்பட்டிருந்த இருக்கை பலவற்றுள் ஒன்றைக்காட்ட அதன்மீதிருந்தான் அனுமன். "இலங்கைவேந்தே! நமஸ்காரம்; கோசலநாட்டையாளும் இராமசந்திர சக்கரவர்த்தி அனுப்பின தூதன்நான்; என்பெயர் அனுமன். தூதை அறிவிக்கலாமோ?" என்றான் ஆஞ்சனேயன்.*

"சொல்லுக" என அரசன்பணிக்க, சொல்லலுற்றான் தூதன்: "பஞ்சவடியிலே நானும் என் தம்பியும் இல்லாத நேரத்திலே நீ என்மனைவி

* அஞ்சனையின் மகன் ஆஞ்சனேயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையைக் களவுசெய்து இலங்கைக்குக் கொண்டு போயினை எனக் கேள்வி; உன் ஆண்மையையும் வீரத்தையும் மெச்சுகின்றேன்; என் தேவியை விடுகின்றாயா? அல்லது உன் ஆவியை விடுகின்றாயா? சொல்" என்பதே தூது. இதைக்கேட்ட இராவணன் அங்கமெல்லாம் குலுங்கக் கைகொட்டி, "வாலியை மறைந்துநின்று கொன்ற ஆண்மகனார் என் ஆண்மையையும் வீரத்தையும்பற்றிப் பேசத் தொடங்கிவிட்டார்!" என்று விலாப்புடைக்கச் சிரித்தான். "சுக்கிரீவன் மனைவியை அபகரித்த வாலியைக் கொன்ற இராமர் தம்மனைவியைத் திருடின உம்மை கொல்லாமலிருப்பாரோ? இப்பொழுதே சீதையை விட்டுவிட்டால் தப்பினீர்; இல்லையேல் நீரும் உமது குடும்பமும் மட்டுமல்ல, இலங்கையிலுள்ளார் யாவரும் மடிவது திண்ணம்." என்றான் அனுமன்.

இராவணன் கண் இரண்டுஞ் சிவக்க, மீசை துடிக்க, "அச்சமின்றி என்முன் இவ்வார்த்தை கூறிய மக்கட் பதடியை பிடித்துக் கொன்மின்" என்று தன் சேவகருக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது விபீஷணன், "அரசே, தூதரைக் கொல்வது அநீதி. தன் அரசன் சொன்னதை இவன் சொன்னானேயன்றி வேறொன்றும் சொற்றிலன். மேலும் இவன் சொன்னவையெல்லாம் உண்மையல்லவோ? தன்னந்தனியளாய் நின்ற ஒரு பெண்ணைக் கவர்ந்துகொண்டுவந்தது ஆண்மையோ? வீரமோ? உம்மால் இலங்கைக்கு வசையுண்டாயிற்றே. சீதையை நீர் கொண்டுவந்தும் நும் கருத்து

நிறைவேறினதோ? இனியேனும் நிறைவேறுமோ? சீதையை உடனே இராமனிடம் திருப்பியனுப்புவதே தகுதி. இருபதுவருஷத்துக்கு முன்னே தாடகையையும் சுபாகுவையும் கொன்ற இளஞ்சிங்கம் இன்று கரதூஷணரையும் படைகளையும் அழித்த பராக்கிரமசாலி. அவனிடம்போன மாரீசனும் அழிந்தான். இப்பொழுதோ இராம இலக்குமணர் துணையற்றவரல்லர்; சுக்கிரீவன் அங்கதன் இருவரும் இவரைச் சார்ந்தனர். சீதையை உடனே அனுப்பிவிடுக" என்றான்.

"கேட்டபின் புத்திசொல்வது மந்திரி கடன். நீ பிரதமமந்திரியுமல்லை; உன்னில் மூத்தவன் உன்னில் விவேகி; கும்பகன்னன் வாளாவிருப்ப, வாய்திறந்து பேசவந்தாய் அறிவிலி! புண்ணியன் போலப் பாசாங்குபண்ணித் திரிகிற கபடி, என் இராச்சியத்திலுள்ளாரனைவரையும் எனக்கு விரோதிகளாக்குகின்ற சத்துரு உன்னையன்றி வேறுளரோ? இராமன் எனக்கு வெளிப்பகைவன்; அவனை நம்பலாம். நீ எனக்கு உட்பகைவன்; உன்னை ஒருகணமேனும் நம்பலாகாது; இத்தனைநாளும் பொறுத்தேன்; இனிப்பொறுக்க என்னாலாகாது. நட வெளியே, அல்லது உதைத்துத்தள்ளுவேன்" என்று இடிபோற் கழறினன் இராவணன். அப்பொழுது விபீஷணன், "என்னைப்பிடித்த சனி இன்றுவிட்டது! என்புத்தியைத் தள்ளின நீ எக்கேடு கெடினுங் கெடுக. இலங்கையையாவது காக்க முயல்வேன்" என்று எழுந்தான். உடனே கும்பகன்னன் "வெளியே போ, மடையா; நீ செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைச்செய்; நானும் மேகநாதனும் அட்சனும் மாண்டபின்னன்றோ? இலங்கைவேந்தர் மடிவார். உனக்கு உன்னுயிர் வெல்லம். சாக அஞ்சினை; இலங்கையைவிட்டு ஓடிப்போ" என்றான்.

"'கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே' என்பது பொய்யோ?" என்று பேசத் தொடங்கின விபீஷணனை எழுந்து உதைத்தான் இராவணன். உடனே மேகநாதன் விபீஷணனைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் வெளியே தள்ளி விட்டுக் கொலுமண்டபம் வந்தான். இராவணன் அனுமனைப்பார்த்து, "நீ போய் உன்னை அனுப்பின அரசனிடம் 'இராவணன் முன்வைத்தகாலைப் பின் வைக்கிறவனல்லன். நான் சீதையை விடுவதில்லை. நீ செய்வதைச் செய்' என்று சொல்; போ, வெளியே" என்றான்.

அனுமன் கிட்கிந்தைக்குத் திரும்பினன்.

விபீஷணன் தன் மகளிருக்குமிடஞ்சென்று, அவளையழைத்து, கொலுமண்டபத்தில் நடந்ததெல் லாம் அவளுக்குச் சொல்லி, "மகளே, நீ சீதா தேவியாரைத் தேற்றிக்கொண்டிரு; நான் இரா மரைச் சரண்புகுவேன். இவ்வாறு நான் செய்வது என்னையும் உன்னையும் காக்கவன்று. எனக்கு என்னுயிர் வெல்லமென்றான் கும்பகன்னன். எனக்கு ஆயிரம் உயிரிருந்தால் ஆயிரத்தையுங் கொடுப்பேன் இலங்கையைக் காத்தற்கு. இராம இலக்குமணரோடு போர்செய்து இங்கையைக் காத்தல் இயலாது. அறமே உருவெடுத்துவந்தாற்

போன்ற இராமரையும் அருளே உருவெடுத்துவந் தாற்போன்ற சீதாதேவியாரையும் அழிக்கக் காமாந் தகனாகிய இராவணனால் முடியுமோ? அவன்பக்கம் நின்று யுத்தஞ்செய்தால் நன்மை வருமோ? இவை யெல்லாம் ஒருமுறை இருமுறையல்ல, பல்லாயிரம் முறை யோசித்தபின்பே நானிவ்வாறு கொலுவிற் பேசினேன். இராவணனும் அவன் குடும்பமும் அழிந்தேதீரும். அவரைக் காக்க ஒருவராலும் முடியாது. இத்தீயனால் இலங்கையெல்லாம் அழிய வேண்டுமோ? இலங்கையிலுள்ளாரைக் காக்கும் பொருட்டே நான் இராமர்பாற் சரண்புகுகின்றேன். யார் என்னைப்பற்றி எவ்வாறு சொல்லினும் நீ என்னை நம்புவாயல்லையோ?" என்றான். திரிசடை தந்தையைவிட்டுப் பிரிவதை நினைக்க மனம்வருந்தி, கண்ணீராறாய்ப் பெருக, "ஐயா, உங்களை உங்கள் மகள் எப்பொழுதாயினும் சமுசயித்ததுண்டோ? உங்களை நான் சமுசயித்தால் வேறு யாரை நம்புவேன்? வருவனவெல்லாம் வந்தேதீரும். எல்லாம் ஈசன்செயல். நான் சீதையைப் பார்த்துக் கொள்ளுவேன்; நீங்கள் போய்வாருங்கள்" என்று சொல்லித் தந்தையின் அடியில் விழுந்து பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்தாள். விபீஷணன் இரண்டு கையாலுந் தன்மகளைத் தூக்கியெடுத்து, உச்சி மோந்து, இரு கன்னத்திலும் முத்தமிட்டு, "என் மகளை இறைவன் காக்க" என்று ஆசிகூறி அவளைவிட் டகன்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. போர்

இலங்கையைவிட்டுப் புறப்பட்ட அனுமன் தான் விட்டுவந்த சேனையை யடைந்து, அவற்றோடு கிட்கிந்தைக்குத் திரும்பினான். அங்கு சுக்கிரீவனைக் கண்டு இலங்கையில் நிகழ்ந்தனவற்றை அவனுக்குச் சொன்னபின், மதங்கமுனிவராச்சிரமத்துக்கு இராமனிடஞ் சென்றான். "எப்போது திரும்பி வருவனோ அனுமன்?" என ஏங்கின முகத்தோடு இருந்த இராமன் திரும்பிவந்த அனுமனைக்கண்டவுடனே, "இவன் இப்போது என்னசொல்வானோ?" எனவெண்ணி நடுங்கி வியர்த்தான். பேச நாவெழவில்லை. உள்ளத்தின் வருத்தமெல்லாம் முகத்திற்கண்ட அனுமன், "கண்டேன், கண்டேன், கண்டேன் சீதையை" என ஆரம்பித்தான். அச்சொல் அமிர்தம்போல நுழைந்தது இராமன் செவியில். அச்சமும் ஐயமும் நீங்கின. ஆனந்தம் முகத்தில் விளங்கினது. "இன்று எனக்குப் புத்துயிர் அளித்தாய் அனும" என்றான் இராமன். பின் அனுமன், இலங்கையில் அசோகவனத்தில் தான் சீதையைக் கண்டதும், இராவணன் அங்கு வந்து அவளுக்கு நயத்துடனும் பயத்துடனும் பேசித் திரும்பினதும், தான் சீதையைச் சந்தித்ததும், சீதை நாயகருக்குச் சொல்லியனுப்பியதும் எல்லாம் ஒன்றும்விடாமல் விரித்துரைத்தான். அன்றியும் சீதை கொடுத்த சூளாமணியையும் அரைவார்ப்பையிலிருந்தெடுத்து இராமன்முன் வைத்தான். மிதிலையிற் சானகியை மணந்த அன்று கண்ட சூளாமணியை

இராமன் ஒருநாளும் மறந்தவனல்லன். அதை மறுபடியுங்கண்ட இராமனைக் கார்பெற்ற தோகையென்பேமோ? கண்பெற்ற வாண்முகமென்பேமோ? நீர்பெற்றுயர்ந்த நிறைபுலமென்பேமோ? பாற்கடலிலிருந்துவந்த அமிர்தத்தை உண்ட தேவரும், இராமன் சூளாமணியைக் கண்டு உவப்புற்றதுபோல உவப்புற்றிலர். அனுமன் சொன்ன சொல்லெல்லாம் செவிவாயாக நெஞ்சுகளனாக மண்டினன் இராமன். "என் சீதை இன்னும் உயிரோடிருக்கின்றாளோ? இராவணன் கைப்பட்டும் கற்பழிந்திலளோ? என்னையுமின்னும் நினைக்கின்றாளோ? என்று நான் காண்பேன் என்கண்ணே" என்று பாடினன், ஆடினன் இராகவன். அதன்பின் அனுமன் தான் இராவணன் சபையிற் சென்றதும் அங்கு கண்டதுங் கேட்டதும் எல்லாம் விஸ்தரித்தான். "இனி நாம் போருக்குச் செல்வதே கடன்" என்று இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், அங்குவந்து இராமனை நமஸ்கரித்துநின்றான் விபீஷணன். விபீஷணன் வாய்திறந்து பேசுமுன்னர் அனுமன் இராமனை நோக்கி, "இவர் இராவணனுக்குக் கனிஷ்ட சகோதரர்; விபீஷணனென்னும் பெயரினர். மூதேவியோடு பிறந்த சீதேவிபோல, இராவணன் கும்பகன்னன்போலாது அறங்கிடந்த நெஞ்சினன். வேத்தவையில் அரசனைச் சிறிதும்அஞ்சாது அறமெடுத்து மொழிந்த ஆண்சிங்கம். இவர்மகள் திரிசடையார் ஒருவரே தேவியாருக்கு உற்றதுணையாவார்" என்றான். விபீஷணனும், "மன்னவரேறே, இலங்கை வேந்தனுக்கு நான் எடுத்துச்சொன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறமெல்லாம் பாலைநிலத்திற் பெய்த மழைபோல வீணாயிற்றன்றிப் பயனொன்றுந் தந்திலது.

'விதிவலியாற் கெடுமதிகண் தோன்றா தன்றே.'

"ஆகவே இராவணன் கிளையோடு நாசமுறுவது ஒருதலை. ஆயினும் அவனையும் அவன் குடும்பத்தையும் நீவிர் அழிக்கையில், குற்றமொன்றுஞ் செய்யாத பேதையரான இலங்காவாசிகளையும் அழித்து நாசஞ்செய்யேனென அபயந் தந்தருள வேண்டுமென்று உம்மைச் சரண்புகுந்தேன். சரணம், சரணம் இராகவ சரணம்" என்று இராமனடியில் வீழ்ந்தான். உடனே இராமன் அவனைத் தூக்கியெடுத்து, "விபீஷணா, துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்வதன்றோ அரசன்கடன்? அன்றி, தீயாரை அழிக்கையில் நல்லாரையும் உடன் அழிக்கலாமோ? யான் அவ்வாறு செய்யேன். நீ அஞ்சற்க. அன்றியும், இராவணனும் கும்பகன்னனும் மேகநாதனும் அட்சனும் பட்டொழிந்தால் இலங்கைக்கு அரசன் நீயன்றி வேறுயார்? உன்னை இலங்காதிபதியாக்குவேன்; நீ என்னோடிரு" என்றான். விபீஷணன், "நான் இங்கே இருப்பதுமன்றி இராவணன் செய்யும் சதியெல்லாம் அப்போதைக்கப்போதறிந்தறிந்து உமக்கு வெளிப்படுத்துவேன். இராவண சங்காரத்துக்கு வேண்டிய யாவும் யான் சொல்லுவேன்" என்றான். இப்படி விபீஷணன் பேசுகையில் அங்கு வந்தான் சுக்கிரிவன். விபீஷணன் யாரென்றறிந்த கிட்கிந்தைமன்னன் இராமனைப்பார்த்துக் கூறுவான்:

"ஐய, தாம்செய்தது என்னை? இவனை முன்பின் அறியீர். 'பிறந்தநாள்தொடங்கி அன்புபாராட்டின தமையனைவிட்டு வந்தேன்' என இவன் சொல்வது மெய்யோ பொய்யோ? மெய்யேயாயினும் இன்று தமையனுக்கு இரண்டகம்பண்ணினவன் நாளைக்குத் தமக்கு என்செய்யான்? அன்றி இவன் உத்தமனே யாகுக. நாளைக்கு இராவணன் வந்து தமது காலில் விழுந்து 'என் குற்றத்தைப் பொறுத்தருள்க, இதோ சீதை, இவ்வுத்தமியை அங்கிகரிக்க' என்பனேல் தாம் அவனை மன்னிப்பீர். அப்போது இலங்கைக்கு இராசா இராவணனோ விபீஷணனோ? சொல்லும்" என்றான். அதற்கு இராமன், "சுக்கிரிவா, ஒருகாரியத்தை யோசித்துத் துணியச் சிலருக்குப் பலநாள் வேண்டும். மதியூகிகளுக்கு இரண்டுவிநாடி போதும். இத்துணைக் காலம் அனுமன் உன்னோடிருந்தும் நீ அவனை அறிந்திலை. நான் அவனையறிவேன். இராவணன் சபையில் நடந்தவற்றுளொன்றையும் விடாமல் உண்மையறிந்தபின்பே நான் விபீஷணனுக்கு அபயங்கொடுத்தேன். நீ சொல்லுகிறபடி நாளைக்கு இராவணன் செய்வனேல் விபீஷணனை அயோத்திக்கு அரசனாக்குவேன்" என்றான். இதைக்கேட்ட அனுமன் விபீஷணனைநோக்கி, "அஞ்சன்மின், தசரதசக்கரவர்த்தி மைந்தனார் உரைதிறம்பார்" என்றான்.

இதன்பின் போருக்குவேண்டிய ஆயத்தஞ் செய்யப்பட்டன. நாற்படையோடு மலைகளையும் ஆறுகளையும் சுரங்கங்களையும் காடுகளையுங் கடந்து கடற்கரை சேர்ந்தனர். போர்த்தொழில் விரும்பாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் இராவணன்மேலுற்ற பரிவால் இன்னுமொருமுறை இலங்கைக்குத் தூதனுப்ப எண்ணி அங்கதனை விடுத்தான். அங்கதன் இலங்கை வேத்தவையை அடைந்து இராவணனைப் பார்த்து, "உம்மைக் கொல்ல மனமில்லாத இராமர் 'இப்பொழுதாயினும் சீதையை அனுப்பிவிடுவாயா? நீ ஏன் சாகவேண்டும்?' என்று சொல்லுகிறார்" என்றான். இராவணன் சிரித்து, "நன்று, நன்று உன் வார்த்தை; இராமன் போர்செய்ய அஞ்சுகிறான்; ஆயினும் வீரன்போலப் பேசுகிறான். நான் சீதையை விடுவதில்லை. அதுநிற்க, அங்கதா, நீ வாலி மைந்தனல்லையோ? உன் தந்தையை ஒளித்து நின்று கொன்ற பாதகனுக்கு நீ உதவிசெய்ய நினைத்ததெப்படி? சீச்சீ! இராமனை விட்டுவிட்டு என்னைச்சேர்; நான் உன்னைக் கிட்கிந்தைக்கு அரசனாக்குவேன்" என்றான். அங்கதன் அதைக் கேட்டு, "இராவணா, என்னே உன் கபடநாடகம்! நான் இராமர்பக்கத்திலிருந்தால் அவருக்கே வெற்றி வரும் என அஞ்சின நீ என் உதவி கேட்கிறாய். அப்படி வெளியே சொல். அதைவிட்டு 'ஆடு நனைகிறதென்று கோநாய் அழுவதுபோல' கள்ள இரக்கம் பாராட்டுகிறாய்! எந்தையார் இறக்குமுன் அவரே என்னை இராமர்கையில் ஒப்புக்கொடுத்ததை நீ அறிந்திலைபோலும். இது மன்றொன்று விரித்தல். இராமர் சொல்லியனுப்பிய சொல்லுக்கு விடை கூறு' என்றான். "முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை இராவணன் என்று முன்வந்த தூதனிடம் சொல்லியனுப்பினேனே. நான் மனம்மாறு வாலியல்லேன்" என்றான் இராவணன். "நீயும் உன் கிளையும் மாண்டீர்" என்று சொல்லிவிட்டு அங்கதன் இலங்கையைநீங்கி இராமனிடஞ் சேர்ந்தான்.

இராமன் படைகளோடு இலங்கைக்கரையை யடைந்து, படையை மூன்றணியாக வகுத்தான். வல அணிக்குச் சுக்கிரிவனையும் இட அணிக்கு இலக்குமணனையும் தலைவராக்கி, மூலபலத்துக்குத் தானே தலைவனானான் இராமன். அங்கதனும் அனுமனும் அப்போதைக்கப்போது மூன்று அணிகளுக்கும் உதவிசெய்யும்படி ஏவினான். இலங்கைப் படையையும் மூன்று அணிகளாக வகுத்தான் இராவணன். வல அணிக்குக் கும்பகன்னனையும் இட அணிக்கு மேகநாதனையும் தலைவராக்கி மூலபலத்துக்குத் தானே தலைவனானான் இராவணன். அட்சனை இம் மூன்று அணிகளில் எதற்காவது சமயத்துக்குத்தக்கபடி உதவிசெய்ய ஏவினான் இராவணன். இரண்டுசேனையும் கைகலந்தன. முதல்நாட்போரில் இராவணன் தேரிலேறி வில்லெடுத்துக்கொண்டு தனித்துவந்து இராமனைத் தனிப்போருக்கழைத்தான். இராமஇராவணரிருவரும் வேறொரு சேனையுமின்றித் தனியே மலைந்தனர். அப்பொழுது இராமன் இராவணனது தேரிற்பூட்டிய குதிரைகளை அம்பினாற் கொல்ல, இராவணன் தேரினின்றுங் குதித்து, "இராமா, நீயுங் குதி" என்று சொல்லுமுன்னரே இராமனுந் தேரினின்று குதித்து இராவணனைப் பொருதான். நெடுநேரம் இருவரும் பொருதனர். பார்த்துநின்றவர், யார் வெல்வான் யார் தோற்பான் என்று சொல்லமுடியவில்லை. ஆயினும் ஈற்றில் இராமன் தன் அம்பினால் இராவணன் சிலைநாணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுத்துவிட்டான். "நிராயுதபாணியாய் நிற்கும் இராவணனைக் கொல்லுதல் பாவம். முன்னொரு முறை வாலியைக்கொன்ற பாவம் என் மனத்தை இன்னு மழுத்துகின்றது" என இராமனெண்ணி, "இராவணா, நிராயுதபாணியாயினை, நின்னைக் கொல்லல் எனக்கு அழகன்று; புகழன்று; திரும்பிப்போ உயிரோடு. இப்பொழுதாயினுஞ் சீதையை விடு; இல்லையேல் நாளைவா சாக" என்றான்.

தேரிழந்து வில்லிழந்து நிராயுதபாணியாய்ச் சென்ற இராவணன் அவ்விரவு துயின்றிலன். அவமானம் நெஞ்சை நிரப்பிற்று. "நானின்று இராமனைத் தனிப்போருக்கழைத்தது என் மடைமை. நாளைக்கு நாற்படையோடுஞ் சென்று வெல்லுவேன்; அல்லது, போரில் மடிவேன். இராமன் என்மேலிரங்கிப் பரிந்துபேசவொட்டேன் இனி" என்று ஒருவாறு ஆறியிருந்து பொழுதுவிடிந்தவுடன் யுத்தசன்னத்தனாய் வந்தான் இராவணன். இரண்டு சேனைகளுக்கும் பலநாட்போர் நடந்தது. இரண்டு பக்கத்திலும் மாண்டார் பல்லாயிரவர். ஆயினும் இராமன் பக்கத்தில் தலைவரொருவரும் மாண்டிலர். இராவணன் சேனையிலோ நாற்படைகளிலும் பல்லாயிரவர் மாண்டதன்றி அனுமன் கையாற் செத்தான் அட்சன். இலக்குமணன் கையால் மாண்டான் மேகநாதன். கும்பகன்னனை இராமன் கொன்றான். தம்பியையும் மக்களிருவரையும் பல்லாயிரவர் சேனைவீரரையும் இழந்த இராவணன் தன்கதியை முன்னமே அறிந்தவனாய், "இனியேன் எனக்கு வாழ்வு? 'சேயோடு தான்பெற்ற செல்வம் போம்.' மேகநாதனும் அட்சனும் மாண்டபின்

நான் உயிர்வாழ்வது தகுதியோ? தம்பி கும்பகன்னா! அந்தப்பாதகனைப்போல நீ இராமனிடஞ் சரண் புகவில்லை. என்பொருட்டு நீ மாண்டாய்; உன்னை இழந்தபின் நான் உயிர்தரிப்பேனோ? சிங்கமுகனை இழந்த சூரன் மடியவில்லையோ? நானும் மடிவேன்." என்று புலம்பினான். மண்டோதரி அவன் காலில் விழுந்து, "ஐயா; இப்பொழுதாயினும் சீதையை அனுப்பிவிடுங்கள்; உங்களிடம் மங்கிலியப்பிச்சை கேட்கிறேன்" என்று கதறினாள். இராவணன், சீச்சீ! சவமே போ; நீ தாலியறுத்தால் எனக்கென்ன? சீதையைவிட்டு உயிர்வாழ்வேனோ? அவளே என்னுயிர்; அவளை நான் இராமனிடம் அனுப்புவதில்லை" என்று இடித்துரைத்தான். "ஐயா, எனக்காக உயிர்வாழ உங்களுக்கு மனமில்லையேல், உங்கள் குடிகள் பொருட்டாயினும் நீங்கள் உயிர்தரித்திருந்து அவர்களையாளல் வேண்டும். சீதையை அனுப்பிவிடுங்கள்.

'அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.'"

என்றாள் மண்டோதரி. குடிகளையாள விபீஷணன் இருக்கின்றான். அவன்தான் தருமப்பிரபு. குடிகளெல்லாரும் அவனையே நேசிக்கின்றார்கள். அவன் எப்போது திரும்பிவருவான் என்று காத்திருக்கின்றனர். நான் செத்தபின் நீயும் அவனை மணந்து கொள்; அப்போது சுமங்கலியாய் இருப்பாய். என் ஆவி சீதையே; சீதையே என்னாவி" என்றான் இராவணன். "சிவ சிவா! சிவ சிவா."* இந்தச்

* மண்டோதரி சிவனடியாள் என்பது மாணிக்கவாசக சுவாமிகள் கூற்று.

சொல்லைக் கேட்கவோ இத்தனைநாளும் உயிரோடிருந்தேன்! நீங்கள் இறந்த அன்றே என்னுயிரும் போய்விடும். இப்பிறப்பில் நான் பெறாத பாக்கியத்தை இன்னொரு பிறப்பிலாயினும் பெறுவேன்." என்றாள் மண்டோதரி.

இராவணன் போர்க்களஞ் சென்று, காலை தொடங்கிப் பிற்பகல்மட்டும், குட்டிகளைப் பறிகொடுத்த சிங்கம்போல, அச்சஞ் சிறிதுமின்றித் தன்னுயிரைக் காக்கவேண்டும் என்ற எண்ணமேயில்லாமல் எதிரிசேனையிற் புகுந்து, இங்குமங்கும் முன்னும் பின்னும் பல்லாயிரவரைக் கொன்றான். ஈற்றில் இராமன்வர, அவனோடு பொருது வலியற்று மதியற்று, "இராமா, நீயேவென்றாய்" என்று சொல்லுமுன், இராமன் வாளி அவன் மார்பை ஊடுருவிச் சென்றது. வேறோரம்பு அவன் தலையை விழுத்திற்று. சுத்தவீரன் காமப்பேய்ஆட்ட ஆடி, நாய்போற் களத்தில் விழுந்து அழிந்தான்.

24. விபீஷண கிரீடதாரணம்

போர்க்களத்தில் இராவணன் மடிந்தபோது மண்டோதரி அவன் தேகத்தின்மீது விழுந்து அழுதாள். விபீஷணனும் கண்ணீர்விட்டான். பின் இராமன் கட்டளைப்படி, இராவணனுக்கு விபீஷணன் ஈமக்கடனெல்லாஞ் செய்தான். இவையெல்லாம் முடிந்தபின்பு இராமன், தான் ஒரு பட்டணத்துள்ளும் பிரவேசிப்பதில்லை என்ற சபதத்தை மறவாது, இலக்குமணனைக்கொண்டு விபீஷணனுக்கு முடி

சூட்டுவித்தான். அப்பொழுது அங்கு இலக்குமணன் சுக்கிரிவன் அங்கதன் அனுமன் சாம்புவன் முதலிய பெருமக்கள் அவையை விளக்கஞ்செய்தார்கள். இலங்கை நங்கையரில் மண்டோதரியும் திரிசடையும் ஆங்கு விளங்கினர். மறுநாட்காலை இராமன் தங்கியிருந்த ஓர் அரசமரச் சோலைக்கு விபீஷணனும் திரிசடையும் வந்தனர். சுக்கிரிவன் முதலியோர் முன்னரே அங்குபோய் இராமனைச்சூழ இருந்தனர். விபீஷணனையும் திரிசடையையும் இராமன் கண்டவுடனே, "சீதையெங்கே? ஏன் அவள் வரவில்லை?" என்ற எண்ணம் அவனுள்ளத்திலே தோன்றின. அவன் வாய்திறந்து கேட்குமுன்னரே திரிசடை இராமனைக் கைகூப்பிச் சொல்லுவாள்: "மகாபிரபு! கடந்த இருபத்தொருநாளும் சீதாபிராட்டியார் கடும் உபவாசம்செய்து மெய்தளர்ந்தநிலையி லிருக்கின்றனர். இவ்விருபத்தொருநாளும் தண்ணீரும் உப்புமேயன்றி வேறொன்றும் உட்கொண்டிலர். இன்றுதான் அவர் பாரணம்பண்ணும்பொருட்டுத் தோடம்பழச்சாற்றைச் சருக்கரையிற் கலந்து கொடுத்தேன். அவர் தம் இயற்கைநிலையடையக் குறைந்தபட்சம் இன்னும் ஒருமாதஞ்செல்லும். அதன்பின்புதான் பயணஞ்செய்யமுடியும். அதுவரையில் சக்கரவர்த்தியவர்களும் இலங்கையில் இருந்து, பின்பே பிராட்டியாரை அழைத்துக் கொண்டு அயோத்திக்கேகலாம். தாங்கள் அவரை இப்பொழுது பார்க்க விரும்பின் வந்து பார்க்கலாம். ஆயினும் இன்னும் பத்துநாளைக்குப்பின் பார்ப்பதே உசிதம்." இதைக்கேட்ட இராமன், "ஆக்கப் பொறுத்தவன் ஆறப்பொறுக்கவேண்டாவா? உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ட்டப்படியே பத்துநாட் சென்றபின் நான் சீதையைப் பார்ப்பேன்" என்றான்.

விபீஷணனும் திரிசடையும் ஒருபக்கத்தில் ஒரு மான்தோலில் இருந்தனர். அப்பொழுது அங்கதன் எழுந்துநின்று, இராமனுக்கு அஞ்சலிசெய்து சொல்லுவான்: "வேந்தர் வேந்தே, தங்கள்பால் ஒரு விண்ணப்பஞ்செய்ய விரும்புகின்றேன். இத் தருணத்தில் இலங்கைக்கோனும் கோமகளாரும் இங்கிருப்பது பாலிற் பழம்விழுந்ததுபோலாம். ஐய, இலங்கைக் கோமகளாரை என் மனைவியாக்கிக் கொள்ள மிக விரும்புகின்றேன். என் ஆசையைத் தேவரீரே பூர்த்திசெய்தல் வேண்டும்." இதனைக் கேட்ட இராமன், "'நற்றாமரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்' நீ திரிசடையை மணப்பது எனக்குச் சம்மதமே. ஆயினும் இதைக் குறித்துத் திரிசடையிடம் பேசினையோ?" என்றான். அங்கதன், "நான் அவரோடு வாய்திறந்து ஒன்றும் பேசினதில்லை; அவரும் என்னோடு பேசினரல்லர். ஆயினும் நேற்றுப் பட்டாபிஷேககாலத்திலே நாங்கள் ஒருவரொருவரைக் கண்டபோது எங்கள் கண்கள் பேசின.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில"

என்றான்.

இதைக்கேட்ட திரிசடை மந்தகாசத்தோடு நிலம் நோக்கினள். இராமன், 'விபீஷண, உன் கருத் தென்னை?" எனவினவ, இலங்கைவேந்தன், "திரிசடை தன்கருத்தை வாய்திறந்து சொல்லுக" என்ன, திரிசடை தந்தையைப்பார்த்துக் கூறுவாள்: "எந்தாய், நான் கைக்குழந்தையாயிருந்தபொழுது என் தாயார் இறந்தனர். எனக்கு அண்ணன் தம்பியர் ஒருவருமில்லை. நேற்றுவரையிலும் நான் உங்களையன்றி வேறோராடவனையும் நேசித்ததில்லை. நேற்றே கிட்கிந்தை இளங்கோவைப் பட்டாபிஷேக மண்டபத்திலே கண்டபொழுதே என் நெஞ்சு என்னையறியாமல் அவர்வசமாயிற்று. இனி வேறென் சொல்வேன்?" என்றாள். விபீஷணன், "மகளே, சக்கரவர்த்தியவர்கள் இப்பொழுது சொன்னது போல 'நற்றாமரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தது.' என் நல்லன்னமே, நீ உன் நற்றாமரைக்கயத்தைச் சேர்க. நாளைக்கே மணவினையை முடிப்போம்" என்றான். உடனே திரிசடை, "அம்மம்ம! அத்துணை விரைவு செய்யவேண்டா. எனக்கு விவாகம் நடக்கும் பொழுது சீதாபிராட்டியாரும் அங்கிருக்கவேண்டு மன்றோ? மேலும் அவர் மெய்தளர்வுற்றிருக்கும் இக்காலம் அவரை ஆதரிப்பது எனக்குக் கடனும் சிலாக்கியமுமாகும். சீதாபிராட்டியார் தம் பிராண நாயகரை மீட்டும் அடையும்நாளே நானும் கிட்கிந்தை இளங்கோவை மணக்கும் நாளாம்" என்றாள். இதைக்கேட்ட சபையார் யாவரும் திரிசடையின் விவேகம் போலவே குணமும் இருந்ததைக்கண்டு வியந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபொழுதும் என்னைவிட்டுப் பிரியாதிருக்க வேண்டும்" எனக் கேட்க, மண்டோதரியுமிசைந்து திரிசடையோடு கிட்கிந்தைக்குப் போனாள். இராமன் விபீஷணனை ஆசீர்வதித்து, "நான் எங்கு சென்றாலும் என் கண் உன்னையும் இலங்கையையும் நாடிநிற்கும்" என்றுசொல்லிப் புறப்பட்டான்.

26. தீவீழ்தலைத் தடுத்தல்

இலங்கையைவிட்டு நீங்கிப் பரிவாரத்தோடு கிட்கிந்தையை யடைந்த இராமன், அங்கே சுக்கிரிவன் அங்கதன் முதலியவரை நிறுத்திச் சீதையோடும் இலக்குமணனோடும் அயோத்திக்குப் புறப்பட்டான். இன்னும் சிலபகல் கிட்கிந்தையிலே தங்கும்படி சுக்கிரிவன்வேண்ட, இராமன், "நாங்கள் அயோத்தியை விட்டுப் புறப்பட்டுப் பதின்மூன்றுவருஷம் ஒன்பது மாதம் சென்றன. நாங்கள் செய்யவேண்டியது நெடும்பயணம். ஒருநாளைக்கு ஒருகாதத்தின்மேல் நடக்கச் சீதையாலியலாது. பதினன்கு வருஷம் முடிகிற தினத்திலே நான் அயோத்தியிலில்லாவிடின் பரதன் அன்றே உயிர்விடுதல் திண்ணம். ஆகையால் நாங்கள் போக எங்களுக்கு விடைகொடுக்க வேண்டும்" என்றான். அப்பொழுது திரிசடை சீதையை நோக்கி, "நீங்கள் இங்கு எழுபகலிருக்கக் கூடாதா?" என வேண்டினள். அப்பொழுது சுக்கிரிவன், "உங்களுக்குமுன்னே அனுமன் சென்று, பரதர் உயிர்துறவாமற் காக்கும்படி செய்வேன்" என்ன, சீதை திரிசடையின் வேண்டுகோளைத் தட்டமுடியாமல் மூவரும் அங்கு பின்னும்

எழுபகல் தங்கினர். அதன்மேல், திரிசடையும் அங்கதனும், இராமபட்டாபிஷேகங் காணத் தாமும் அயோத்திக்கு வருவதாகச் சொல்ல, அவரையுங் கூட்டிக்கொண்டு, மூவரும் கிட்கிந்தையை நீங்கித் தாம் முன்வந்தவழியே மீண்டனர். ஆங்காங்குள்ள துறவிகளைச்சந்தித்து அவ்வவ்விடங்களில் ஒவ்வொரு இராத்தங்கி மெல்லமெல்ல வடதிசை சென்றனர். ஈற்றில் கங்கையின் தென்கரையிலே குகன்வீட்டையடைந்தனர். அன்று பதினன்காம் வருஷம்முடிஈற்றயல்நாள். அன்றே பரதன் நந்திக்கிராமத்தை விட்டு, அயோத்திக்குவந்து மூவர் வரவையும் எதிர்பார்த்திருந்தான். அடுத்தநாள் பொழுதுவிடிந்து பதினைந்துநாழிகை சென்றும் இராமன் வந்திலன். 'தாசரதியார் சொற்றவறாதவர்; அவர் வாராததற்குக் காரணம் யாதோ? அவருக்குக் கானகத்தில் என்ன நேரிட்டதோ? ஒன்றுமறியேன்; இனி நான் உயிர் வாழ்ந்திருப்பதாற் பயன் என்? இறந்துபடுவதே தகுதி" எனப் பரதன்எண்ணி, தான் விழுந்துசாகத் தீவளர்க்குமாறு பணித்தான். நாழிகை இருபத்தைந்தாயிற்று. இராமன் இன்னும் வரவில்லை. பரதன் தீக்குதிப்பதைக் கேள்வியுற்று, அதைத் தடுக்கத் தாயர்மூவரும் வசிஷ்டமுனிவரும் மந்திரிபிரதானி முதலியோரும் வந்தனர். "பரதா, பொறு பொறு; ஆத்திரப்படாதே" என அவர் புத்திசொல்லியும், பரதன் கேளாது நான் தசரதசக்கரவர்த்திக்கு மகனல்லேனோ? இராமருக்குத் தம்பியல்லேனோ? நானும் என்சொற்படி நடப்பவன் என்பதை இன்று உலகம் அறிக" எனச்சொல்லித் தீயுள் விழும்படி அதனை மும்முறை வலஞ்செய்யத் தொடங்கினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பிரதட்சணம் முடியுமுன் அசரீரிபோல ஒரு பேரொலி கேட்டது:

"வந்தான் வந்தான்; பரதா—இரகுநாதன்
வந்தான் வந்தான்; பரதா."

"இஃதென்னை? இஃது யார்குரல்?" என்று யாவரும் சுற்றிப்பார்க்க, தென்றிசையினின்றும் ஒருவன், எட்டடி உயரமுடையான், பருத்த யாக்கையன், கறுத்த தோலினன், முடித்த குஞ்சியன், கை இரண்டும் சிரமேற்குவிய ஓடிவந்து, பரதன் காலில் விழுந்து, பின்னுமொருமுறை

"வந்தான் வந்தான்; பரதா—இரகுநாதன்
வந்தான் வந்தான்; பரதா"

என்றுகூறினன். "நீ யார்? எங்குநின்று வருகின்றனை?" என்று பரதன் அவனைக்கேட்க, "நான் இராமதூதன்; அனுமன் என்பெயர். தாசரதியாரும் சீதாபிராட்டியாரும், இலக்குமணரும் நேற்றுக் கங்கைக்குத்தென்கரையில் குகன்வீட்டுக்கு வந்தனர். இன்றுகாலை ஆற்றைக் கடந்திருப்பர். அவர் விரைவில் வரும்படி நீவிர் தேரொன்றனுப்பினால் பொழுதுபடுமுன் அவரை இங்கு காணலாம்" என்றான். உடனே இதைக்கேட்ட சுமந்திரன் தேரிலேறித் தென்திசைசென்று, பொழுதுபட இன்னும் அரைநாழிகையுள்ளது என்னுமளவில் மூவரையும் அழைத்துவந்து கோயில் புக்கனன்.

சீரா ரிலங்கை சிறக்க விபீடணுக்
கோரார் முடிசூட்டி; இங்கிதமாய்ப்—பாராள
"மாதோடு மன்னன் வரக்கண்ட மாகநுக்
கேதோ வுரைப்பன் எதிர்."

27. இராம பட்டாபிஷேகம்

திரும்பிவந்த மூவரையும் தாயர் தழுவினர்; வசிஷ்டர் ஆசீர்வதித்தனர். பரதசத்துருக்கினர் இராமனையும் சீதையையும் நமஸ்கரித்தனர். இலக்குமணன் பரதனை நமஸ்கரித்து, சத்துருக்கினனை ஆலிங்கனஞ் செய்தான். அங்கு நின்றவரெல்லாரையும் வசிஷ்டர் விளித்துப் பின்வருமாறு கூறுவார்: "கோசலநாட்டினர்காள்! நாளைக்காலை ஏழரை நாழிகைக்குமேல் ஸ்ரீராமசந்திரபூபதிக்கும் சீதாபிராட்டியாருக்கும் பட்டாபிஷேகமும் கிரீடதாரணமும் நடக்கும். தசரத சக்கரவர்த்தியார் ஆணையைச் சிரமேற்கொண்டு பதினான்குவருஷம் வற்கலைதரித்துச் சடைகள் தாங்கிக் கந்தமூலபலாதிகளையுண்டு தவஞ்செய்து திரும்பினார் இராமர். தந்தையார் தமக்களித்த இராச்சியத்தைப் பரதபூபதி தமையனாருக்கு அருப்பணஞ்செய்யத் தமையனாரும் சிந்தைமகிழ்ந்து அதனை அங்கிகரித்துளார். இப்பதினான்குவருஷமும் நமக்கு யாதொரு குறையும் நேரிடாதபடி பரதர் நம்மையாண்டார். அவருக்கு நாம் யாதொரு கைம்மாறும் செய்ய வியலாது. இச்சுபதினத்தில் நம் எல்லேம் மனத்திலும் மகிழ்ச்சி நிறைந்துவழிகையில் ஓரெண்ணம் சிறிது துயரத்தைத் தருகின்றது: நாளைத் தம் மகனார்க்கு முடிசூட்டுதலைக்காணத் தசரதர் இங்கில்லையே என்ற நினைவே. அத்துயரத்தை மாற்றுவது வேறோர் எண்ணம்: இராமசந்திரருக்கு இன்று வயது இருபத்தைந்தன்று, முப்பத்தொன்பது. இவர் கடந்த பதினான்குவருஷமும் பெற்ற அனுபவம் பெரிது; புகழ் நீண்டது. எல்லாம் அவன்செயல்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தநாள் ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் இருமொழி வல்லுநரும் கூடின சபையிலே

“ அரியணை யனுமன் றாங்க,
அங்கதன் உடைவா ளேந்த,
பரதன்வெண் குடைக விக்க,
இருவருங் கவரி வீச,
விரைசெறி குழலி யோங்க,
வெண்ணெ யூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி.”

இதன்பின் பலயாண்டு மன்னுயிரைத் தன்னுயிர்போல அறமுறை திறம்பாது ஓம்பினன் இராமன். இதனாலன்றோ தருமராச்சியம் எஃது யினும் ஆகுக, அதற்கு இராமராச்சியம் எனப் பெயர் வந்தது. இராமனுக்கும் சீதைக்கும் குசன் இலவன் என மக்களிருவர் பிறந்தனர். இராமன் பல்லாண்டு அரசியல் நடத்தி முதிர்வுற்றபோது, தன் மக்களில் மூத்தவனாகிய குசனுக்கு முடிசூட்டி, தான் சீதையோடு வானப்பிரஸ்தாச்சிரமம் புகுந்து, கடவுளடி மறவாது வனைய்ச் தவஞ்செய்து பரமபதமடைந்தனன்.

தமிழெம் செவிக்குள் அமிழ்தினு மினிக்க !
கம்பன் பெயரென் றும் அம்புவி நிலைக்க !
ஈழமும் பாதமும் வாழியர் வாழ்க !

உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும் : நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யான்எவன்,
தலைவன் ; அன்னவற் கேசரண் நாங்களே.

பின்னுரை

வால்மீகிராமாயணம் இராமன் மகாவிட்டுணுவின் அவதாரமென யாண்டுங் கூறுது, அவன் ஒரு பெருவீரனென்றே கூறும். கம்பராமாயணமோ இராவணாதி இராட்சதரை அழிக்கத் திருநெடுமால் இராமனாகவும் இலக்குமி சீதையாகவும் தேவர்கள் வானரவீரராகவும் அவதரித்தனர் என்று கூறும். இவ்விரண்டினுள் முன்னையதையே யான் கொண்டனன். வால்மீகியும் கம்பரும் இதில் வேறுபட்டனரேனும் இருவரும் இயற்கைக்கு மிஞ்சியவையையும் இயற்கைக்குமாறானவையையுங்கொண்டனர். இருவரும் தசரதன் அறுபதினாயிரம் வருடம் அரசாண்டானென்பர். யானோ அறுபதுவருடம் தசரதன் அரசாண்டான் என்றேன். இருவரும் இராவணனுக்குப் பத்துத்தலையும் இருபதுகையும் கொண்டனர். என் இராவணனுக்கோ தலையொன்றே, கைஇரண்டே. முதல் நூலும் வழிநூலும் இராட்சதரெனவும் குரங்குகளெனவும் கரடிகளெனவும் கழுகுகளெனவும் கொண்டவரைத் தமிழரெனவே யான் கொண்டனன். வாலி சுக்கிரிவன் அனுமன் என்னும் மூவரது தந்தையரையும் விண்ணவரெனக்கொள்ளாது மண்ணவரெனவே கொண்டேன். ஆகாயத்திற் செல்லும் விமானம் கிறிஸ்துவுக்குப்பின் இருபதாம் நூற்றாண்டிலுள்ளது, கண்கூடாயினும் இரவணனுக்குப் புட்பக விமானம் இருந்ததென்பதைத் தள்ளினேன்.

“அஞ்சிலே யொன்று பெற்றான் அஞ்சிலே யொன்றைத் தாவி
அஞ்சிலே யொன்றா றாக ஆரியற் காக வேகி
அஞ்சிலே யொன்று பெற்ற அணங்கைக்கண் டயலா ரூரில்
அஞ்சிலே யொன்று வைத்தான்”

என்னுங்கூற்றை முற்றுந்தள்ளினேன். இப்படியெல்லாம் யான் செய்ததற்குக் காரணமென்? இராமாயணம் முழுதும் பொய்யும் புளுகும் நிறைந்தகதை என மாணவர் நினையாதிருக்கும்பொருட்டே. பொய்க்கதைகளிருப்பதால் மெய்க் கதையையும் பொய்க்கதையென்றார் அறிஞர் சிலரும். அப்படியாயின் இந்துதேசத்தில் நடந்த மெய்ச்சரிதமோ இராமன் கதை என வினவுவார்க்கு விடைகூற யான் வல்லேனல்லேன். கதைகளிலுள்ள அசம்பாவிதங்களைப் போக்கி, மெய்க்கதை போலக் காட்டுவதே என் கருத்தன்றி இது மெய்க்கதைதானெனச் சாதிப்பது என் அறிவுக்குமேற்பட்டது. இந்நூல் பெரும்பாலும் என் ஞாபகத்திலிருந்து எழுதியது. இந்நூலிற் கூறப்படும் ஸ்திரீ புருஷர் சம்பாஷணையெல்லாம் முதல்நூல் வழிநூல்களில் இல்லை. சில எனது கற்பனையே. அங்கததிரிசடைவிவாகம் முன் எந்நூலிலுங் கூறப்பட்டிலது; என்னூலிற்தான் காணலாம். இது குற்றமேல், பெரியார் மன்னிக்க.

அரிச்சந்திரன்காலத்திலிருந்த வசிஷ்டவிசுவாமித்திரர், தசரத இராமர் காலத்திலிருந்தது எப்படி என்பார்க்கு, அரிச்சந்திரன் காலத்திலிருந்த வசிஷ்ட விசுவாமித்திரர் வேறு, தசரத இராமர் காலத்திலிருந்த வசிஷ்ட விசுவாமித்திரர் வேறு; பெயரொற்றுமையினாலே பேதந்தெரியாது கதைகள் மயங்கின என்க

நூறுவருஷத்துக்குமுன், 1838௵ ஜனுவரி௴ 13௳ பிறந்த என்குரு **உவில்லியம் மில்லர் தேசிகர்** ஞாபகார்த்தமாக இந்நூலை இன்று பிரசுரிக்கிறேன்.

1938௵ ஜனுவரி௴ 13௳

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMIL

MORE TAMIL AND BETTER TAMIL

IS THE NEED OF TODAY

AND

Kingsbury's Tamil Classics

WILL HELP YOU LEARN
A SIMPLE AND CHASTE STYLE
BESIDES AN INTERESTING
INTRODUCTION TO

The Best Tamil Literature

— *READ* —

		Rs. Cts.
"The Story of Rama" (இராமன் கதை)	...	1—00
"The Pandavas" (பாண்டவர்கதை)	...	1—00
"Candrahasa" (சந்திரகாசம்)	... .	0—65
"Life of Jesus" (ஏசுவரலாறு)	... .	1—50
"Ahaporul Kural" (அகப்பொருட்குறள்)	....	0—25
"Kadavul Valthuppa" (கடவுள் வாழ்த்துப் பா)		0—35
"Manonmani" (மனோன்மணீ நாடகம்)	...	0—65

Available From - -

The Lankabhimani Press
Chavakachcheri
and
ALL BOOK-SELLERS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org